கிறான்" என இறைவன் மூஸா (அலை) அவர்களுக்கு பதில் அளித்தான்.

அன்பர்களே அவன் எப்படிப்பட்ட கொடியவன்! அவன் செய்த தர்மசெயலின் தன்மை தர்மத் தலைவனான (தர்மத்தின் நாயகனான) அல்லாஹுத்தஆலாவையே அவன்மீது நோக்கச் செய்துவிட்டது என்றால், அந்த தர்மத்தின் சக்திதான் என்னே! ஒருகணம் சிந்திப்பீர்! மறுகணம் செயல்படுவீர்!

இதே சமயத்தில் இங்கே குறிப்பாக ஒரு விஷயத்தை குறிப்பிடவிரும்புகிறேன். அதாவது பிர்ஔன் மேற்கண்ட நற்செயல்கள் செய்ததால் இறைவனின் அன்பைப் பெற்றுவிட முடியாது. எப்போது அவன் நபியை மறுத்து தன்னை இறைவன் என்று கூறி இறுமாப்புக் கொண்டானோ, அப்போதே அவன் இறைவனால் சபிக்கப்பட்டவனாகவும், நரகத்திற்குரியவனாகவும் ஆகிவிட்டான். என்றாலும் தர்மத்தின் தன்மையானது இறைவனையும் கவர்ந்து விடுகிறது என்பதால் அவன் அழிவை விட்டும் சிறிது தாமதப்படுத்தப்பட்டான். ஈமான் கொள்ளாதோர் செய்கின்ற எந்த நற்செயலுக்கும் இறைவனிடத்தில் முக்கியத்துவம் கிடையாது என்பதை நாம் இங்கே மறந்து விடக்கூடாது.

இவ்வனைத்திலிருந்தும் அறத்தின் அவசியத்தை உணர்ந்து கொண்டீர்கள்.

அடுத்து தர்மத்தின் ஆற்றலையும் அதன் சிறப்பையும் இங்கே கேளுங்கள்.

இஸ்லாத்தின் மற்றெல்லாக் கடமைகளையும் நமக்காகச் செய்யச் சொல்லிவிட்டு தர்மத்தை மட்டும் தனக்காகச் செய்யச் சொல்கிறான் இறைவன். அந்த தர்மத்தையும் யாருக்கெல்லாம் செய்யவேண்டுமென்றும்



மூஸா (அலை) அவர்கள் மூலம் எடுத்து இயம்புகிறான் இறைவன்.

மூஸா (அலை) அவர்கள் வாழ்ந்த் காலம் ஒரு நாள் அன்று...இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி "ஓ மூஸாவே! நீர் எனக்காக என்னென்ன நற்கருமங்கள் புரிந்திருக்கின்றீர்?" என வினவினான். அப்போது மூஸா (அலை) அவர்கள் "இறைவா! நான் உனக்காக நோன்பு நோற்றேன், தொழுதேன். சதாவும் உன்னையே தஸ்பீஹு செய்து தியானிக்கிறேன். நீ எனக்கு அளித்த கட்டளைகளை நிறைவேற்றிவருகிறேன்." எனப் பதில் கூறினார்கள்.

அதனைக் கேட்டு இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி "ஓ மூஸாவே! நீ ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை மின்னலைப்போன்று அதிவிரைவில் கடந்து செல்வதற்காக தொழுதீர். நரகைவிட்டும் உம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நோன்பு நோற்றீர், உமக்கு சொர்க்கத்தில் பதவிகள் உயர்த்தப்படுவதற்காக வேண்டி தஸ்பீஹுகள் செய்து தியானித்தீர். உமது கடமைகள் நீங்கவேண்டுமென்பதற்காக நாம் உமக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றி வந்தீர். இவையனைத்தும் உமக்காக செய்து கொண்டவைகளே" என்றாலும் எனக்காக ஏதேனும் நற்செயல்கள் செய்தீரா?! என்று கேட்டான்.

அப்போது மூஸா (அலை) அவர்கள் "இறைவா, அப்படிப்பட்ட சிறந்த செயல்கள் யாவை? அவைகளை எனக்கு அறிவித்து அருள்வாயாக!" எனக்கேட்டு மன்றாடி அழுதார்கள்.

இறைவனும் அந்த நற்செயல்களை அறிவித்து அவைகள் எமக்கு மிகவும் திருப்தியளிப்பவை என அறிவித்தான்.

இதோ இறைவன் அந்த நற்செயல்களை கூறுவதை கவனியுங்கள்!

1. ஓ...மூஸாவே! பசித்தோருக்கு உணவளித்து பசி ஆற்றுவீராக!

2. ஓ...மூஸாவே! தாகித்தோருக்கு தண்ணீர் அளித்து தாகத்தை தணிப்பீராக!

3. ஓ...மூஸாவே! ஒவ்வொரு பேச்சையும் செயலையும் முகஸ்துதியை விட்டு பாதுகாத்துக்கொள்வீராக!

4. ஓ...மூஸாவே! அபயம் தேடுவோருக்கு அபயம் அளிப்பீராக!

5. ஓ...மூஸாவே! அநீதத்திற்குள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பீராக!

6. ஓ...மூஸாவே! அறிஞர்களுக்கு (ஆலிம் உலமாக்களுக்கு) சங்கை செய்வீராக!

இவ்விதம் இறைவன் மூஸா (அலை) அவர்களுக்கு இயம்பினான். இறைவனின் இனிய உரையை படித்த நண்பர்களே! அடுத்து நாயகம் (ஸல்) அவர்களின் நல்லுரை ஒன்றையும் பார்ப்போம்!

யாரும் உங்களிடம் உதவி தேடினால் உதவி செய்யுங்கள். இன்றேல் பணிவாகவும், அன்பாகவும், பேசியாகிலும் அனுப்பிவிடுங்கள். அதுவும் சிறந்த தர்ம செயல்களில் ஒன்றாகும் என நபி (ஸல்) நவின்றார்கள்.

இரு மனிதர்கள், இருவரில் ஒருவர் பணக்காரர் மற்றொருவர் ஏழை. இந்த ஏழை மனிதரிடத்தில் யாரும் உதவி தேடி வந்தால், அவர்களை அந்தப் பணக்காரரின் வீட்டிற்குச் செல்லுமாறு கூறி அனுப்பிவிடுவார். பணக்கார மனிதன் தன்னிடம் உதவி தேடி வந்தவர்களுக்கு தன்னால் இயன்றதைக் கொடுத்து அனுப்பி வடுவது வழக்கம்.

இந்நிலையில் அவ்விருவரும் கொஞ்ச காலத்திற்குப் பின் அடுத்தடுத்து மரணித்து விடுகிறார்கள். அவ்விருவரும் அடுத்தடுத்து சேர்ந்தார்போல் அடக்கம் செய்யப்பட்டார்கள். அப்போது ஒருசமயம் நாயகம் (ஸல்) அவ்விருவரின் கபுர்களுக்கிடையில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் தர்மம் கொடுத்தவரின் கபுரிலிருந்து வேதனையால் முணங்கும் சப்தம் கேட்டது. இதைக்கேட்டு நாயகம் (ஸல்) அவர்கள் அப்படியே திகைத்து நின்றவர்களாக, "இறைவா! இதென்ன விநோதம், இந்தக் கப்ரிலிருந்து முனகல் சப்தம் கேட்கிறதே! என்று இறைவனிடம் கேட்டார்கள், அதற்கு இறைவன் ஓ...நபியே! இக்கபுரில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர் பெரிய தனவந்தர். அவரிடத்தில் யாரும் உதவி தேடி வந்தால் அவர் மன எரிச்சலோடு ஏதேனும் கொடுத்து வந்தார். அப்படி அவர் நிறைவற்ற உணர்வோடு தாமம் செய்ததால் அவரின் மண்ணறை வேதனைக்குரியதாயிற்று. ஆனால் அதன் அருகாமையில் உள்ளமண்ணறையாவது ஒரு பரம ஏழையுடைய மணணறையாகும். இவ்வேழையிடம் யாரும் உதவி தேடி வந்தால், தன்னால் உதவி செய்ய முடியவில்லையே என்று ஏங்குவார். ஆயினும் தன்னிடம் வந்தவர்களிடம் பக்கத்திலுள்ள பணக்கார வீட்டு பிரபுவிடம் செல்லுமாறு கூறி வந்தார். தன்னால் இயலாவிடினும் பணக்கார பிரபு எப்படியும் ஏதாகிலும் கொடுப்பார் என்ற நம்பிக்கை உணர்வு அவரிடம் இருந்தது. தன்னால் இயன்ற தர்மச் செயலை நிறைவான நெஞ்சோடு செய்து வந்தார். ஆகவே அவரின் அடக்க அறையை அமைதிப் படுத்தினோம் என இறைவன் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பதிலுரைத்தான்.

அன்பர்களே! நம்மால் கொஞ்சமான அளவே தர்மம் செய்ய முடிந்தாலும் அதனை நெஞ்ச நிறைவோடு செய்யவேண்டும், நாம் எவ்வளவு பொருளைத் தர்மம் செய்தோம் என்பதைவிட என்ன உணர்வோடு தர்மம்

செய்தோம் என்பதையே ஏக இறைவன் உண்ணிப் பார்க்கிறான். அந்த அரிய படிப்பினையை மேற்கண்ட நிகழ்ச்சி எவ்வளவு அழகாக அறிவுறுத்திக் கொண்டிருக் கிறது பார்த்தீர்களா!

அதோ அங்கே...யர்மூக் யுத்தகளம்; வாளோடு வாள் மோதுகிறது. தோளோடு தோள் மோதுகிறது. அம்புகள் அந்தரத்திலே அசுர வேகத்தில் பாய்ந்து ஆச்சரியமான செயலைச் செய்த வண்ணமிருக்கிறது காபிர்களில் கூட்டத்திலே இருந்து கதறல் சப்தம் காதைத் துளைக் கிறது. முஸ்லிம்களின் கூட்டத்திலிருந்து கிளம்புகின்ற அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் முழக்கம் எதிரிகளின் நெஞ்சங்களை உலுக்கிவிட்டு, விண்ணைப் பிளந்து கொண்டு அல்லாஹ்வின் அர்ஷைப் போய்த் தட்டுகிறது. எதிரிகள் வீழ்ச்சியாகி கனல் தெறிவிக்க விழுந்தடித்து ஓடுகிறார்கள். "சுப்ஹானல்லாஹ்" இந்நிலையிலே அப்போர்களத்திலே நடந்த ஓர் தியாக நிகழ்ச்சியை அபூஜஹ்மு இப்னு ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள் இதோ.....

(அபூஜஹ்மு இப்னு ஹுபைதா (ரலி) அவர்கள் எனது சிறிய தந்தையின் மகனும் அந்த யுத்தத்திலே கலந்திருந்தார், தாகம் அவரை வாட்டியும் போரில் அவரின் வேகம் குறையவில்லை. அவருக்காக ஒரு தோல் பையில் தண்ணீரை நிரப்பிக்கொண்டு போர்க்களத்தின் மத்தியிலே அவரைத் தேடி அலைந்தேன். அப்போது அங்கே ஓரிடத்தில் அவர் குற்றுயிரும் குலையுயிருமாய்-வெட்டப்பட்ட நிலையில் மண்ணிலே மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தார். தாகத்தால் அவரின் உதடுகள் காய்ந்து, நாக்கு வரண்டு பரிதாபமான நிலையில் கிடந்தார். அவரின் உடலிலிருந்து குருதி யானது கொப்பளித்து ஓடிக்கொண்டிருந்தது. பகலவனின் கதிர்வீச்சால் காய்ந்து வரண்டுபோன



அந்தப் பாலை மண் அந்தப் புனிதரின் உடலிலிருந்து உதிர்ந்த செந்நீரை குடித்துத் தாகத்தை தணித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த வெந்தமண்ணில் வீழ்ந்து கிடந்த அந்த மனிதர் மண்ணின் தாகத்தைத் தணித்து விட்டு, தனது தாகத்தைத் தணிக்க தண்ணீரின்றித் தவித் தார்.

அது கண்டு நான் படபடப்போடு அவரின் பககத்தில் ஓடோடிச் சென்று தோல் பையைத் திறந்து தண்ணீரை அவரின் வாயருகே விரைவாகக் கொண்டு சென்றேன். அவ்வேளையில் காய்ந்து, வரண்டு ஒட்டி உலந்திருந்த தனது உதடுகளை கஷ்டப்பட்டுத் திறந்தார். அக்கணத்தில் அவருக்குப் பக்கத்தில் வெட்டுக் காயங்களுடன் மரணத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவித்தவேறொருவர் தாங்க முடியாத தாகத்தால் தண்ணீர் தண்ணீரெனக் கதறிக் கொண்டிருந்தார்.

அதைக் கேட்ட என் சிறிய தந்தையின் மகனான அந்தத் தியாக புருஷர், சட்டென்று தன் வாயை மூடிக் கொண்டு தன் பக்கத்தில் தண்ணீரைக் கேட்டுக் கூவிய அவரை சமிக்கை காட்டி அங்கே செல்லுமாறு செப்பினார்! உடனே நான் அவரிடம் ஓடினேன். அவர் ஹிஷாம் இப்னு அபுல் ஆஸ் (ரலி) அவர்கள் என்பதையும் அறிந்து கொண்டேன்: அவருக்குத் தண்ணீர் தர யத்தனித்தபோது அவரையடுத்து குற்றுயிராய்க் கிடந்த வேறொருவரும் தண்ணீர் என்று குரல் கொடுத்தார். அதனைச் செவியுற்ற ஹிஷாம் (ரலி) அவர்கள் அவரிடம் தண்ணீர் கொண்டு செல்லும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். உடனே நான் அவரிடம் கொண்டு சென்றேன். ஆனால் அந்தோ பரிதாபம். அவரிடம் கொண்டு செல்லும் வேளையிலேயே அவர் மரண-மடைந்துவிட்டார். உடனே நான் ஹிஷாம் (ரலி) அவர்களுக்காகிலும் புகட்டலாமென ஓடோடி வந்தேன்.

அங்கே...ஹிஷாம் (ரலி) அவர்களும் மரணமாகிக் கிடந்தார்கள். இறுதியாக எனது சிறிய தந்தையின் மகனிடமாவது கொண்டு செல்லலாமே என்ற ஏக்கத்தோடு எட்டி வந்து பார்க்கையில் அவரும் அகால மரணத்தில் ஆழ்ந்துகிடந்தார்.

இப்படிப்பட்ட தியாகிகளை உருவாக்கித் தந்தது தான் இஸ்லாம். அப்படிப்பட்ட இஸ்லாத்தில் பிறந்த நாம் எந்த திசையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறோம்? பெருமானார் (ஸல்) அவர்களுடைய செயல் முறைகள் நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றனவா? என்பதை யெல்லாம் சிந்திப்போமாக! மேற்கண்ட ஸஹாபாக்களின் தியாகம் எப்பேர்ப்பட்டது! ஆஹா!...! அவ்வுத் தமர்களின் உடலை விட்டு உதிரத் துளிகள் பாய்ந்து சென்று கொண்டிருக்கும் நேரத்திலும் கூட மௌனத்தோடு மயிரிழையில் போராடிக் கொண்டிருக்கும் நேரத்திலும்கூட மேனியின் புண்களில் எல்லாம் பாலை மண் புகுந்து சுட்டு பொசுக்கி சுருக்கியும் கூட தன்னலத்தைவிட பிறர் நலத்தை பெரிதாக மதித்தார்கள் அவ்வுத்தமர்கள். அம்மரணத் தருணத்திலும் தங்கள் உபகார சிந்தையை ஒருவருக்கொருவர் தர்மம் செய்து கொள்ள வேண்டுமென்ற சகோதரத்துவத்தின் தத்துவத்தை இத் தாரணிக்கு ஈந்து காட்டினார்கள். அச்சன்மார்க்க தருமசீலர்களை சரித்திரம் என்றென்றும் மறக்காது. மறக்கவும் முடியாது.

தன் இஸ்லாமிய சகோதரனுக்காக தன் உயிரையே விட்ட அவ்வுத்தமர்களை கண்டெடுத்த அதே இஸ்லாத்தில்தான் இன்று உதைபட்டு உறவில் உடைபட்டு சதையை பிய்த்துக் கொண்டு சண்டை போடும் இஸ்லாமிய சகோதரர்களைக் காண்கிறோம். சொந்த சகோதரன் நொந்து நொடித்தாலும், பந்த பாசங்கள் அறுந்து மடிந்தாலும், சரிந்து ஒழிந்தாலும், வந்த சொத்திலேயிருந்து பைசாகூட தர்மம் செய்ய மலைக்கும் மாபாவிகளைப் பார்க்கிறோம். அவர்கள் அகத்திலே



என்றுதான் அரக்கம் மரிக்குமோ; இரக்கம் பிறக்குமோ! அல்லாஹ்வுக்கே வெளிச்சம்.

மக்களில் சிலரை வறியோராகவும், சிலரை பணக்காரர்களாகவும் இறைவன் ஆக்கியுள்ளான். உலகம் ஒழுங்காக இயங்கவேண்டும் என்பதற்காக வேண்டியே அது இறைவனால் நியமிக்கப்பட்ட நியதியாகும், அதே சமயத்தில் வறியோருக்கு உதவுவது உரியோர்மீது கடமையாகும். ஆனாலும் இத்தனைக்கும் மேலாக ஸஹாபாக்களுடைய வாழ்க்கை முறை அமைந்திருந்தது.

தனக்குரிய உணவைக்கூட தான் உண்ணாமல் மற்றவர் உடலுக்கு ஈந்துவிட்டு உள்ளத்தால் நிறைவு கொண்ட உத்தம ஹைறாபாக்களின் சரித்திரங்களைக் காணும்போது நம் உள்ளமெல்லாம் நெகிழ்கிறது. அதற்கு சான்றாக கீழே ஒரு உருக்கமான சத்திய ஸஹாபாக்களின் சரிதைகளில் ஒன்றை சமர்ப்பிக்கிறேன்.

அன்றொரு நாள் வறுமையால் குழந்தைகளுடன் சிரமப்பட்டுக் கொண்டிருந்த ஸஹாபி (ரலி) ஒருவருக்கு ஒருவர் ஒரு ஆட்டுத் தலையை கொண்டுவந்து சமைத்து சாப்பிடக் கொடுத்தார். அதை வாங்கிய ஸஹாபி (ரலி) அவர்கள் வேறொரு ஸஹாபி வறுமையால் பிள்ளை குட்டிகளுடன் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்று எண்ணி இரண்டாமவருக்கு கொடுத்து அனுப்பினார். அதைப் பெற்றுக்கொண்ட அந்த இரண்டாம் ஸஹாபியும் மூன்றாவதாக இன்ன ஸஹாபி அதிகமான பிள்ளை குட்டிகளுடன் சிரமபட்டுக் கொண்டிருக்கிறார் என்று எண்ணி மூன்றாம் ஸஹாபி (ரலி) அவர்களுக்கு கொடுத்தனுப்பினார். இவ்விதமே அத்தலை ஏழுபேருக்கு கொடுக்கப்பட்டு இறுதியாக முதலில் கொடுத்த அந்த ஸஹாபிக்கே திரும்ப வந்து சேர்ந்தது என்று வரலாறுகளில் காணுகிறோம்.

அந்த உத்தமர்கள் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட இரக்க சித்தம் உள்ளவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை பார்த்தீர்களா? அடுத்தவருக்கு கொடுத்து மகிழ்வதிலே அவர்கள் இன்பம் கண்டார்கள். அன்பர்

களே! நம்மிடம் உள்ளதை அடுத்தவருக்கு கொடுப்பதிலே நாம் அடைகிறோமே மகிழ்ச்சி...அதுதான் உண்மையான மகிழ்ச்சி, உயர்வான மகிழ்ச்சி.

நம் உடல் நிறையாவிட்டாலும் நம் உள்ளம் நிறைந்ததே அதுபோதும். எத்தனைபேர் இன்று உடல் நிறைந்தும் உள்ளம் நிறையாமல் தவியாய்த் தவிக்கிறார்கள் தெரியுமா? அமைதியற்ற குரங்கைப்போல தாவித் திரியும் நெஞ்சுக்கு ஆறுதல் பெற முடியாமல் துடியாய் துடிக்கிறார்கள் தெரியுமா? உடலுக்கு உணவில்லாமல் உயிர்விடுவோர்சிலர்; உள்ளத்திற்கு நிறைவில்லாமல் உயிர் விடுவோர் பலர்; பசிக்குச் சோறு இன்றி பசும் புல்லிலே படத்துப்புரண்டு பதைப்பவர் பலர்; பழரசம் பக்கத்தில் இருந்தும் பஞ்சு மெத்தையில் படுத்திருந்தும் நெஞ்சத்திலே நிம்மதியின்றி தூக்க மாத்திரையை விழுங்கி விட்டு தூங்காமல் தூங்கி உயிரை விடுவோர் பலர்.

அல்லாஹ்வின் அடியானே! உறவிழந்து உடலிலே வலுவிழந்து கையிழந்து காலிழந்து கண்ணிலே பார்வையிழந்து பரிதவிக்கும் பஞ்சைகளும் நம் போன்ற படைப்பினங்கள் தான் என்பதை மறந்து விடாதீர். நமது மனிதஜாதிதான் என்பதை மறந்து விடாதீர். அவனுக்கு நாம் செய்யும் உதவி, அல்லாஹ் நமக்குத் தந்த செல்வத்துக்காக நாம் செய்யும் நன்றியே தவிர வேறு அல்ல.

பாக்தாத் நகர வீதியிலே கொட்டும் மழையிலே நனைந்து வெடவெடுத்து நடுங்கிக் கொண்டிருந்த ஒரு பூனையைப் பார்த்துவிட்டு பதறிய உள்ளத்தோடு தனது விலையுயர்ந்த போர்வையை அதற்கு போர்த்திவிட்டுப் போனான் அந்நகரப் பாதுஷா. எப்படிப்பட்ட உயர்ந்த இடத்திலே எப்பேற்பட்ட விஞ்சு நெஞ்சம் பார்த்தீர் களா! ஐயறிவு உயிருக்கே அப்படி இரக்கம் காட்டினாரென்றால் ஆறறிவு பெற்ற மனித உயிருக்கு நாம் எப்படியெல்லாம் இரக்கம் காட்டவேண்டும் என்பதை எண்ணிப் பார்ப்போமாக! என் அருமை சமுதாயமே!



ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஸஹாபி (ரலி) அவர்கள் நாயகமே எந்த சமயத்தில் கொடுக்கப்படுகின்ற தர்மம் சிறந்தது? எனக்கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள் நீர் எந்தச் சமயத்தில் உடல் வலிவும் பணத்தின் பேரில் பற்றும், சீமான் ஆவதற்காக பொருள் சேர்ப்பதில் பெருத்த முயற்சியும், ஏழ்மையைக் கண்டு அஞ்சுதலும் கொண்டு இருக்கிறீரோ அந்தருணத்தில் செய்யும் தர்மமே சிறப்புடையது. அதைவிட்டு உயிர் பிரியும் தருணத்தில் கொடுக்கப்படும் தர்மத்திற்கு மிகுந்த சிறப்பில்லை என்றார்கள்.

-அல்ஹதீஸ்

தர்மம் செய்யுங்கள் ஏனெனில் தண்ணீர் நெருப்பை அணைத்துவிடுவதுபோன்று தர்மம் பாவங்களை அழித்துவிடும். தர்மத்தைப் பெற்றவன். தர்மம் கொடுத்தவன் பேரில் சந்தோஷப்படுவதைப்போல இறைவனும் தர்மம் கொடுத்தவன் பேரில் சந்தோஷப்படுகிறான்.

சோப்பு எவ்வாறு துணிகளின் அழுக்கை நீக்கிவிடுகிறதோ அதுபோல தர்மமானது பாவங்களை அகற்றி உள்ளத்தை தெளிவடையச் செய்கிறது.

(மஷாலிகுல் அவ்வலீன்

ஹலாலான பொருள்களிலிருந்து கொடுக்கப்படும் தர்மத்தை இறைவன் வலது கையால் வாங்குகிறான். அது ஒரு பேரீத்தம் பழமாக இருந்தாலும் சரி, ஒரு ஒட்டகக் குட்டியை வளர்த்தால் அது எப்படி பெரிதாக வளர்ந்து விடுகிறதோ அதுபோல இறைவனுக்காக கொடுக்கப்படும் தர்மம் ஒரு பெரும் மலையைவிட பெரிதாக பெருத்து விடுகிறது.

-அல்ஹதீஸ்

நபி சுலைமான் (அலை) அவர்கள் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நோக்குவோம்.

நபி அவர்களின் காலத்தில் ஒரு மனிதன் தனது வீட்டுப்புறத்திலுள்ள மரத்தில் ஒரு பறவை கூடுகட்டி

யிருப்பதைக் கண்டார். அம்மனிதர் அம்மரத்தின் மேலேறி அக்கூட்டில் இருந்த முட்டைகளை தினந்தோறும் எடுத்துவந்தார். வழமையாக தம்முட்டைகள் பறிபோவதைக் கண்ட அப்பறவை தமக்கு நியாயம் வழங்கும்படி சுலைமான் (அலை) அவர்களிடம் முறையிட்டது,

சுலைமான் (அலை) அவர்கள் அம்மனிதரை அழைத்து அம்முட்டைகளை எடுக்க வேண்டாமென்று பலமுறை எச்சரித்தார்கள். என்றாலும் அம்மனிதர் தன் அடாத செயலை விடாது செய்துவந்தார்.

அப்பறவை மறுபடியும் தமக்கு நியாயம் வழங்குமாறு சுலைமான் (அலை) அவர்களிடம் முறையிட்டது. இதைக்கேட்டு சுலைமான் (அலை) உள்ளம் நெகிழ்ந்தது. அது சமயம் சுலைமான் (அலை) அவர்கள் இரு ஜின்களை அழைத்து "நீங்கள் இருவரும் அம்மரத்தின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள். முட்டைகளை எடுப்பதற்காக அம்மனிதன் இனியும் மரத்தில் ஏறுவானேயானால், அக்கணமே அவனது இருகால்களையும் கவட்டையாகக் கிழித்து எறிந்துவிடுங்கள்" என்று ஆணையிட்டார்கள். அந்த இரு ஜின்களும் அவ்விதமே அம்மரத்தின் அருகில் போய் அமர்ந்திருந்தன.

அம்மனிதர் வழக்கம்போல முட்டைகளை எடுப்பதற்காக வரும் வழியில், பக்கீர் ஒருவர் தனக்கு பெரிதும் பசியாய் இருக்கிறது என்றும் ஏதாகிலும் உணவு தருமாறு அவரிடம் மன்றாடினார். உடனே வீட்டிற்குச் சென்று அம்மனிதர் ஒரு ரொட்டி துண்டை எடுத்து வந்து அந்தபக்கீரிடம் கொடுத்தார், பின் வழக்கம் போல முட்டைகளை எடுக்க மரத்தின்மேல் ஏறத் தொடங்கினார். அப்போது எந்தவித அசம்பாவிதமும் அவருக்கு ஏற்படவில்லை. முன்போலவே முட்டைகளை எடுத்து வந்து விட்டார். இதைக்கண்டு கலங்கிய அப்பறவை மீண்டும் சுலை மான் (அலை), அவர்களிடம் சென்று முறையிட்டது.

அதைக்கேட்ட சுலைமான் (அலை) அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. உடனே தான் ஆணையிட்டு



அனுப்பிய இரு ஜின்களையும் அழைத்து "ஏன் நீங்கள் என் கட்டளையை நிறைவேற்றவில்லை?" என்று கேட்டார்கள். உடனே அந்த இருஜின்களும் "நபியவர்களே! தங்கள் ஆணைப்படியே நாங்கள் மரத்தின் அருகில் அமர்ந்திருந்த நேரம் அம்மனிதன் மரத்தில் ஏறுவதற்கு முன் தற்செயலாக எதிர்ப்பட்ட பசியாளி ஒருவருக்கு ரொட்டித் துண்டொன்றை தர்மம் செய்துவிட்டு வந்தார். அதுசமயம் அவன் மரத்தில் ஏறத் தொடங்கியதும் தங்கள் ஆணைப்படியே அவனது கால்களைப் பிடித்திழுக்க முயன்றபோது அல்லாஹுத்த ஆலாவின் உத்தரவுப்படி இரு மலக்குகள் வந்து எங்களின் பிரடியை பிடித்து மஷ்ரிக்கில் (கிழக்கு திசையில்) ஒருவரையும் மஃரிபில் (மேற்குத் திசையில்) ஒருவரையும் இழுத்து எறிந்துவிட்டார்கள். அவர் செய்த தர்மத்தால் அவருக்கு இறைவனின் பாதுகாவல் கிடைத்து விட்டது" என பதில் கூறின.

இதயம் உள்ளவர்களே! பார்த்தீர்களா? தர்மத்தின் சக்தியை! உண்மையான இரக்க உணர்வோடு தர்மம் செய்வோமேயானால் நலம் செய்யும் அந்த தர்மம் தலை காக்கும் என்பதை இனியாவது புரிந்து கொள்வோமாக.

அன்பர்களே! அம்மனிதர் அப்பறவையின் முட்டையை எடுத்தது குற்றமான செயலே. அடுத்தவர் பொருளை திருடுவது பெருங்குற்றம் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. என்றாலும் அம்மனிதர் தாம் செய்யும் தவறை உணர்ந்தாரில்லை. தன் நெஞ்சில் இருந்த இரக்க உணர்வால் தனக்கு எதிர்ப்பட்ட பக்கீருக்கு தர்மம் செய்ய நேர்ந்தது. அப்படியிருந்தும் அம்மனிதருக்கு அவர் செய்த சிறிய தர்மம் எத்தகைய மாபெரும் பாதுகாப்பு அளித்துள்ளது பார்த்தீர்களா! தர்மத்தின் தத்துவத்தை உணர்வான் வேண்டியே இச்சம்பவம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொருவரும் தவறு செய்து கொண்டே தர்மம் செய்து விட்டால் சரியாகிவிடும் என்று கருதிவிடவேண்டாம்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இரகசியமாக தர்மம் செய்வதானது இறைவனின் கோபத்தை அமர்த்திவிடும். இன பந்துகளுக்கு உபயம் அளிப்பதானது, வாழ்நாளை அதிகப்படுத்தும். இறைவனின் விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதானது தீமைகளையும், பிணிகளையும் அகற்றிவிடும். "லாயிலாஹ இல்லல்லாஹ" என்ற கலிமாவை திக்ரு செய்வதாகிறது எழுபது வகையான பிணிகளைப் போக்கிவிடும்.

-அல்ஹதீஸ்

நீங்கள் கொடையாளிகளின் பாவங்களைக் கவனிக்காதீர்கள். ஏனெனில் எப்போதாவது அவர்கள் கால்கள் சறுக்கி விடுமேயானால் அவர்களின் கைகளை இறைவன் பிடித்துக்கொள்வான். அக்கொடையாளி இறைவனிடம் உதவி கேட்டால் இறைவனின் உதவி அவனுக்கு உடன் கிடைத்துவிடுகிறது. தர்மத்தின் தன்மை மாபெரும் தன்மையாகும். தர்மம் செய்வதை யாருக்கு இறைவன் நஸீபாக்கினானோ அவர் அதன் மேன்மையை அறிவார். மேலும் இறைவன் அவருக்கு இம்மை, மறுமை இரண்டிலும் நன்மைகளை அளிக்கின்றான்.

அறிஞர் அப்துற்றவூபுல் முனாபி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "இறைவன் ஈமானைப் படைத்து அதன்பேரில் தர்மம் என்ற அருள்கொண்டு நோக்கினான். குப்ரைப் படைத்து அதன் பேரில் கஞ்சத்தனம் என்ற இருள்கொண்டு நோக்கினான். எனவே தர்மம் என்பது ஈமானின் அடையாளமாகவும், கஞ்சத்தனம் என்பது குப்ரின் அடையாளமாகவும் இருக்கிறது" எனக் குறிப்பிட்டார்கள்.

இதற்குச் சான்றாக ஒரு ஹதீஸைத் தருகிறேன். இதோ...உலுத்தன் (கஞ்சன்) வணக்கவாளியாக இருந்தாலும் இறைவனின் விரோதியாவான் என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

இறைவன் திருமறையில் ஒருவர் ஹலாலான முறையில் சம்பாத்தியம் செய்து அவைகளிலிருந்து தனக்கு பிரியமான பொருள்களை தர்மம் செய்வாரேயானால்



அவருக்கு அல்லாஹ்விடம் மாபெரும் அந்தஸ்து கிடைக்கும். உங்களுக்குப் பிரியமான பொருளிலிருந்து நீங்கள் இறைவன் பாதையில் தர்மம் செய்யாதவரை இறைவனின் அன்பைப் பெறமுடியாது. -அல்குர்ஆன்

தயாள குணம் படைத்த வாசக தனவான்களே! தர்மத்தின் தன்மையையும் தன்னிடத்தில் அதற்குரிய பெருமையையும், இறைவன் திருமறையில் மிக அழகாக கூறியுள்ளதைக் கவனித்தீர்களா? அவன் நமக்கு மட்டும் தர்மம் செய்யத் தூண்டவில்லை. அவனும் அதைச் செய்கிறான். நாம் கேளாத நிலையிலும் நமக்கு கார்முகில் மூலம் மழையைத் தந்தான். கதிரவன் மூலம் ஒளியைத் தந்தான் உழைத்து உயர்ந்திட பகலையும், உழைத்த களைப்புத்தீர, உல்லாசமாய் உறங்க இரவையும் தந்தான். கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளிக்கும் காட்சிகளைக் காலமெல்லாம் காண வைத்தான். அறிவால் வளம் கொழிக்க தந்தையைத் தந்தான், வாழ்விலும் தாழ்விலும் துணைநிற்க மனைவி என்னும் துணைவியைத் தந்தான். குலம் தழைக்க குழந்தையைத் தந்தான். எத்தனை வசதிகள் வேண்டுமோ, அத்தனையும் இத்தரை மீதினில் தர்மமாகவே தந்தான். இவ்வளவும் தந்த அந்த கொடை வள்ளலின் தர்மத் தலைவனின் ஆணைகளை நாம் அலட்சியப்படுத்தி நடப்பது அறிவுடைமையாகுமா? ஒருகணம் சிந்திப்பீர்! நீங்கள் ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து கொள்ளுங்கள் என்று அவன் நமக்கு ஆணையிட்டிருக்கிறான்.

அந்த அல்லாஹ்வின் அருளால் அவனியில் அவதரித்த செல்வந்தர் ஒருவரிடம் ஒரு ஏழை உயிர் ஒன்று வாடி வறுமைக் கோலத்தோடு அவனைத் தேடி வரும் போது, பிச்சை பொருளுக்காக அவனை நாடி வரும் போது, உள்ளம் உருகிட உணர்ச்சி பெருக்கோடு தன்னிடம் உள்ளத்தை அள்ளிக் கொடுக்கையில் அவன் விழிகளிலிருந்து வழிகின்றதே ஆனந்தக் கண்ணீர்..... அவைகளை எப்படி புகழ்வது.

அவனது அகத்தின் அன்பின் வளர்ச்சியையும் முகத்தின் மலர்ச்சியையும் பார்த்துவிட்டு முதிர்ந்து

உதிர்ந்த கண்ணீரையும் கண்டுவிட்டு, கஞ்சிக்கு அலையும் கண்களும் தாரை தாரையாக வடிக்கின்றதே அந்த ஆனந்தக் கண்ணீர் அவைகளைத்தான் எப்படி வர்ணிப்பது. சூரியனின் ஒளி வெண்ணிலவில் பட்டு பிரதிபலிப்பது போல அருட் செல்வனின் கண்ணீர் விழிகளிலும் பட்டு பிரதிபலிக்கின்றது. கண்ணீரோடு கண்ணீர் கலக்கிறது. கருணையின் காவியம் பிறக்கிறது. அந்த நான்கு கண்களும் உருகி வடிக்கின்ற உப்புநீரும் ஒன்றாக கலந்து செப்புகின்ற சீர்மைச் செரிவை என்னென்பேன்!

கரையாத கல் நெஞ்சங்கள் பார்க்கட்டும் அந்த காட்சியை! கேட்கட்டும் அந்த மாட்சியை! ஒரே இறைவன் தந்த அந்த இரு உயிர்களும் அன்பின் அரவணைப்பில் கட்டுண்டு கற்சிலையாய் நிற்பதைப் பார்க்கட்டும்! செழிப்பில் மிதந்த அந்த செல்வந்தர் கொடுத்து உவக்கும் தன்மையை பார்க்கட்டும். அல்லாஹ்வின் அருள் பெற்றுப் பொருள் பெற்ற அந்தச் செல்வந்தரின் ஈகையைக் கண்டு அந்த வறுமையானவன் வடிக்கும் ஆனந்தக் கண்ணீரை பார்க்கப்பட்டும் அந்த நெஞ்சங்கள்!

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்
அறத்திற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

என்பதை அறியாதவனின் உள்ளம் பாழ். ஆர்த்தெழும் ஆழி அலையை அணைகட்டி தடுக்க இயலுமா? அன்பால் உருகி நிற்கும் உள்ளம் கொண்டவனிடம் பெருகிவரும் கண்ணீரை அடைக்கும் தாழ்ப்பாள் அவனியில் உண்டோ?

தர்மம் செய்தே ஆனந்தம் காணும் அந்த அன்பு உள்ளத்தில் அடங்கிக் கிடந்த தண்ணீரெல்லாம் கண்ணீராக அருவிபோல் பாய்ந்து கல் நெஞ்சங் கொண்ட கல்லர்களின் (கஞ்சர்களின்) உருவத்தை உள்ளத்தை கழுகட்டும்! அவர்களிடம் படிந்திருக்கும் (உள்ளத்தில் தேங்கி நிற்கும்) மாசுகளை மாண்பாக மாற்றட்டும்! என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இத்தலைப்பை முடிக்கிறேன்.



## மது அருந்தாதீர்கள்

ஈமான் கொண்டவர்களே! கள்ளும், சூதாட்டமும், (வணங்குவதற்காக நட்டு வைக்கப்பட்டுள்ள) விக்ரகங்களும், கட்டையுருட்டி குறி பார்ப்பதும் ஷைத்தானுடைய காரியங்களில் நின்றுமுள்ள அருவருப்பான (செயலாக) இருக்கின்றன. ஆகவே நீங்கள் ஜெயம் பெறும் பொருட்டு அதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். -அல்குர்ஆன்

ஷைத்தான் விரும்புவதெல்லாம், கள்ளிலும், சூதாட்டத்திலும் (உங்களை ஈடுபடுத்தவும்) உங்களுக்கிடையில் பகையையும், கோபத்தையும் உண்டாக்கவும் அல்லாஹ்வின் திக்ரை (ஞாபகத்தை) விட்டும், இன்னும் தொழுகையை விட்டும், உங்களைத் தடுக்கவும் தான். ஆகையால் நீங்கள் (ஷைத்தானின் செயல்களை விட்டும்) விலகிக் கொண்டீர்களா!
-அல்குர்ஆன்

(நபியே) உம்மிடம் மதுபானத்தையும் சூதாட்டத்தையும் குறித்து (மனிதர்கள்) வினவுகின்றனர். அவ்விரண்டிலும் ஜனங்களுக்கு தீமையும் பிரயோஜனங்களுமிருக்கின்றன; என்றாலும் அவ்விரண்டினுடைய தீமையானது பியோஜனத்தைப் பார்க்கினும் மிகக் கொடியது என்று கூறிவிடும். இன்னும் (நபியே) எதை அவர்கள் செலவு செய்ய வேண்டுமென்று உம்மிடம் கேட்கின்றனர்? (தேவைக்கு) மிஞ்சியதை என்று கூறுவீராக! நீங்கள் சிந்தித்துக் கொள்வதற்காக அல்லாஹ் தனது வசனங்களை உங்களுக்கு இதுபோல விவரிக்கிறான்.

-அல்குர்ஆன்

எவர் மதுபானத்தை ஹலாலாகக் கருதுவாரோ நிச்சயமாக அவர் என்னை விட்டும் நீங்கி விட்டார். நான் அவரை விட்டும் நீங்கிவிட்டேன், -அல்குர்ஆன்

மேலும் இறைவன் ஹதீஸ் குத்ஸில் எனது வல்லமையின்மீது ஆணையாக எவர் உலகில் மதுபானம் அருந்துவாரோ. அவரின் ஹிருதயத்தை கியாமத்து நாளில் தாகத்தாலும் வரட்சியாலும் காய்ந்ததாகவும், அவனின் நாக்கை வெளியாக்கி நெஞ்சு வரையிலும்

தொங்கிய தாகவும் கடினமாக தாகம் உள்ளதாகவும் ஆக்கிவைப்பேன். மேலும் எவர் என் உத்திரவிற்காக மது பானம் அருந்தாமல் இருந்தாரோ அவரை என் அர்ஷுக்கு கீழே குர்ஸு என்ற இடத்தில் இருக்கச் செய்து சொர்க்க லோகத்தின் பானங்களைப் புகட்டுவேன் என்று கூறியுள்ளான். நூல் - ஜவாஜிர்

ஒரு அடியான் ஒருவிடுத்தம் முதன்முதலாக மது பானம் அருந்துவானேயானால் அவனின் உள்ளம் கருப் படைந்துவிடும். இரண்டாம்முறை குடிப்பானேயானால் மலக்குல் மௌத்து (அலை) அவர்கள் அவன்மீது வெறுப் படைவார்கள். மூன்றாம் விடுத்தம் குடிப்பானேயானால் அவனை நாயகம் (ஸல்) வெறுக்கிறார்கள். நான்காம் விடுத்தம் குடிப்பானேயானால் அவனுக்கு கார்மானமாக சாட்டப்பட்டுள்ள மலக்குகள் வெறுக்கிறார்கள். ஐந்தாம் விடுத்தம் குடிப்பானேயானால் அவனை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வெறுக்கிறார்கள். ஆறாவதுவிடுத்தம் குடிப்பானேயானால் மீக்காயீல் (அலை) அவனை வெறுக்கிறார்கள், ஏழாம் விடுத்தம் குடிப்பானேயானால் இஸ்ராயீல் (அலை) அவனை வெறுக்கிறார்கள். எட்டாம் விடுத்தம் குடிப்பானேயானால் அவனை வானலோகம் வெறுக்கிறது. ஒன்பதாம் விடுத்தம் குடிக்கிறவர்களை வான லோகத்தில் உள்ளவர்களெல்லாம் வெறுக்கி றார்கள். பத்தாம் விடுத்தல் குடிக்கிறவர்களுக்கு சொர்க்க லோகத்தின் கதவுகள் மூடப்படுகிறது. பதினொன்றாம் விடுத்தம் குடிக்கிறவர்களுக்கு நரக வாசல்கள் திறந்து வைக்கப்படுகிறது. பனிரெண்டாம் விடுத்தம் குடிக்கிறவர் களை அர்ஷை சுமந்திருப்பவர்கள் வெறுக்கிறார்கள். பதின்மூன்றாம் விடுத்தம் குடிக்கிறவர்களை இறைவனும் வெறுக்கிறான். எவர்களை இறைவனும் அவனின் ரசூல் மார்களும், வானவர்களும், அர்ஷும் குர்ஸும், மலக்குகளும், வெறுக்கிறார்களோ அவர்கள் நரகத்தில் இருப்பார்கள். -அல்ஹதீஸ்

எவருடைய வயிற்றில் மதுபானம் போய் நுழைந் ததோ அவரின் ஏழு நாட்களின் தொழுகை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. மதுபானம் அருந்தியதால் எவ-



ருடைய அறிவு போதையாகிவிட்டதோ அவரின் நாற்பது நாட்களின் நன்மைகளை இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். இந்த நாற்பதுநாட்கள் கழியுமுன் அவன் மரணமாகி விட்டால் காபிராகவே மரணிப்பான். ஆனால் பாவமன்னிப்புக் கேட்டு அத்தவறை விட்டும் தவிர்ந்து கொள்வானேயானால் அதை இறைவன் மன் னித்துவிடுகிறான், பாவமன்னிப்புக் கேட்டு மீண்டும் மதுகுடிப்பானேயானால் அவனுக்கு நரகில் (தின்யத்துல் கபால்) என்னும் குடிப்பை புகட்டப்படும். அப்போது ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ் தின்யத்துல் கபால் என்றால் யாதென்று வினவினார்கள் அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் தின்யத்துல் கபால் என்பது நரகவாதிகளுடைய சீழும் சலமும் இரத்தமும் கலந்த கொதித் தண்ணீர் எனக் கூறினார்கள். -அல்ஹதீஸ்

எந்த ஒரு அடியான் நான்கு விடுத்தம் மதுபானம் அருந்தினானோ அவனின் பெயரை இறவைன் ஸிஜ்ஜீல் என்னும் நரகில் எழுதிவிடுகிறான். அவனின்மீது இறை வனின் கோபமும் ஏற்படுகிறது, -அல்ஹதீஸ்

மேலும் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்;

எவர் உலகில் மதுபானம் அருந்தினாரோ அவர் மறு மையில் சொர்க்கத்தின் பானங்களை அருந்தமுடியாது.

-அல்ஹதீஸ்

எவர் இரவில் மதுபானம் அருந்துகிறாரோ அவர் முஷ்ரிக்கானவராகவே (இறைவனுக்கு இணை வைப்ப வராகவே) இருந்து இரவைக் கழிக்கிறார். இது போலவே எவர் காலையில் மது அருந்துகிறாரோ அவர் முஷ்ரிக் கானவராகவே பகலையும் க்ழிக்கிறார். -அல்ஹதீஸ்

மதுபானமானது பாவங்களைச் சேகரிக்கின்ற (மாபெரும்) கருவியாகும்.

மதுபானம் அருந்துபவர் சிலைகளை வணங்குபவர் போலாவார். -அல்ஹதீஸ்

மதுபானம் அருந்துபவரை இறைவன் சபிக்கிறான். (இதனால் இறைவனின் சாபமும் அவர்மீது ஏற்படுகிறது)
-அல்ஹதீஸ்

மதுபானம் அருந்துபவரின் ஈமான் பறிக்கப் பட்டுவிடும். (ஏனெனில் மதுபானமும் ஈமானும் ஒன்றுசேராது) -அல்ஹதீஸ்

எவராகிலும் மதுபானம் அருந்தினவருக்குஸலாம் சொன்னாலும், அவனை அணைத்துப் பிடித்தாலும் அவரின் நாற்பது நாட்களின் நன்மைகள் அழிக்கப்படும்.
-அல்ஹதீஸ்

கண்ணியத்திற்குரியவர்களே, அருமை நபி (ஸல்) அவர்களின் சொல்லை மிக கருத்தும் அக்கரையும் கொண்டு கவனிப்பீர்களாக.

குடித்தவன் எவ்வளவு படித்தவனாக இருந்தாலும் எத்தகைய ஈமான் கொண்ட சீமானாக இருந்தாலும் அவன் அல்லாஹ்வின் அன்புக்கு உரியவனாக முடியாது. அவன் இறக்கும்வரை ஈமானை இழக்காமல் இதயத்திலே வருத்தி இருந்தாலும்கூட, எத்தகைய சிறப்பும் பெற்றுவிட முடியாது. மதுமேல் அவன் கொண்ட மோகம் அவனது ஈமானின் பாகத்தை பறித்துவிடும். மதுபானம் குடித்து மகிழ்ந்திருப்பவன், அதில் மயங்கி இருப்பவன் மாண் புடைய ஈமானையும் கொண்டிருப்பானாயின் அந்த ஈமான் அவனிடமிருந்து பறிக்கப்பட்டே தீரும். ஆகவே அவன் இறப்பதற்கு முன்னேயே அவனிடமுள்ள ஈமான் இறந்துவிடும். இதற்கோர் எடுத்துக்காட்டு இங்கே தருகிறேன்.

ஷைக் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் சொல் கிறார்கள்: ஒரு சமயம் நான் பள்ளிக்குச் சென்றுகொண்டி ருந்தேன். அப்போது வழியில் பெண்கள் கூட்டமாக இருந்து அழுது கொண்டிருந்தார்கள். இதைக்கண்ட நான் அவர்களிடம் சென்று ஏன் இப்படி அழுது கொண்டிருக் கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கவர்கள் அண்டை வீட்டில் ஒருவர் சக்ராத் நிலையில் கிடக்கிறார். அவர்



வாயில் ஷஹாதத் கலிமா சொல்லவரவில்லை. நாங்கள் பலமுறை சொல்லிக் கொடுத்தோம். அப்படியும் அவரால் அதைச் சொல்ல முடியவில்லை. ஆகவே நீங்கள் சொல்லிக்கொடுத்தால் ஒருவேளை அவர் சொன்னாலும் சொல்லக்கூடும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார் கள். நானும் சென்று அம்மனிதனுக்கு எத்தனையோ முறை கலிமா ஷஹாதத்தைச் சொல்லிக் கொடுத்தேன். அப் போதும் அவர் சொல்லவேயில்லை. இறுதியாக திடீர் என்று கண்விழித்தார். நான் சொன்ன கலிமாவை மட்டும் காதால் கேட்டார்; கேட்ட உடனே நான் இஸ்லாத்தை வெறுக்கிறேன் என உரத்துச் சப்தமிட்டார். அந்த சப்தத்துடன் அவரது ஆவி பிரிந்தது.

உடனே நான் அப்பெண்களிடத்தில் இவர் காபிராக மறித்துவிட்டார். ஆகவே இவருக்கு ஜனாஸா தொழுகை தொழவைப்பதோ முஸ்லிம்களின் அடக்க ஸ்தலங்களில் அடக்கம் செய்வதோ கூடவே கூடாது. என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின் அந்த இறந்தவரின் உறவினர்களை அழைத்து இவர் தன் ஜீவியத்தில் என்ன செயல்களைச் செய்து கொண்டிருந்தார் என்று கேட் டேன். அதற்கு அவர்கள் இவர் தனது ஜீவியத்தில் ஒழுங் காக தொழுது இறைவனுக்குப் பிரியமான நல்ல பல காரியங்களும் செய்துவந்தார். ஆனால் மது அருந்துவதை மட்டும் தன் பழக்கமாக கொண்டிருந்தார் என்று கூறி னார்கள். நான் உடனே இவர் மது அருந்துவதைப் பழக்க மாகக் கொண்டதால் இவரின் ஈமான் பறிக்கப்பட்டு விட்டது என்று கூறினேன். இவ்வாறு அப்துல் அஜீஸ் (ரஹ் ) அறிவிக்கிறார்கள்.

மாண்புள்ளவர்களே! மது அருந்துபவனின் நிலை இப்படியென்றால் மதுக்கடைகளை வைத்துக் கொண்டு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு கொடுக்கிறார்களே! அவர்களின் நிலை என்ன ஆகும்? அகிலத்தைப்படைத்து ஆட்சி செய்யும் அந்தக் கருணாகரனாகிய அல்லாஹ்வின் ஆணை பெரிதா-? இல்லை...சாக்கடை தொழிலால் நாற்ற வயிற்றுப் பிழைப்பு நடத்துவது பெரிதா? சில முஸ்லிம்கள் ஐங்காலமும் தொழுது வருகிறார்கள்;

ஆயினும் மது வியாபாரத் தொழிலை செய்து வருகிறார்கள். ஏன்? இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால் நாங்களென்ன குடிக்கவா செய்கிறோம்? வியாபாரம் தானே செய்கிறோம் என்று கூறுகிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற மதுப்பாட்டில்கள் எத்தனை குடும்பங்களைக் குட்டிச் சுவராக்கியுள்ளன? எவ்வளவு மானங்கெட்ட ஈனப் பிறவிகளை எல்லாம் உருவாக்கி யுள்ளன? மதுபானம் குடிப்பவன், விற்பவன், அதற்கு உதவி செய்பவன் அனைவருக்கும் ஒரே தண் டனைதான் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப் பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

கண்ணியம் கொண்டவர்களே மதுக் கடைகள் பக்கம் உங்கள் கண் பார்வையைக் கூட காட்டிவிடாதீர்கள். அந்தப் பக்கத்தில் உங்கள் பாதம் படுவதைக் கூட பாவமென்று எண்ணிக் கொள்ளுங்கள். கள் ளுண்ட காதகர்கள் விஷயத்திலும் அப்படித்தான் இருக்க வேண்டும். அவர்கள் காறி உமிழ்ந்த எச்சிலுக்குச் சமமான வர்களே, துர்நாற்றமெடுக்கும் பிணத்திற்குச் சமமானவர் களே. காக்கைகளும் கழுகுகளுமே அவர்களோடு கலந் துரையாடவேண்டியவை. அவைகள் சுவைப்பதற்கே அவன் சதையை வளர்க்கிறான். அவர்களோடு எந்தக் கலப்பையும் வைத்துக் கொள்ளாதீர்கள். அவர்களின் கரம் பட்டால் கூட ஏன் கண்பார்வை பட்டால்கூட களங்கமென்று எண்ணிக் கொள்ளுங்கள். நாறி ஊறி, நசிந்து போன எலி, பெருச்சாளிகளோடு சொந்தம் கொண்டாடும் காக்கைகளைப்போல கள்ளுண்ட வனோடு கள்ளுண்டவன் கலந்துரையாடட்டும், நீங்கள் நல்ல தாமரைக் குளத்தை நாடிச் செல்லும் அன்னப் பறவைகளைப் போல நல்லவர்களையே நாளும் நாடிச் சென்று பக்குவமாக வாழ்ந்து கொள்ளுங்கள். ஊரும் பாரும் நம்மைப் போற்றும் உற்ற இறைவனும் நம்மை விரும்புவான்.



## அன்னிய பெண்களை ஆசிக்காதீர்கள்

மேலும் எவர் தனது இரட்சகனின் சந்திப்பை பயந்து மனோ இச்சையை விட்டும் தன்னை தடுத்துக் கொண் டாரோ அவரின் ஒதுங்கும் ஸ்தலம் சொர்க்கமாகும்.

-அல்குர்ஆன்

நீங்கள் விபச்சாரத்தின் பக்கம் நெருங்காதீர்கள்.

-அல்குர்ஆன்

நபி (ஸல்) கூறுகிறார்கள்! விபச்சாரத்தை விட்டும் தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அதில் ஆறு வகையான கெடுதல்கள் ஏற்படுகின்றன. உலகில் மூன்று வகையான கெடுதல்களும் மறுமையில் மூன்று வகையான கெடுதல்களும் ஏற்படுகின்றன.

உலகில் ஏற்படும் மூன்று வகையான கெடுதல்கள்

1. அவனின் இரணவிஸ்தீரணம் குறைந்துவிடும்.

2. அவன் இறக்கும் சமயத்தில் இறைவனுக்கும் அவனுக்கும் இடையே திரை போடப்படும்.

3. அவன் மரிக்கும் சமயத்தில் நரகத்தையும் நரகத்தின் அதிபதியான (ஜபானிய்யா) மலக்குகளையும் தன் கண்களால் பார்ப்பான்.

மறுமையில் ஏற்படும் மூன்று வகையான தீமைகளாவன:

1. இறைவன் மறுமையில் அம்மனிதனைக்கோபப் பார்வையால் பார்க்கிறான்.

2. அம்மனிதன் நெருப்புச் சங்கிலியால் கட்டப்பட்டு நரகத்தில் இழுத்துத் தள்ளப்படுகிறான்.

3. அவன்பேரில் கேள்விக்கணக்குகள் மிகக் கடு மையாகக் கேட்கப்படும். வேறொரு ஹதீஸில் (நரகில் விபச்சாரம் செய்த ஆண் பெண்களின் அபத்தின் வீச்சம்

தாளாமல் மற்ற நரகவாதிகளெல்லாம் அழுவார்கள் எனவும் காணப்படுகிறது.)

அன்னியப் பெண்களைப் பார்ப்பது குற்றமாகும். கண்களால் காண்பதும் விபச்சாரமாகும்; கால்களால் விபச்சாரத்திற்கு நடந்து செல்வதும், அன்னிய ஹராமான பெண்ணைக் கையினால் தொடுவதும் விபச்சாரமாகும்.

எவர் விபச்சாரம் செய்கின்றாரோ அவருக்கு அவரின் கப்ரு அறையில் ஏழுவகையான நரக வாசல்களையும் இறைவன் திறந்து வைக்கிறான். அந்த ஏழு வாசல்களிலிருந்தும் அம்மனிதனை நோவினை செய்வதற்காக கியாமத்து நாள்வரையிலும் பாம்பு, தேள்கள் அவனின் கப்ரு அறைக்கு வந்து கொண்டே இருக்கும்.

-அல்ஹதீஸ்

விபச்சாரம் செய்த ஆண், பெண் இருவரும் அவர்களின் வெட்கஸ்தலம் நெருப்பினால் எரிந்து கரிந்து கொண்டிருக்கும் நிலையில் வருவார்கள். அவர்களின் வெட்கஸ்தலத்தின் நாற்றம் மிகுதியாக இருப்பதைக் கண்டு மற்றவர்கள் அவர்களை விபச்சாரர்கள் என அறிந்து கொள்வார்கள். மலக்குகள் அவர்களை முகங் குப்புறத்தள்ளி இழுத்துக்கொண்டு போய் நரகத்தில் எறிந்துவிடுவார்கள். மேலும் மாலிக் என்ற மலக்கானவர் அம்மனிதனை நெருப்புச் சங்கிலியால் பிணைத்து விடுவார். பின் மாலிக் என்ற மலக்கானவர், ஜபானியாக்கள் என்ற பெயருடைய மலக்குகளை அழைத்து "இந்த விபச்சாரர்கள் எப்படித் தம் கண்களினால் விபச்சாரம் செய்தார்களோ, அப்படியே அவர்களின் கண்களுக்கும் நெருப்பில் காய்ச்சப்பட்ட கம்பிகளைக் கொண்டு சூடு போடுங்கள். விபச்சாரம் செய்ய நடந்து சென்ற இவர்களின் கால்களுக்கு நெருப்பு விலங்கிடுங்கள். விபச்



சாரத்திற்காக நீட்டிய இவர்களின் கைகளில் நெருப்பு வளையங்களை அணிவியுங்கள் என்று கூறுவார், அப்படியே ஜபானியாக்கள் செய்வார்கள். அப்போது அவ்வேதனைக்கு உட்பட்ட மக்கள் தங்களின் வேதனை தாங்க முடியாமல் ஜபானியாக்களைப் பார்த்து ஓ...ஜபானியாக்களே! எங்களின் வேதனையைக் குறைத்து இரக்கம் காட்டுங்கள். எங்களால் தாங்கமுடியவில்லையே நாங்கள் என்ன செய்வோம் என்று மனம் நொந்து அழுவார்கள். அதுசமயம் ஜபானியா மலக்குகள் அம்மக்களைப் பார்த்து, கிருபையுள்ள ரஹ்மானாகிய அல்லாஹ்வே உங்கள்மீது கோபமாக இருக்கும்போது, நாங்கள் எவ்விதம் உங்களின் மீது இரக்கம் காட்ட முடியும் என்று கூறிவிடுவார்கள்.

எவர்கள் அன்னியப் பெண்களைப் பார்த்து இச்சிக்கின்றார்களோ. அவர்களின் கண்களை இறைவன் நெருப்புகளைக் கொண்டு நிரப்புகிறான். மேலும் எவர்கள் விபச்சாரம் செய்கிறார்களோ, அல்லாஹ் அவர்களை கப்ரிலிருந்து தாகித்தவர்களாகவும், பயங்கரமான மர்மஸ்தானங்களை உடையவர்களாகவும் துக்கித்து அழுதவர்களாகவும், முகம் கருத்தவர்களாகவும் நெருப்புச் சங்கிலியால் கழுத்தைக் கட்டப்பட்டவர்களாகவும் உடல் முழுவதும் நெருப்பு உடை அணியப்பட்டவர்களாகவும் எழுப்புவான், அம்மக்களிடம் அல்லாஹ் பேசமாட்டான் அவர்களைப் பார்க்கவும் மாட்டான். கருணை காட்டவும் மாட்டான் அவர்களுக்கு கடினமான வேதனை கொடுக்கப்படும்.

புருஷன் உள்ள ஒரு பெண்ணிடம் எவர் விபச்சாரம் செய்கிறாரோ அவருக்கும், அவளுக்கும் கப்ரில் கடினமான வேதனையுண்டு. கியாமத்து நாளில் விபச்சாரம் செய்தவளுடை நன்மைகளெல்லாம் அவளுடைய கணவனுக்குக் கொடுக்கப்படும்; அவனின்

தமைகள் எல்லாம் விபச்சாரம் செய்த பெண்ணுக்குக் கொடுக்கப்படும். தன் மனைவி விபச்சாரத்தில் ஈடுபட்டதை கணவன் அறியவில்லையானால் மட்டுமே மேற்கண்ட நன்மைகள் ஏற்படும். அப்படி அவன் அறிந்திருந்தும் மவுனித்திருப் பானேயானால் அவனுக்கும் விபச்சாரத்தின் குற்றம் இருக்கிறது. அத்தோடு அவனுக்கு சொர்க்கம் ஹராமாக் கப்படுகிறது. மேலும் விபச்சாரத்திற்கு உடந்தையாக இருந்த புருஷனையும், விபச்சாரம் செய்யும் ஆணையும் பெண்ணையும் ஏழுவானங்களும், பூமிகளும் சபிக்கின்றன.

நான் மிஃராஜ் சென்றிருந்த சமயம் நெருப்பால் காய்ச் சப்பட்ட செம்பு உலைகளைக் கண்டேன். அதன் வாய் குறுகலாகவும், அதன் சுற்றுப் பாகம் அகன்றும் இருந்தது, அதனுள் ஆண்களும் பெண்களும் மிக அதிகமாக இருந் தார்கள். அவர்களைப் பாம்புகளும், தேள்களும் சூழ்ந்து கொத்திக்கொண்டும், கொட்டிக் கொண்டும் இருந்தன. அவர்களின் அபங்களிலிருந்து இரத்தமும், சீழும் வழிந்து கொண்டிருந்தது, அதன் துர்நாற்றத்தால் நரகவாதி களெல்லாம் அவஸ்தைப் பட்டவர்களாக அழுது கொண்டிருந்தார்கள். இப்படி நாற்றத்தோடும் வேதனை யோடும் இருக்கும் இவர்கள் யார் என்று நான் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கேட்டேன். அதற்கு இவர்கள்தான் விபச்சாரம் செய்த ஆண்கள் பெண்கள் என்று ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறினதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஊதுபில்லாஹி மின்ஹா)

எவர் அன்னியப் பெண்களை தன் கைகளைக் கொண்டு பிடித்தாரோ அவரின் கைகளில் கியாமத்து நாளில் நெருப்புச் சங்கிலி மாட்டப்படும்.



எவர் அன்னியப் பெண்களை முத்தம் கொடுத்தாரோ அவரின் உதடுகளை கியாமத்து நாளில் ஜபானியா என்னும் மலக்குகள் நெருப்பு கத்திரிகளால் கத்தரிப்பார்.

எவர் அன்னியப் பெண்களிடம் விபச்சாரமோ மற்ற ஹராமான செயல்களைச் செய்தாரோ, அவரின் இரு தொடைகளும் அவர் செய்த குற்றத்திற்கு இறைவனிடம் சாட்சி கூறும், அச்சமயம் இறைவன் அம்மனிதனை கோபப் பார்வையால் பார்க்கிறான். அப்போது அம் மனிதனின் முகத்திலுள்ள தசைகள் உருகி சிதைந்து விழுந்துவிடும். அவரின் முகம் தசையில்லாமல் வெறும் எலும்பாக காணப்படும்; பின் உதிர்ந்த தசைகள் மறுபடியும் அவரின் முகத்தில் போய் ஒட்டிக் கொள்ளும் படி அல்லாஹ் ஆணையிடுகிறான். ஆயினும் அவர் முகம் கறுத்து ஒளிமங்கி விகாரமாகக் காணப்படும். அப்போது அம்மனிதனின் நாவிற்கு இறைவன் முத்திரையிட்டு விடு கிறான். அவனின் ஒவ்வொரு அங்கத்தையும் தான் செய்த பங்கத்தைப்பற்றி பேசச் செய்கிறான். அப்போது கையானது இறைவா நான் இன்ன ஹராமான செயலைச் செய்திருக்கிறேன் என்றும், கண் இறைவா நான் இன்ன ஹராமானபார்வை பார்த்திருக்கிறேனென்றும், கால் நான் இன்ன ஹராமான காரியத்தின் பக்கம் நடந்து சென்றிருக்கிறேனென்றும், அபம் இறைவா! நான் இன்ன ஹராமான செயல்களை செய்திருக்கிறேனென்றும் இவ் விதமே ஒவ்வொரு உறுப்பும் சாட்சியம் அளிக்கும்.

அவனின் வலப்பக்கம் இருக்கும் மலக்கானவர் அவன் ஹராமான செயல்கள் சம்பந்தமாகப் பேசியதை கேட்டிருக்கிறேன் என்று கூறுவார். இடது பக்கம் இருப்ப வர் இவ்விஷயத்தை நான் அவனின் பட்டோலையில் எழுதியுள்ளேன் என்று கூறுவார். பூமியானது அவன் என்மீது இருந்து விபச்சாரம் செய்யும் போது அவனை நான் சுமந்திருந்தேன் என்று கூறும். அப்போது இறை

வனும் நீ செய்த செயலை நான் பார்த்திருந்தேன் என்றாலும் இவ்வளவு நாட்களாக அதை மறைத்து வைத்திருந்தேன் என்று கூறுகிறான். உடன் மலக்குகளை அழைத்து இவனைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் நரகத்தில் இட்டு வேதனைப்படுத்துங்கள். எவன் என்னை அலட்சியம் செய்து என் ஆணைகளை மீறி நடந்தானோ அவனுக்குக் கடுமையான வேதனை கொடுக்கப்படும் என்று கூறுவான்.

எவர் ஹராமான பார்வையைவிட்டும் தன் கண்களைப் பேணிக்கொண்டாரோ அவரின் குடும்பத்தாரை இறைவன் ஹராமை விட்டும் பாதுகாத்துக் கொள்வான். எவர் பிற பெண்களை நோட்டமிடுகிறாரோ அவரது மனைவியின் மானத்தை இறைவன் பாதுகாப்பதில்லை. திருமணம் முடிந்த ஒரு ஆணும், ஒரு பெண்ணும் விபச்சாரம் செய்துவிட்டால் அவர்களை கற்களால் அடித்துக் கொல்லவேண்டும் என்று இஸ்லாம் இயம்புகிறது.

-ஜவாஜிர்

இக்கருத்தை உங்களுக்கு ஒரு சிறிய நிகழ்ச்சி மூலம் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அரேபியாவில் விபச்சார அழுக்கெல்லாம் அகன்று கொண்டிருந்த காலம் அது. அப்படிப்பட்ட அக்காலத்தில் மாயிஸ் என்னும் முஸ்லிம் ஒருவர் இஸ்லாம் மார்க்கத்தை மனதார ஏற்று வாழ்ந்துவந்தார். அவர் ஒரு நாள் நாயகத்திடம் வந்து தான் விபச்சாரம் செய்து விட்டதாகவும் அதற்கான தண்டனையை ஏற்கத் தான் தயாராய் இருப்பதாகவும் கூறினார். அவரது உரைகளைக் கேட்ட நாயகம் (ஸல்) ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்கள். மணமானவர் விபச்சாரம் செய்துவிட்டால் அவரை கல்லால் அடித்தே கொல்லவேண்டும் என்ற சட்டத்ததை நாயகம்



(ஸல்) அவருக்கு எடுத்துரைததார்கள். அதைக் கேட்ட அந்த நபர் அனைத்தும் அறிந்தே நான் அந்தத் தண்டனையை அனுபவிக்க வந்திருக்கிறேன். எனக்கு தண்டனை தந்து என் பாவத்தைக் கழுவுங்கள் என்று உறுதியுடன் கூறினார். எனினும் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியால் இவ்விதம் கூறுகிறாரோ என நாயகம் (ஸல்) அவர்கள் ஐயம் கொண்டார்கள். அதனால் தண்டனையை ஒருநாள் தள்ளிப் போட்டார்கள். இவ்விதம் மூன்று நாட்கள் முடிந்தன. ஆயினும் மாயிஸ் தனது முடிவைக் கொஞ்சமும் மாற்றிக்கொள்ளவில்லை. சட்டத்தை சரியாக நிறைவேற்றுவதில் அவர் காட்டிய தீவிரம் நாயகத்தையே வியப்பிலாழ்த்தியது. சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டிய கடமை நபி (ஸல்) அவருக்கு தண்டனையை வழங்க முடிவு செய்தார்கள்.

அவர் பெறப்போகும் தண்டனையை இறக்கும் வரை காணும் வண்ணம் அவரை நிறுத்தி வைக்கப் பட்டது. அவரை சுற்றி நின்ற ஒவ்வொருவரின் கரங்களிலிருந்தும் புறப்பட்ட அம்பு போல கற்கள் நான்கு புறமிருந்தும் பாய்ந்து வந்தன. செடியில் பூத்த மலர் கசக்கிப் பிழியப் படுவது போல அவரின் மலர்ந்த முகத்தின் சதையைக் கற்கள் சவைத்துச் சுவைத்தன. அக்கினிக் குண்டத்திலிருந்து நெருப்பின் ஜுவாலை புறப்படுவது போல அவரின் மூக்கிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அவரின் பாவமெல்லாம் பாய்ந்து வந்த அந்தக் குருதியோடு கலந்து பரந்து கிடந்த பாலை மண்ணையும் இரத்தச் சிவப்பாக்கியது. கண்டவரெல்லாம் கதிகலங்கிப் போகும் அந்தக் காட்சி பார்த்தவரெல்லாம் பயந்து போகும் அந்தக் காட்சி அங்கே நடந்து முடிந்தது. அந்தப் பாவாத்மாவின் ஜீவாத்மா சிந்திய ரத்தத்தோடு தன் சிரத்தைப் போட்டது.

சகோதர அன்பர்களே! மறுமையில் அல்லாஹ்வின் கோபத்தால் ஏற்படும் தண்டணையைவிட இம்மையில் தன் பாவத்தால் பெறும் தண்டனை பெருமைக்குரியது என்று எண்ணி மாயிஸ் தன்னை மாய்த்துக் கொண்ட மாண்பை பார்த்தீர்களா?

ஈனத்தால் மானமிழந்து மதிகெட்டு போன திசை யிலெல்லாம் மாற்றாரின் மங்கையின் மேல் மோகங் கொண்டு மோசம் செய்யும் மாபாவிகள் தங்களுக்கும் அக்காள், தங்கை, அன்னை உண்டு என்பதை எண்ணிப் பார்க்கப்பட்டும் காமத்தின் தாகத்தால் எத்தனை கன்னி யரின் கற்பு கறைபட்டு உள்ளது...? உரிமையோடு அத னைத் தீர்த்துக்கொள்ள உத்தமமான வழியை இஸ்லாம் காட்டியுமா இந்தநிலை...? கட்டிய கணவனின் கண்ணை மறைத்துவிட்டு கள்ளவழியில் தங்கள் காம உணர்வைத் தீர்த்துக்கொள்ள விழையும் காதகிகள் இதனை எண்ணிப் பார்ப்பார்களாக...! வாழ்வில் சொந்தக் கணவனை வஞ்சித்துவிட்டு, விபச்சாரத்தில் விழும் வனிதையர் இதனை சிந்திந்துப் பார்ப்பார்கள்களாக.

நாம் பிற பெண்களை இச்சிப்போமானால் நமது குடும்பத்தில் உள்ள பெண்களை மற்ற ஆண்கள் இச்சிப் பார்கள். விபச்சாரம் செய்த ஒரு ஆண், விபச்சாரியான ஒரு பெண்ணைத்தான் மனைவியாக அடைய முடியும் எனற கருத்தை இறைவன் திருமறையில் கூறுகிறான்.

ஒரு பெரியாரின் உள்ளம் ஒரு தீய செயலை எண்ணியது. அப்போது அவரின் முன் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்பெரியார் தனது உள்ளத்தை நோக்கி...ஓ...மனமே நீ...இத்தீய செயலை நாடுகிறாய். இதோ எரிந்து கொண்டிருக்கும் விளக்கில் உன் விரலை வை. இந்த விளக்கின் சூட்டை நீ பொறுத்துக்கொள்ள முடியுமென்றால் நரகின் நெருப்பையும் நீ பொறுத்துக் கொள்ளலாம். அந்த நம்பிக்கையோடு நீ இத்தவறைச்



செய் என்று கூறிவிட்டு எரிந்துகொண்டிருந்த விளக்கின் ஜுவாலையில் தன் கைவிரல்களைக் காண்பித்தார். சற்று நேரத்தில் அவ்விரல் சூட்டால் கொப்பளித்து தோல் உரிய ஆரம்பித்தது. அதற்கு மேல் சூடு தாளாமல் அப்பெரியார் தன் விரலை வெடுக்கென்று எடுத்துக் கொண்டார். மீண்டும் தன் மனதை நோக்கி ஓ..மனமே இந்தச் சிறிய நெருப்பையே உன்னால் தாங்க முடிய வில்லையே...நீ மறுமையில் நரக நெருப்பை எப்படி தாங்கிக்கொள்ள போகிறாய்!? உலகிலுள்ள நெருப்பை அது எழுபது பங்கல்லவா மிகைத்திருக்கும். அப்படி யிருக்க எந்தத் துணிச்சலில் இந்தத் தவற்றைச் செய்ய நினைக்கிறாய் என்று உள்ளத்திற்கு உபன்னி யாசம் செய்தார். உடனே அவரின் உள்ளம்அத்தவற்றை நினைப் பதையே விட்டுவிட்டது. அன்பர்களே...! நம் மனம் ஒரு தவற்றைச் செய்ய விரும்பினால் அதனுடன் போராடி வெற்றி கொள்ள வேண்டும். அகத்தின் உணர்ச்சியை அடக்கி ஒடுக்கிட அறிவுடையவனால் நிச்சயம் முடியும். நீங்கள் அறிவுடையவன் பட்டியலில் தானே இருக்கிறீர் கள்.

## புறம் பேசாதீர்கள்

உங்களுள் உள்ள விரோதத்தால் உங்களில் சிலர், சிலரைப்பற்றிப் புறம் பேசிக் கொள்ளாதீர். (ஏனெனில்) மரணித்து (மையத்தாக) கிடக்கின்ற உங்கள் சகோத ரனின் இறைச்சியை உங்களில் யாரும் (பிய்த்து) தின் பதற்கு விரும்புவீர்களா...? (நீங்கள் புறம் பேசுவதும் இதுபோன்றதேயாகும்)

**-அல்குர்ஆன்**

புறம் பேசுவதென்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா....? என நாயகம் (ஸல்) ஸஹாபாக்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வும் ரசூலுமே மிக அறிந்தவர்கள்

என்று ஸஹாபாக்கள் பதில் கூறினர். உங்களில் ஒருவர் தன் சகோதரர் வருந்தும்படியான ஒன்றைக் கூறுவதுதான் புறம் பேசுதல் எனப்படும் என நபி (ஸல்) நவின்றார்கள். அப்போது ஒருவர், 'நான் கூறும் குறை என் சகோதரரிடம் உண்மையிலேயே காணப்படுமாயின் அதுபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டார். நீர் கூறியது நிச்சயமாக அவரிடமிருக்கும் பட்சத்தில் நீர் அவரைப் பற்றிப் புறம் பேசியவரேயாவீர். அன்றி நீர் கூறியது அவரிடம் காணப்படவில்லையாயின் நீர் அவரின் மீது அவதூறு கூறியவராவீர் என்று நபி (ஸல்) நவின்றார்கள்.

ஒரு சமயம் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் ஒருவரைப் பற்றி இன்னார் அதிகமாகத் தூங்குகிறார் என்று கூறிக் கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பின் நாயகம் (சல்) அவர்களிடம் வந்து உணவிற்காகக் கொஞ்சம் கறி வேண்டுமென் றார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் தான் இப்போது சற்றுமுன் கறி தின்றீர்களே என்றார்கள். நாயகம் (ஸல்) அவர்களே! நாங்கள் எங்கே கறிதின்றோம். தற்போது அப்படியொன்றும் தின்னவில்லையே என்று வியப்புடன் பதிலளித்தார்கள். இல்லை இல்லை நீங்கள் உங்கள் சகோதரரின் கறியைத் தின்றீர்கள். (அதாவது உங்கள் சகோதரரைப் பற்றிப் புறம் பேசினீர்கள்) புறம் பேசுபவரும் அதைக் கேட்பவரும் இக்குற்றத்தில் சம மானவர்களே என நபி (ஸல்) நவின்றார்கள். அப் போதுதான் அவ்விருவருக்கும் தாங்கள் பேசிக்கொண்டி ருந்த விஷயம் நினைவுக்கு வந்தது. உடனே வருத்தப்பட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னிலையில் வெட்கித் தலை குனிந்தார்கள்.

புறம் என்பது நாவினால் மட்டும் உண்டாவதில்லை. அது கண்ணாலும், கையாலும் காதாலும் சமிக்கினை



யாலும், மனத்தாலும், எழுத்தாலும கூட ஏற்படும். இப்படி உண்டாகும் இவை யாவுமே ஹராமாகும்.

ஒருசமயம் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு பெண்ணை சமிக்கினையால் இவள் குட்டையானவள் எனச் சுட்டிக் காட்டினார்கள். உடன் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரலி) அவர்களைப் பார்த்து ....ஆயிஷாவே நீ புறம் பேசிவிட்டாய் என்றார்கள்.

பிறரின் குறையை நாவால் பேசுவது எப்படி ஆகாதோ, அதுபோலவே அவரின் குறையை அகத்தில் வைப்பதும் ஆகாது. அதுபோன்றே அக்குறையைக் கண்ணால் உற்று நோக்குவதும், காதால் கேட்பதும் (பிறருக்குக்) கையால் சுட்டிக் காட்டுவதும் சமிக்கினை செய்வதும், எழுதிக் காட்டுவதும் ஆகாது. ஹராமாகும்.

எந்த விஷயமும் தெளிவில்லாதபடி; புரிய முடியாத படி உங்கள் உள்ளத்தில் உதித்தால் அது ஷைத்தானின் ஏற்பாடாகும். அதை நீங்கள் நம்பிவிட வேண்டாம் என நபி (ஸல்) நவின்றார்கள்.

பிறரின் குறையைத் தெளிவாகத் தெரிந்திருந்தும் அதை அனைவர் மத்தியிலும் அறிவிப்பதற்கு அரு மையான வாயப்பு கிட்டியும் அதை அறிவிப்பதால் அனைவரும் ஆனந்தமடைவர் என்று தெரிந்திருந்தும் அதை அகத்தற்குள்ளேயே அடக்கிக் கொண்டு அமைதி யாகி விடுவோமேயானால் நம் உள்ளத்தில் ஓரளவு பக்குவம் ஏற்பட்டுள்ளதாகக் கருதலாம். வாய் வரை வந்த உணர்ச்சியை அப்படியே விழுங்கி உள்ளே தள்ளிவிட்டு அப்படி செய்ததற்காக ஆனந்தம் அடைவோமேயானால் அதைவிட ஒருபடி அதிகமாக உள்ளத்தில் பக்குவம் ஏற்பட்டதாக்க் கொள்ளலாம். ஆனால் அப்படிப்பட்ட சமயங்களில் பிறரைப் பற்றிய எவ்விதக் குறையுணர்வும் நம் உள்ளத்தில் உதயமே ஆகவில்லையென்றால் நம்

உள்ளமும், அறிவும் நன்கு முதிர்ந்து விட்டதாகக் கொள்ளலாம்.

நெருப்பு விறகைத் தின்பது போல புறம் பேசுவ தானது நன்மைகளைத் தின்றுவிடுகிறது.

-அல்ஹதீஸ்

எவர் மற்றொருவரைப் பற்றி புறம் பேசி விட்டாரோ அல்லது மற்றொருவரின் பொருளை அபகரித்துக்கொண் டாரோ அவர் கியாமத்து நாள் வருமுன் பாதிக்கப்பட்ட வரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளவும். ஏனெனில் இவர் மன்னிப்புக் கேட்கத் தவறிவிட்டால் கியாமத்து நாளில் இவரின் நன்மைகள் அவருக்கும், அவரின் தீமைகள் இவருக்கும் கொடுக்கப்பட்டுவிடும்.

-அல்ஹதீஸ்

ஒரு சமயம் ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு பெண்ணை பார்த்து, நீ பேச்சுக்காரி என்று சொல்லிவிட்டார்கள். உடனே நாயகம் (ஸல்) அவர்ள் ...ஆயிஷாவே நீ அப் பெண்ணைப் புறம் பேசி விட்டாய். ஆகவே உடனே அவ ளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள் என்றார்கள். பிறரின் குறைகளைத்த தேடிக் குற்றங்களை கூறித் திரிபவர்களை நீ பின்பற்ற வேண்டாம் என்று இறைவனே தனது திரு மறையில் எச்சரிக்கிறான். இதிலிருந்து புறங்கூறல் எவ்வளவு தரங்கெட்ட செயல் என்பதை அறிய முடிகிறது.

ஒருசமயம் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி "எனதருமை ஸஹாபாக்களே! உங்களில் மிகக் கெட்டவர் யார் தெரியுமா?" எனக் கேட்டார்கள். அவ சியம் அறிவிக்கும்படி அன்புள்ள ஷைஹாபாக்கள் ஆர் வத்துடன் கேட்டார்கள். அதுசமயம் அருமை நாயகம் (ஸல்) அவர்கள் 'உங்களில் எவர் புறம்பேசிக் கொண்டும், பொய் பேசிக்கொண்டும் ஒருவருக்கொருவர் சண்டை



மூட்டி விட்டுக் கொண்டும் இருக்கிறாரோ அவர்தான் உங்களில் மிகவும் கெட்டவர்' என விடை பகர்ந்தார்கள்.

அல்லாஹுத்தஆலா சொர்க்கத்தைப் படைத்து நீ பேசு என அதற்கு ஆணையிட்டான். உடனே அது பேசத் துவங்கியது. எவர் என்னிடம் பிரவேசிக்கின்றாரோ அவரே மேன்மைக்குரியவராவார் என்றும் இறைவன் மீதும் என்னுடைய மேன்மையின் பேரிலும், பெரு மையின் பேரிலும் ஆணையாகச் சொல்கிறேன்; எட்டு வகையான பேர்கள் என்னிடம் வருவதற்கு வழி கிடை யாது. அவர்கள் என்னிடம் வருவதற்கு அருகதையற்ற வர்களாவார்கள் என்றும் கூறியது.

அந்த எட்டு பேர்களாகிறவர்கள்:

1. மது அருந்தபவர்.

2. விபச்சாரத்தை பழக்கமாகத் தொடர்ந்து செய்து வருபவர்.

3. புறம் பேசுபவர்.

4. மானக்கேடானவர்.

5. நாடகங்கள், கச்சேரிகள் நடத்தும் நாடகத் தலைவர்கள்.

6. பிறப் பெண்கள்மீது மோகங் கொண்டலைபவர்.

7. பந்தபாசத்தை முறிப்பவர்.

8. நன்மையான விஷயங்களுக்காக இன்னது செய்கிறேன் என்று அல்லாஹுத்த ஆலாவின் மீது சத்தியம் கூறிவிட்டு அவ்விதம் செய்யாதவர்.

-அல்ஹதீஸ்

மூஸா (அலை) அவர்கள் காலத்தில் பனீ இஸ் ராயீல்களுக்கு ஓர் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது மூஸா (அலை) அவர்களும் அவர்களின் தோழர்களும் மழையை இறக்கித் தரும்படி அல்லாஹ்விடம் துஆக்

கேட்டார்கள். இவ்விதம் பலமுறை துஆக் கேட்டார்கள். ஆனால் துஆ ஒன்றும் அங்கீகரிக்கப்படவில்லை. இது கண்டுமூஸா (அலை) அவர்கள் மிகவும் கவலையுற்றார்கள். உடனே மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து, "ஓ மூஸாவே உங்களுடன் ஒரு புறம் பேசுபவர் இருக்கிறார்; அவரை அப்புறப்படுத்துங்கள்; உங்கள் துஆ அங்கீகரிக்கப்படும்" என சப்தம் வந்தது. அது கேட்டு மூஸா (அலை) அவர்கள். "இறைவா! எங்களிலிருக்கும் அந்தப் புறம் பேசுபவரைக் காண்பித்துக்கொடு. அவரை எங்களிலிருந்தும் நீக்கி விடுகிறோம்" என்றார்கள். அதற்கு இறைவன் புறம் பேசுபவன்மீது நான் பகைமை வைத்திருக்கும் போது நான் எப்படி புறம் பேசுவேன் என்று சொன்னான். உடனே மூஸா (அலை) அவர்கள் எல்லோரும் அவரவர்கள் தங்களின் பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேளுங்கள் என்றார்கள். அவரவர்களும் மன்னிப்புக் கேட்டனர். பின் மூஸா (அலை) அவர்கள் மழைக்காகத் துஆக்கேட்டார்கள். உடனே மழை பெய்தது என நாயகம் (ஸல்) அறிவித்தார்கள்.

-அல்ஹதீஸ்

ஒருவர் ஏழுவகையான கேள்விகளுக்கு பதில் தெரிய வேண்டுமெனப் பல ஆண்டுகள் முயற்சித்தார். இறுதியாக எழுநூறு மைல்களுக்கப்பால் ஒரு பெரிய கல்விமான் இருக்கிறார். அவரிடம் சென்றால் அதற்கான விடைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்று அவருக்குத் தெரிய வந்தது. உடனே அவர் அப்பெரியாரிடம் சென்று.....

1. பூமியிலும் அதிகம் பாரமானது எது?

2. வானத்தைவிட மிக விரிவானது எது?

3. கல்லினும் மிகக் கடினமானது எது?

4. நெருப்பினும் அதிக உஷ்ணமானது எது?



5. கடலினும் மிகப் பிரம்மாண்டமானது எது?

6. எத்தீம் எனும் அனாதையிலும் மிகச் சிறுமையாக உள்ளவர் எவர்?

7. ஜம்ஹரீர் எனும் நாற்ற தண்ணிரைவிடமிகக் கொடுமையானது எது? என்ற இந்த ஏழு வகையான கேள்விகளையும் கேட்டார்.

அதற்கு அப்பெரியார்:

1. பூமியினும் மிகப் பாரமானது, எக்குற்றமும் அறியாத அப்பாவிகள் மீது அவதூறு சுமத்துவது.

2. வானத்தைவிட மிக் விசாலமானது உண்மை உரைப்பது.

3. கல்லினும் மிகக் கடினமானது காபிர்களின் உள்ளம்.

4. நெருப்பைவிட வெப்பமானது பொறாமை

5. கடலினும் மிகப் பிரம்மாண்டமானது உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும் உள்ளம்

6. எத்தீம் எனும் அனாதையிலும் மிகச் சிறுமை கொண்டவன் மக்களின மத்தியில் புறம்பேசி பின் இவன் புறம் பேசுபவன் என மக்களால் அறியப்பட்டவன்.

7. தன் சக்திக்கு முடியுமாயிருந்தும் தன் இனபந்துக்களுக்கு உதவாதவன் ஜம்ஹரீர் என்னும் தண்ணீரைவிட நாற்றமானவன் என்று அவருக்கு அறிவித்தார்.

ஒருவர் உன்னிடம் புறம் பேசினால் அவரிடம் ஆறு விஷயங்களை நீ கையாள வேண்டும்.

1. அவர் சொல்வதை ஒப்புக்கொள்ளக்கூடாது.

2. அவனிடத்தில் அவன் கூறும் (புறம் பேசல்) விஷயத்தில் உள்ள கெடுதிகளை எடுத்துக் கூறி அவனுக்கு உபன்யாசம் செய்யவேண்டும்.

3. அல்லாஹ்விற்காக அவனைப் பகைத்து கொள்ள வேண்டும்.

4. புறம் பேசியதின் உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக புலன் விசாரித்துத் திரியலாகாது.

5. அவன்மேல் கெட்ட எண்ணம் கொள்வது கூடாது.

6. அவனின் பேச்சைக் கேட்பதில் வெறுப்புக் காட்டவேண்டும்.

மேலும் மேன்மை நபி (ஸல்) சொல்கிறார்கள்:

இரு நல்ல மனிதர்களுக்கிடையில் ஒருவர் விஷயத்தை மற்றொருவரிடம் கூறிப் பகையை மூட்டிவிடுபவன் புறம் பேசுபவனைவிட மிகக்கொடியவன். இங்கொன்று அங்கொன்றுமாக பேசுகிறானே அவனுக்கு மறுமையில் இரண்டு நாவுண்டாகும் என நபி (ஸல்) நவின்றார்கள்.

எவர் ஒரு பாவியான மனிதனின் முகஸ்துதியைக் கருதி அம்மனிதனை அதிகமாகப் புகழுகிறாரோ அவரின் மீது அல்லாஹ் கோபிக்கிறான். நாளை மறுமையில் மக்களை அதிகமாக புகழ்தின்ற மனிதனின் நாவு நீண்டு தரையில் தொங்கிக் கொண்டிருக்கும். அதை அவன் இழுத்து கொண்டே நடப்பவனாகவும் நடக்கும்போது அந்த நாவு அவன் காலில் மிதிபட்டு தடுமாறி விழுபவனாகவும் நடந்து வருவான் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

நான் மிஃராஜ் சென்றிருந்த சமயம் ஒரு கூட்டத்தினரைக் கடந்து சென்றேன். அவர்களின் கரங்களின் விரல்களில் நகங்கள் நீண்டு வளர்ந்திருந்தன. அவற்றால் அவர்கள், தங்களின் முகங்களில் கீறிக் கிழித்துக் கொண்டிருந்தார்கள் அப்போது நான் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் இவர்கள் யார் என்று கேட்டேன். இவர்கள் தான் தன் சகோதரனின் இறைச்சிகளைத் தின்றுகொண்டு (புறம் பேசிக் கொண்டு) தன் மானத்தைக் காற்றிலே பறக்க



விட்டுக் கொண்டிருந்தவர்கள் என்று ஜிப்ரீல் (அலை) விவரம் கூறினார்கள் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பெரும் பாவிகளைப் பற்றிக் குறிப்பிடுவது புறம் ஆகாது. ஒருவன் மறைவாகச் செய்த பாவங்களைப் பார்த்து எவன் வெளியிடுகிறானோ அவனைப் பற்றிக் குறிப்பிடுவது புறம் ஆகாது. எனத சமூகத்தார் அனைவரும் மன்னிக்கப்படக்கூடும். ஆனால் ஒருவன் மறைவாகச் செய்த பாவங்கைள்த தெரிந்து வெளியிடுபவனைத் தவிர என விரைவுடன் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

உன்னிடம் மற்றவரைப்பற்றி குறை கூறுபவன் உன்னைப்பற்றியும் பிறரிடம் குறைகூறுவான்.

-அலி (ரலி)

பிறரைக் குறை கூறுவதில் மனம் விருப்பம் கொண்டால் அது மனதில் ஏற்பட்ட ஒரு வியாதியாகும். அதை இரு வகையான சிகிச்சையைக் கொண்டு தீர்க்கவேண்டும். ஒன்று அறிவினால் ஆய்ந்து அப்படிப்பட்ட புறம்பேசும் செயலை விட்டுவிடும்படி உள்ளத்திற்கு உபன்யாசம் செய்தல். மற்றொன்று மற்றவர் குறையை நோட்டமிடுவதைவிடுத்து தன் குறையை நோட்டமிடுவதாகும்.

-இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

புறம் பேசுபவனின் பட்டோலையில் உள்ள நன்மைகளையெல்லாம் எடுத்து புறம் பேசப்படுபவனின் பட்டோலையில் எழுதப்படுகிறது. இதனால் புறம் பேசியவன் நாளை மறுமையில் எவ்வித நன்மையில்லாமல் நிர்க்கதியாளனாகி விடுவான்.

-இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

மனிதன் எட்டு விஷயங்களைக் கருதி புறம் பேச நிர்ப்பந்தமாகிறான்.

1. ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிறர்மீது கோபம் கொள்வதால்.

2. ஒருவரின் பொருத்தத்தை அடைவதற்காக.

3. தான் செய்த குற்றத்தை மறைத்து அதிலிருந்து விடுதலை பெறுவதற்காக.

4. தன்னை பிறர் புகழ வேண்டுமென்பதற்காக.

5. பிறர் மீது பொறாமை கொண்டிருப்பதின் காரணமாக.

6. ஒருவனை இழிவுபடுத்த வேண்டுமென்பதற்காக.

7. ஒருவன் மீது நிகழ்ந்த பாவத்தினால் அவன் மீது பரிதாபப்படுவதற்காக.

8. ஒருவன் செய்த குற்றத்தினால் இறைவனுக்காக அவன் மீது ஆத்திரம் அடைவதினால் ஆகிய இந்த எட்டு விஷயங்களுக்காக மனிதன் புறம் பேச முற்படுகிறான்.

(இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

ஆகவே அல்லாஹ்வின் அடியானே உன் நாக்கால் நல்லதையே பேசு. இனிய சொற்கள், இனிய விஷயங்கள் இருக்கும்போது, கடிந்த சொற்களை, மற்றவர்களைப் பற்றிய கறையான சொற்களைப் பேசலாமா? பழங்கள் பரவிக் கிடக்கம்போது, காயையா நீ கரத்திலெடுக்க வேண்டும்! என் இந்த கனிவான வினாவைப் பணிவான உன் நெஞ்சம் முனிவோடு நோக்காது என நான் நிச்சயம் நம்புகிறேன். அன்பனே! குறையப்பேசு நிறையசெய். ஆயிரம் நற்குணங்கள் குடிக் கொண்டிருக்கும் ஒருவனிடம் ஓரிரண்டு குறைகள் இருக்கின்றன என்ற காரணத்துக்காக அவனைக் குறைசொல்லிவிடாதே, அடுத்தவரைப் புறம் கூறி உன் குலையா வாழ்வைக் குலைத்துக் கொள்ளாதே. குறையுள்ளதாக ஆக்கிவிடாதே.



## வட்டி வாங்காதீர்கள்

உண்மையாளர்களே! உறங்கும் போது நம் உதிரத்தைக் குடித்தே உயிர் வாழ்கிறது ஒரு பூச்சி. அதன் பெயர் மூட்டை. உழைக்காமலே உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமலேயே பலரது ஏழ்மையைச் சுவைத்து சுகம் கொள்கிறது ஒரு பூச்சி. அதன் பெயர் வட்டிக்காரன். அது ஐயறிவுப்பிராணியல்ல ஆறறிவு மிருகம். பணம் எப்படிக் கனக்கும் எப்படிக் சுத்தும், எப்படிக் கொத்தும் என்பதையெல்லாம் அந்த மிருகம் தெளிவாகத் தெரிந்து வைத்துள்ளது. வியாபாரி மக்களுக்குப் பண்டங்களைக் கொடுத்துப் பணம் வாங்குவார். ஆனால் இந்தப் பணவியாபாரியோ, பாமர மக்களிடம் பண்டத்தை வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பான். தனது வாடிக்கையாள னின் வாழ்வில் வளங்கொழிக்க வேண்டும் என முதல் வியாபாரி எண்ணுவான். ஆனால் இந்த இரண்டாம் வியாபாரியோ தனது வாடிக்கையாளர் வீட்டிலிருப் பதையும் வீட்டினை அலங்கரிப்பவள் கழுத்தில் போட்டிருப்பவை அனைத்தும் தனது கல்லாப் பெட் டிக்கு வராதா, வந்த பிறகு அவர்கள் நொந்து வறுமையில் வெந்து சாக்மாட்டார்களா என்று ஏங்குவான்.

பிணமாகி பூமியில் புதைந்துபோன வின்னும்கூட அங்கும் புதையல் இருக்கிறதா என்று புரண்டு பார்ப் பான். இந்தப் பூலோகப் புண்ணியவான்! செத்தவனின் வீட்டிற்குப் போனாலுங்கூட அவனது சொத்தைச் சுரண்டுவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பான் இந்த சொரணை கெட்டவன். பிணத்தின் கை விரல்கள் மூடி யிருந்தால்கூட அதனுள் ஏதேனும் அடங்கிக் கிடக்கிறதா என்று அழுதுகொண்டே ஆசையுடன் தடவிப்பார்த்து விடுவான் இந்தப் பண்பாளன்! தங்கப்பல் கட்டியிருப்ப வர்கள் சிரித்தால்கூட அதெல்லாம் உதிர்ந்து தன்

பெட்டிக்குள் வராதா எனப் பெருமூச்சு விடுவான் இந்த விடாக்கண்டன். மொத்தத்தில் பணத்தையும் பாத்திரங் களையும், நகைகளையுமே கண்களால் பார்த்து அவற்றின் மணத்தை மூக்கால் நுகர்ந்து அதன் சத்தை வாயினால் சுவைத்து வயிறு நிறைந்து மகிழ்வான் இந்த வேதனைக் குரியவன். தனக்காகவே மக்கள் மத்தியில் வறுமையை பரவவிட்டிருக்கிறான் இறைவன் என்று எண்ணுகிறான், இந்த நாயினும் கீழானவன். இரத்தத்தை உறிஞ்சும் கொசுக்கூட பணத்தை உறிஞ்சும் இந்த மாபாவியிடம் போவதற்கு அஞ்சும். மாட்டின் மடியிலிருந்து பாலைக் கரப்பது போல மனிதன் மடியிலிருந்து பணத்தை கரந்துவிடுவதில் கைதேர்ந்தவன் இந்த வட்டிக்காரன்.

இப்படிப்பட்ட இந்த வட்டியைப் பற்றியும் வட்டி வாங்குபவனைப் பற்றியும் இறைவன் திருமறையில் என்ன சொல்கிறான் பார்ப்போம்:

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் வட்டிப் பொ-ருளை உண்ண வேண்டாம். நாம் ஏவியதைச் செய்ய நீங்கள் தயாராக இருங்கள். அவ்விதம் இல்லையாயின் இறைவனோடும் அவனது ரசூலோடும் யுத்தம் செய்யச் சித்தமாயிருங்கள்.

-அல்குர்ஆன்

வட்டிப் பொருள்களை புசிப்பவர்கள் நிச்சயமாக நெருப்பைத் தவிர வேறெதையும் புசிக்கவில்லை.

-அல்குர்ஆன்

வட்டிப் (பொருள்களை) உண்பவர்கள் ஷைத்தான் பிடித்தவர்களைப் போலன்றி வேறுவிதமாக (தங்களின் மண்ணறையிலிருந்து) எழமாட்டார்கள்.

-அல்குர்ஆன்



அல்லாஹ் வட்டியைத் தேய்த்து அழித்து அறங்களை வளர்க்கிறான் இன்னும் பாவம் செய்து (அல்லாஹ்வை) நிராகரிப்போர் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

-அல்குர்ஆன்

இனி இறைத்தூதரின் மணிமொழிகளைக் கேட் போம்! நான் மிஃராஜ் சென்றிருந்த சமயம் என் தலைக்கு மேற்புறமாக இடியின் சப்தத்தைவிட மிகக் கொடூரமான பயங்கர சப்தத்தைக்கேட்டு அதுஎன்ன சப்தம் என்று, சப்தம் வந்த திசையை நோக்கிப் பார்த்தேன். அங்கு சில ஜனங்களின் வயிறுகள் குதிரையின் வயிற்றைப்போல பருத்துஇருந்ததைக் கண்டேன். அதனுள் பாம்புகளும் தேள்களும் நிறைந்திருந்தன. அதன் வேதனை தாளாமலேயே அந்த ஜனங்கள் மிகவும் பயங்கரமாகச் சப்தம் போடுகிறார்கள் உடனே நான், இவர்கள் யார்...? இவர்கள் என்ன தவறு செய்தவர்கள் என ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் கேட்டேன் அதற்கு இவர்கள்தான் வட்டியைத் தின்றவர்கள் என ஜிப்ரீல் (அலை) அவர்கள் பதிலளித்தார்கள் என நாயகம் (ஸல்) அறிவித்தார்கள்.

மேலும் கூறுகிறார்கள்: 'வட்டிப் பொருள்களை உண் பவர்கள் கியாமத்து நாளில் இறைவனின் தரிசனத்தை விட்டும் புறக்கிணக்கப்பட்டவர்களாகவும் கை சேதப் பட்டு கைகளைப் பிசைந்தவர்களாகவும் இருப்பார்கள். பைத்தியக்காரன் தன் கைகளில் கிடைத்த பொருள்களை எப்படி வீசி எறிகின்றானோ அதைப்போலவே அவர் களையும் மலக்குகள் நரகத்தில் வீசி எறிந்துவிடுவார்கள்.

-அல்ஹதீஸ்

எவர் வட்டிப் பொருள்களில் ஒரு திர்ஹம் அளவு புசித்தாரோ அவர் தன் தாயாரிடம் முப்பது தரம் விபச்சாரம் செய்தவர் போலாவார்.

-அல்ஹதீஸ்

வட்டிவாங்குபவன் வட்டி கொடுப்பவன் வட்டிக் கணக்கை எழுதுபவன், அதன் பேரில் சாட்சி சொல்பவன் வசூல் செய்பவன், கைகளில் பச்சை குத்துகிறவன், பச்சை குத்திக்கொள்பவன், தலாக்விட்ட மனைவியை முறை தவறி மனைவியாக ஏற்றுக்கொண்டவன் தன்மீது விதியான ஜகாத்தை கொடாதவன், ஆகிய இவர்கள் அனைவர் பேரிலும் இறைவன் லஃனத்து செய்கிறான்.

-அல்ஹதீஸ்

பின் ஒரு காலம் தோன்றும். அக்காலத்திலே ஐந்து விஷயங்கள் சர்வசாதாரணமாக நிகழும்;

*1. வட்டிப் பொருள்களை உண்பது;*

*2. விபச்சாரம் செய்தல்;*

*3. கொடுக்கல்-வாங்கலில் பொய்ச் சத்தியம் செய்தல்;*

*4. அளவை, நிறுவைகளில் குறைப்பு செய்தல்;*

*5. அல்லாஹு-தஆலாவின் ஆணைகளை அலட்சியம் செய்தல்;*

இவ்வைந்து கருமங்களும் நிறைந்திருக்குமேயானால், இறைவன் அக்காலத்தில், மக்களுக்கிடையே பற்பல வியாதிகளைக்கொண்டும். சண்டை சச்சரவு, பித்னா பஸாது முதலியவைகளைக் கொண்டும் சோதிப்பான்.

-அல்ஹதீஸ்

இறைவன் கூறுகிறான்:

கியாமத்து நாளில் வட்டி உண்பவர்களைத் தவிர, மற்ற மக்களெல்லாம் இறைவனின் சமூகத்தில் தங்களின் கேள்வி கணக்குகளின் தீர்ப்புகளை எதிர்பார்த்து நிற்பார்கள். ஆனால் வட்டி வாங்கியவர்கள், எல்லோருடைய கேள்வி கணக்குகளும் முடியும் வரை பைத்தியம்



பிடித்தவர் போலும் ஷைத்தான் பிடித்தவர் போலும் நிற்பார்கள் என இறைவன் கூறுகிறான்.

-அல்குர்ஆன்

சகோதரர்களே, மீண்டும் இக்கருத்தை ஒட்டிய நாயகம் (ஸல்) அவர்களின் கருத்தை கவனியுங்கள்.

ஒருவர் எந்த அளவிற்கு வட்டிப் பொருள்களை உண்டாரோ, அந்த அளவு அவர்களின் வயிற்றில் இறைவன் நெருப்பை நிரப்புவான். அவன்மீது இறைவனின் கோபம் எக்காலமும் நிலைத்திருக்கும். அவனிடம் அந்த வட்டிப் பொருள் இருக்கும் காலமெல்லாம் அவன் மீது இறை வனின் லஃனத்து இறங்கிக்கொண்டே இருக்கும்.

வட்டி வாங்கியவன் சிலைக்கு வணக்கம் செய்தவன் போல் இருக்கிறான். எந்த சரீரம் வட்டியினால் வளர்க்கப்படுகிறதோ, அந்த சரீரம் முழுவதும் நரகத்தில் வெந்து முடியும்வரை அவன் சொர்க்கம் புகமுடியாது.

-அல்ஹதீஸ்

வட்டிப் பொருளைத் தின்றவன் கப்ரிலிருந்து மிகுந்த நாற்றத்தோடு எழுப்பப்படுவான்.

-அல்ஹதீஸ்

அளவை நிறுவைகளில் குறைப்பதும், கூட்டிநிறுத்து, வாங்குவதும், குறைத்து நிறுத்துக் கொடுப்பதும், அடமானம் வாங்கிய வீட்டில் குடியிருப்பதும், அடமானப் பொருள்களைப் புழங்குவதும், வியாபாரத்திற்குப் பணம் கொடுத்து ஆண்டுக்கு இவ்வளவு கொடுத்து விட வேண்டும்-நஷ்டத்திற்கு நான் பொறுப்பில்லை என்று கண்டித்து

பேசிக்கொள்வதும், அதன்படியே வாங்குவதும் ஆகிய இவை அனைத்தும் வட்டியில் சேர்ந்தவைகளாகும்.

ஐந்து செயல்கள் செய்வதால் ஐந்துசெயல்களுண்டாவதை பயந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) நவின்றார்கள்.

1. அளவைகளை குறைத்து அளப்பதால், தானியங்களின் விளைச்சல் குறைந்துவிடும். பழங்களின் உற்பத்தியும் குறைந்துவிடும்.

2. வாக்குறுதியை புறக்கணித்து நடப்பதால் அவர்கள் பேரில் பகைவர்களை அல்லாஹ் மிகைப்படுத்துகிறான்.

3. ஜக்காத்து விதியானவர்கள் "ஜக்காத்" கொடாததால், இறைவன் மழை இறக்குவதை குறைத்துவிடுகிறான். (அந்நிலையில்) ஏனைய ஜீவ ஜந்துகள் மட்டும் இல்லாமல் இருப்பின் ஒருதுளி மழையைகூட இறைவன் இறக்கமாட்டான்.

4. பாவங்கள் செய்வதில் வெட்கமின்றி பகிரங்கமாகச் செய்வதால், அவனது குறைகள் வெளிப்படுத்தப்பட்டு அவன் தூற்றப்பட்டு இழிவாக்கப்படுகிறான்.

5. குர்ஆனுடைய கட்டளைகளுக்கு மாற்றம் செய்வதினாலும், அநியாயங்கள், அட்டகாசங்கள், செய்வதினாலும், பலாய்கள் இறக்கி வைக்கப்படுகின்றன. இதனால் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு மடிவார்கள்.

-அல்ஹதீஸ்



நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தில் நெருப்பிலான வண்டுகளும், குளவிகளும் இருக்கும். எவனாவது தன் கழுத்தில் ஒரு திர்ஹம் அளவேனும் ஹராமான பொருளைப் போட்டிருப்பானாயின் அவன் அப்பாலத்தைக் கடக்கும்போது அவ்வண்டுகள் அவனது கால்களைப் பிடித்திழுக்கும். அப்போது அத்திர்ஹத்தை, யாரிடம் இவன் ஹராமாக வாங்கினானோ அவனுக்கு. இவனது நன்மையிலிருந்து வாங்கிக் கொடுக்கும்வரை இவன் அப்பாலத்தைவிட்டு கடக்க முடியாது. இவனிடம் நன்மை இல்லையேல் திர்ஹத்தைக் கொடுத்தவனின் தீமையிலிருந்து திர்ஹத்தின் அளவு இவனுக்கு தீமை கொடுக்கப்பட்டு நரகத்தில் புகுத்தி வைக்கப்படுவான்.

-அல்ஹதீஸ்

கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர்களே! வட்டித்தொழிலைப்பற்றி இறைவனும் இறுதித் தூதரும் எவ்வளவு இழிவாக கூறியிருக்கிறார்கள் பார்த்தீர்களா. ஆகவே அன்பர்களே....வருவாய் பெருக வேண்டுமென்பதற்காக வட்டித்தொழிலை நடத்தி வருவாயைப் பெருக்க வேண்டுமா! வேறு எத்தனையே ஹலாலான முறையான வழிகள் இல்லையா? வறுமையில் வாடி, வதங்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும்கூட வட்டிக்குப் பணம் வாங்கி வாழ்வு நடத்த வேண்டுமென்று எண்ணாதீர். வட்டி நம்மை பாழ்நரகத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

இந்த சாக்கடை நாற்ற வயிற்றை வளர்ப்பதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது? இந்த உடலை இறுதியிலும் மண்ணும், கரையான்களம், புழுக்களும் இரையாக்கிக் கொள்ளும், நாற்றமெடுத்து அழுகி உக்கி மக்கிப் போகும் இந்த உடலை வளர்ப்பதையா பெரும் சாதனையாக எண்ணுகிறீர்கள்? சிந்தித்துச் செயல்படுங்கள் நல்வழியில் வாழ வழிவகுத்துக் கொள்ளுங்கள்.

## வியாதியஸ்தர்களை (மினவுங்கள்) நலம் விசாரியுங்கள்

நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

வியாதியஸ்தர்களை மினவுங்கள். ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்லுங்கள். மேலும் மறுமையின் அமளியை ஞாபகம் செய்து கொள்ளுங்கள்.

-அல்ஹதீஸ்

ஒருவன் ஒரு சிறந்த ஸாலிகானவியாதியஸ்தனை மினவத் தன் வீட்டை விட்டு புறப்பட்டால் அவனுக்காக பன்னிரண்டாயிரம் மலக்குகள் பிழை பொறுக்கத் தேடிக் கொண்டே அவனுடன் செல்கிறார்கள். அவன் வியாதி யஸ்தனை மினவிட்டு தன் வீடு வந்து சேரும்வரை அவனுக்காக அம்மலக்குகள் பிழை பொறுக்கத் தேடிக் கொண்டே வருகிறார்கள்.

-அல்ஹதீஸ்

வியாதியஸ்தனை மினவுகிறவன் இறைவனின் அருளில் புகுந்துவிட்டான். இறைவனின் அருள் என்னும் கடலில் மூழ்கிவிட்டான்.

-அல்ஹதீஸ்



வியாதியஸ்தனை மினவச் செல்பவர் தனது கையை வியாதியஸ்தரின் நெற்றியிலும், கண்ணிலும் வைத்து வியாதியின் நிலைப் பற்றி விசாரிக்க வேண்டும். என்றாலும் (முஸாபஹா) கைக் கொடுத்துக் கொள்வது, சிறப்பாகும்.

-அல்ஹதீஸ்

வியாதியஸ்தர்களை மினவுவது சொர்க்கத்தின் அருகில் செல்வது போலாகும்.

-அல்ஹதீஸ்

நோயில் ஆழ்ந்து, பாயில் வீழ்ந்தவன் சேய்மையில் இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும், அவன் இல்லம் சென்று அவனைக் காண்பது அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கும் ஸலாம் கூறுவது அவனுக்கு தேறுதலைக் கொடுக்கும். உடலும், உள்ளமும் ஒன்றையொன்று தொடர்பு கொண்டவை, உடலின் நோய் உள்ளத்தை பாதிக்கும். உள்ளத்தின் நோய் உடலை பாதிக்கும். ஆகவே தேகத்தில் ஏற்பட்ட நோயின் வேகத்தால் சோகத்தில் மூழ்கி இருக்கும் அவனின் இதயத் தாகத்துக்கு நமது சந்திப்பு ஒரு சிறந்த டானிக்காகும். அதுவும் மகிழ்ச்சியாக நாம் உரையாடுவோமாயின் தளர்ச்சி அடைந்த அவனது உள்ளமும்கூட மலர்ச்சி பெற்று அந்த உள்ள மலர்ச்சி உடலிலும் பிரதிபலிக்கும்.

நோயாளியின் கரந்தொட்டு சிரந்தொட்டு நாம் நவிலும் நம்பிக்கை உரைகள் கசப்பான மருந்தைக் கூட களிப்போடு அவரைப் பருகச் செய்யும். டாக்டரின் மருந்து உடலுக்கு, நாம் தரும் அன்புரை எனும் மருந்து மனதுக்கு; இரண்டு மருந்தையும் இணைத்து அருந்துப

வன் விரைவிலே குணம்பெறக் கேட்கவா வேண்டும்...? இந்த அடிப்படையின் தத்துவத்தை கொண்டே வியாதியஸ்தனை மினவுவதை நாயகம் (ஸல்) சுன்னத்தாக ஏற்படுத்தியுள்ளார்கள். இது போன்றேதான் நாயகம் (ஸல்) அவர்களின் ஏனைய ஒவ்வொரு சுன்னத்திலும் பெரும் தத்துவங்கள் அடங்கியுள்ளது. அறிவான விஷயங்களை ஆராய்ச்சி செய்பவர்களால் மட்டுமே உணரமுடிகிறது. இல்லையா-?

## துஆவில் ஓர்மை வேண்டும்.

(இறைவன்) என்னிடம் பிரார்த்தனை செய்யுங்கள் நான் உங்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

-அல்குர் ஆன்

எனது அடியார் என்னை அழைப்பாராயின் நிச்சயமாக நான் (அவருக்கு) மிக சமீபத்தில் இருக்கிறேன். அழைப்போரின் அழைப்புக்கு பதில் சொல்பவனாகவும் இருக்கிறேன்.

-அல்குர் ஆன்

தூய உணர்வோடு துஆக் கேட்கும் அன்பர்களே! துஆவைப்பற்றி திருநபி (ஸல்) திருவாய் மலர்ந்தருளியவற்றில் ஒரு சிலவற்றை தருகிறோம். இதோ படியுங்கள்.

துஆக் கேட்பது வணக்கத்தின் முக்கிய அம்சமாய் இருக்கும். துஆக் கேட்பது ஒரு சிறந்த வணக்கமாக இருக்கும்.

-அல்ஹதீஸ்

இறைவனிடம் துஆவைவிட மிகைத்த சங்கையான பொருள் வேறொன்றுமில்லை.



-அல்ஹதீஸ்

துஆக் கேட்பதை விடுவது பாபச் செயல்களுள் ஒன்றாகும் எவர் துஆக் கேட்கவில்லையோ அவர்மீது அல்லாஹ் ஆத்திரப்படுகிறான். துஆக் கேட்பது முஃமினானவர்களின் ஆயுதமாகும். அநீதத்திற்குள்ளான மக்களின் துஆவை இறைவன் உடன் அங்கீகரிக்கிறான்.

-அல்ஹதீஸ்

அநீதத்திற்கு ஆளாக்கப்பட்டவரின் துஆவிற்குப் பயந்து கொள்ளுங்கள். ஏனெனில் இறைவனுக்கும், அவனது துஆவிற்குமிடையே எத்தகைய திரையும் கிடையாது.

-அல்ஹதீஸ்

ஒரு சமயம் மூஸா (அலை) அவர்கள் கஃபத்துல்லாவிற்குச் சென்று தவாபு செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மனிதர் கஃபாவின் திரையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர்விட்டு அழுது புலம்பியவாறு துஆக் கேட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அம்மனிதர் அப்படியே அதிகநேரம் அழுது கண்ணீர் வடித்து துஆக் கேட்டுக்கொண்டிருந்தார். அதைக் கண்ட மூஸா (அலை) அவர்கள் அவர்மீது பெரிதும் இரக்கம் கொண்டார்கள், நெஞ்சம் நெகிழ்ந்தார்கள். அந்நிலையில் அல்லாஹ்வை இறைஞ்சியவராக "இறைவா! பிரார்த்தனைகளை அங்கீகரிக்கும் சக்தியை மட்டும் நீ எனக்கு கொடுத்திருப்பாயேயானால் இம்மனிதனின் துஆவை நான் அங்கீகரித்திருப்பேன். அந்த அளவுக்கு இம்மனிதர் அழுது பிராத்தனை புரிகிறாரே" என்று உள்ளம் உருக மூஸா (அலை) கூறினார்கள். அது கேட்டு இறைவன் "ஓ...மூஸாவே! நீர் அம்மனிதனின் வெளிக்கோலத்தைத் தான் அறிவீர். உள்கோலத்தை அறியமாட்டீர். அம்மனிதன் அழுது புலம்பினாலும் அம்மனிதனின் மனம்

தாம் மந்தையில் விட்டு வந்த ஆடுகளின் நிலை என்ன வாயிற்றோ என்றெண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறது ஆகவே அவரது துஆவை எப்படி அங்கீகரிப்பது" என்று இறைவன் கூறினான்.

அன்பனே! அழுகை உன் கண்களிலிருந்து உரு வானால் மட்டும் போதாது. உனது உள்ளத்திலிருந் தும் உருவாகவேண்டும். உள்ளொன்று வைத்துப் புற மொன்று கூறும் கள்ளர்கள் கள்ளமில்லா வெள்ளை மனம் கொண்டோரை வேண்டுமானால் கொள்ளைக் கொள்ளலாம். ஆனால், ஹக்கனிடம் அந்த வேஷம் பலிக்காது. உளமாற உருகி உண்மையாக உருகி துஆச் செய்யவேண்டும்.. நமது இறைவன் நம்மை உற்றும் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து துஆக் கேட்போமானால் அல்லாஹு ௬த்தஆலா நம்மை அன்போடு நோக்குகிறான், என்பதில் ஐயமில்லை.

ஒருசமயம் உமர் (ரலி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத் திற்கு அழுதுகொண்டே வந்தார் க்ள். இதைக்கண்ட நாயகம் (ஸல்) அவர்கள், "ஓ....உமரே ஏன் அழுதுகொண்டே வருகிறீர்" என்றுகேட்டார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள் "நாயகம் (ஸல்) அவர்களே! நான் இங்கே வரும்போதுவெளியே வாசலின் அருகில் ஒரு வாலிபர் அழுதுகொண்டிருந்தார். அவர் அழும் கோலத்தை கண்டவுடன் எனக்கு அழுகை பீறிட் டெழுந்துவிட்டது' என்றார்கள். உடனே நாயகம் (ஸல்) அவர்கள் "அப்படியாயின் அவரை உள்ளே அழைத்து வாருங்கள்" என ஆணையிட்டார்கள். ஆணையின்படி அவ்வாலிபர் உள்ளே அழைத்து வரப்பட்டார். அப்போதும் அவ்வாலிபர் அழுகையை விட்ட பாடில்லை, மிகவும் தேம்பித் தேம்பி அழுதார். உடனே நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாலிபரை நோக்கி "நீ ஏன் இப்படி தேம்பித் தேம்பி அழுகிறாய்" எனக் கேட்டார்கள்.



அதற்கு அவ்வாலிபர் "நாயகமே! நான் செய்த பா வம் என்னை அழுக வைத்துவிட்டது. இறைவனின் தண்ட னையை எண்ணி, எண்ணி அழுகிறேன்" என்று பதிலிறுத்தார்.

அது கேட்ட நாயகம் (ஸல்) அவர்கள் அப்படி என்ன பெரும் பாவம் செய்துவிட்டாய்? யாரையாவது கொலை செய்து விட்டீரா...? அல்லது இறைவனுக்கு இணை வைத்து விட்டீரா...? என்று கேட்டார்கள். "அப்படிப் பட்ட எந்த தவறும் நான் செய்யவில்லை நாயகமே" என்று அவர் கூறினார். அப்படியானால் உன்பாவம் ஏழு வானங் களையும், பூமிகளையும்விட பெரிதா? என்று கேட்டார் கள். நாயகம் (ஸல்) அவர்களே! நான் செய்த பாவம் ஏழு வானங்களை விடவும் ஏழு பூமிகளை விடவும், மலைகளை விடவும் பெரியது, என்றார் வாலிபர். அப்படியானால் அல்லாஹு ௬த்தஆலாவின் அர்ஷை விடவும் பெரியதா! எனக்கேட்க, ஆம் அல்லாஹு ௬த்தஆலாவின் அர்ஷை விடவும் என் பாவம் பெரிது என்றார். ஏ! வாலிபரே, உன் பாவம்பெரியதா அல்லாஹ் பெரியவனா? எனக் கேட்க அல்லாஹ்தான் பெரியவன் என்றார். அப்படியானல் உன் பாவத்தைச் சொல்" என்று கேட்டார்கள். என் பாவத்தைச் சொல்ல நான் வெட்கப்படுகிறேன், நாயகமே என்றார் வெட்கப்படவேண்டாம் சொல் என நாயகம் (ஸல்) மீண்டும் கேட்டார்கள்.

உடனே வாலிபர் 'கோ'வென்று கதறியழுது கொண்டு "நாயகம் (ஸல்) அவர்களே! நான் கடந்த ஏழு ஆண்டுகளாக புதைகுழிகளில் புதைக்கப்படுகின்ற மையத் துக்களை தோண்டி எடுத்து அதன் கபன் துணிகளைக் களைந்து எடுத்து அத்துணிகளை விற்று என் ஜீவியத்தை நடத்தி வந்தேன். ஓரிரு தினங்களுக்கு முன்பு அன்ஸாரி குலத்திலுள்ள இளம் பெண்மணி ஒருவள் மரணித்து விட்டாள். அவளை அடக்கம் செய்துவிட்டு மக்கள் சென்

றதும் நான் அவளின் கப்ரை தோண்டி அவளுக்கு அணி விக்கப்பட்டிந்த கஃபன் துணிகளை உரிந்து எடுக்கும் போது அவளது அழகைக்கண்டு எனக்கு காம இச்சை ஏற்பட்டு விட்டது. உடனே மையத்தாக இருந்த அவளிடம் எனது இச்சையை நிறைவேற்றி விட்டேன். அப்போது அம்மையத்திலிருந்து "ஓ....மனிதரே! உனக்கு அல்லாஹு த்தஆலாவின் அச்சம் ஏற்படவில்லையா? என்னை இத்தனை பேருக்கு மத்தியில் முழுக்குடையவளாகவும் நிர்வாணமாகவும், ஆக்கிவிட்டாயே! என்றொரு சப்தம்வந்தது, அதைக்கேட்டதும் நான் நடுநடுங்கி விட்டேன். இது தான் நான் செய்த மோசமான பாவம்" என்று கூறினார் அவ்வாலிபர்.

இதைக் கேட்டதும் நாயகம் (ஸல்) அவர்கள் ஓ...வாலிபனே! நீ இங்கிருந்து சென்றுவிடு! என்றுரைத்தார்கள். அவ்வளவுதான், கனிவான சொற்களையே கூறிய அந்த கண்ணிய நபியின் நாவிலிருந்து வந்த கஷ்டமான சொற்களை கேட்டதும் அந்த வாலிபரின் அழுகை அதிகமாகியது. அழுதுகொண்டே அந்த வாலிபர் வெளியே ஓடினார். என்ன செய்வது ஏது செய்வதென்றே தெரியாமல் கைகால்களையெல்லாம் உதறியவண்ணம் ஓடினார் பதரிய வண்ணம் ஓடினார். ஓடினார் ஓடினார்...நகரத்தைவிட்டே ஓடினார். காட்டை நோக்கி ஓடினார், ஜனசஞ்சாரமற்ற பாலைவனத்தில் போய் விழுந்தார், உருண்டார், மருண்டார், இறைவன் நம்மை என்ன செய்வானோ என மிரண்டார். ஊண் இல்லை உறக்கமில்லை, கிரக்கத்தால் தடுமாறினார். பித்துப் பிடித்து பைத்தியம்போல மனம் நொந்த வார்த்தைகளைச் சொல்லிச் சொல்லி அழுதார். ஒரு நாளல்ல இரு நாளல்ல ஏழு நாட்களாக அவரது இந்த சோகநிலை நீடித்தது.

இறுதியாக ஸஜ்தாவில் இருந்து கொண்டே இறைவா! நான் உனக்கு மாறு செய்த பாவியாக



இருக்கிறேன். எனது பாவத்திற்காக யாரிடம் பரிகாரம் கிடைக்குமென நம்பிச் சென்றேனோ அவ்வுத்தமநபி (ஸல்) அவர்களே என்னை விரட்டிவிட்டார்கள். இனி யாரிடம் போவேன்! என் பாவத்தைக் கேட்டு நாயகம் (ஸல்) அவர்களே சகிக்கவில்லை என்றால் வேறு யார் தான் இந்த பூவுலகில் சகிக்க முடியும்...? கிருபையுள்ள ரஹ்மானே! உன்னைத் தவிர என் பாவத்தை மன்னிப்பவர் வேறு யாரும் கிடையாது; என் பாவத்தை மன்னித்து எனக்கு கிருபை செய். இல்லையேல் ஒரு நரக நெருப்புப் பொறியை அனுப்பி என்னைக் கரித்து சாம்பலாக்கி விடு என்று மண்டியிட்டு மன்றாடி மனம் உருகிப்பிரார்த்தித் தார் அவரின் துஆவை அல்லாஹு த்தஆலா ஏற்றுக் கொண்டான்.

அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் திருச்சமூகம் வந்து "இறைத் தூதரே! இறைவன் உங்களுக்கு ஸலாம் கூறினான். மேலும் அவன் தன் அடியார்களில் ஒருவரைத் தங்களிடம் அனுப்பி னான். அவ்வடியார், தன் பாவத்தை கூறியபோது அவரை நீங்கள் விரட்டிவிட்டீர்களே என்று கேட்கிறான். தங் களைப் பாவிகளுக்கு மன்றாடக் கூடியவர்களாக அனைவருக்கும் அருட்கொடையாக அகிலத்திற்கு அனுப்பிவைத்த அந்த அளவற்ற அருளாளன் அந்த அடியாரின் பாவத்தை மன்னித்து விட்டதாக கூறினான். மன்னிக்கக் கூடியவனாக நான் இருக்கும் போது நீங்கள் ஏன் அவ்வடியாருக்காக என்னிடம்மன்றாடக்கூடாது? எனக் கேட்டான் என்றுரைத்தார்கள். உடன் நாயகம் (ஸல்) அவர்கள் பதறிப்போய் அவ்வாலிபரைத் தேடி அழைத்து வருமாறு சஹாபாக்களிடம் கூறினார்கள். உடனே ஸஹாபிகளில் சிலர் அவரைத் தேடிப்பிடித்து இறைவன் தங்கள் பாவத்தை மன்னித்து விட்டான் என்றுகூறி அவரை அழைத்து வந்தார்கள். அப்போது மஃரிபு தொழுகை நடந்து கொண்டிருந்தது. ஸஹாபி

களும அவ்வாலிபரும் ஒலுச் செய்து கொண்டு தொழுகையில் சேர்ந்து கொண்டார்கள்.

அந்த நேரத்தில் நாயகம் (ஸல்) அவர்கள் 'அல் ஹாக்கு முத்த காஸுரு' என்ற சூரா ஓதிக்கொண்டிருந் தார்கள், அந்த சூராவில் 'ஹத்தாஜு ர் துமுல் மகாபிர்' என்ற ஆயத்தை (நீங்கள் புதைக்குழிகளை சந்திக்கும் வரை உலக சாதனத்தை) பெருக்க வேண்டுமென்ற பேராசை உங்களை (இறைவனின் அச்சத்தைவிட்டும்) பராக்காக்கி விட்டது. ஜாக்கிரதை (அம்முயற்சியின் பயனை) நீங்கள் அறிந்தே தீர்வீர்கள் என்ற ஆயத்தை ஓதும்போது அவ்வாலிபர் அப்படியே மூர்ச்சையாகி கீழே விழுந்தார். அவரது உடலை விட்டும் உயிரும் பிரிந்து விட்டது,

(இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன்)

சத்திய மார்க்கத்தைச் சார்ந்த சகோதரர்களே எத்த கைய அருமையான படிப்பினையை இந்தச் சரித்திரம் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா? குற்றம் செய்ததை உண்மையாகவே மனிதன் உணர்ந்து வருந்தித் திருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்டால் அதை அவன் ஏற்றுக் கொள்கிறான். என்றாலும் பாவங்களை வழ மையாக செய்துகொண்டே மன்னிப்புக்கேட்டால் அதை அவன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டான்

பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டு இறைவனிடம் மன்னிப்புக் கேட்பதானது, இறைவனை பரிகசிப்பது போலாகும்.

-அல்ஹதீஸ்

ஒருநாள் ஹஜ்ரத்னா இப்றாஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் ஒரு குழுவினர் சென்று பெரியார் அவர்களே! இறைவன் எவ்விஷயத்திற்கும் என்னிடமே பிரார்த்தனை புரியுங்கள் நான் உங்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறேன் என்று திருமறையில் கூறுகி றான். அதற்கேற்ப எங்களின்



கஷ்டங்களைப்போக்க பாவங்களை மன்னிக்க, நாங்கள் காலையிலும் மாலை யிலும் இறைவனிடம் துஆக் கேட்கிறோம். ஆனால் அதை ஏற்று அல்லாஹ் எங்களுக்கு அருள் புரியவில்லையே...? என்ன காரணம் என வினவினார்கள். அப்போது இப்றாஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள், குழு வினர்களே உங்களின் இதயம் பத்து வகையான காரணங் களால் மரித்துவிட்டது. அதாவது! உங்களின் உள்ளத் திலிருக்கும் ஈமான் பத்து வகையான காரணங்களால் ஒளி மங்கி இருளடைந்துவிட்டது. அத்தகைய இருளடைந்த இதயங்களிலிருந்து எழும் பிரார்த்தனை களை இறை வனின் சமூகம் ஏற்பதில்லை எனப் பதிலளித்தார்கள்.

உடனே வந்திருந்தவர்கள் பதறிப்போய் அந்தப் பத்து வித காரணங்களையும் பகருமாறு பணிவன்புடன் கேட்டு நின்றனர். நேயர்களே! உங்கள் நெஞ்சங்களிலும் அந்தப் பத்துவித காரணங்களை அறியும் ஆசை அலை மோது கிறதல்லவா! இதோ உரையாட துவங்கிவிட்டார்கள், இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்கள், படியுங்கள்:

வந்திருந்த குழுவினரை நோக்கி ... குழுவினரே!

1. இறைவன் ஒருவன்தான் என நீங்கள் விசு வாசிக்கிறீர்கள். ஆனால் அவனின் ஆணைகளை நிறைவேற்றாமல் மறந்திருக்கிறீர்கள்.

2. அல்லாஹ்வினால் அருளப்பெற்ற தித்திக்கும் திரு மறையை தினமும் ஓதுவதில் சாதனை காட்டுகிறீர்கள். ஆனால் அதிலுள்ள போதனைப்படி நடக்காமலிருக் கிறீர்கள்.

3. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேரில் ஆழமான அன்பிருப்பதாக வாதிக்கின்றீர்கள். ஆனால் அவர்கள் சொன்னதை செயலில் காட்டாமலிக்கிறீர்கள்.

4. ஷைத்தானை உங்களின் பகைவனென்று சொல் கிறீர்கள். ஆனால் அனுதினமும் அவனையே பின்பற்றி நடக்கிறீர்கள்.

5. சொர்க்கத்தை அடைய ஆசிக்கிறீர்கள். ஆனால் அதை அடைவதற்கான நற்செயல்களைச் செய்ய மறுக்கிறீர்கள்.

6. நரகத்திற்கு பயப்படுவதாக பகருகிறீர்கள். ஆனால் பாவச் செயல்களை செய்வதை விட்டும் விலகாமல் இருக்கிறீர்கள்;

7. மரணம் நிகழ்வது உண்மைதான் என உறுதியுடன் உரைக்கிறீர்கள்...ஆனால் அது ஏற்படுமுன் நற்செயல் களைப் புரியத் தயங்குகிறீர்கள்.

8. மற்றவர்களின் குற்றம் குறைகளைத் தேடித் திரிகிறீர்கள். ஆனால் உங்களிடையே பின்னிக் கிடக்கும் உங்களின் குற்றங் குறைகளை சிந்தித்து உணரத் தவறிவிட்டீர்கள்.

9. அல்லாஹ்வினால் அளிக்கப்படும் ஆகாரங்களை உண்கிறீர்கள். ஆனால் அதற்காக அவனுக்கு நன்றி செலுத்தத் தவறிவிட்டீர்கள்.

10. "உங்களில் மரணமடைந்தோரை அடக்கம் செய்கிறீர்கள். ஆனால் நீங்களும் ஒருசமயம் மரணத்தில் விழும்போது இப்படித்தானே அடக்கம் செய்யப்படு வோம்" என்ற பய உணர்வு கொள்ளத் தவறிவிட்டீர்கள்.

என இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள். இதிலிருந்து நாம் தெரிய வேண்டியவை யாதெனில் நாம் அல்லாஹுத் தஆலாவையும், ரசூல் (ஸல்) அவர்களையும் ஈமான் கொண்டிருந் தால் மட்டும் போதாது, அவர்களின் போதனைப்படி நடக்கவேண்டும். நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து காட்டிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஷைத் தானை வீழ்த்துவதற்கும்,



நரகத்தைவிட்டு தப்பித்துக் கொள்வதற்கும், சொர்க்கத்தை அடைவதற்கும் உரிய முறையான செயல்களை செய்தாக வேண்டும். அப்போதுதான் இறைவனின் அன்பும் அருளும் நம்மீது ஏற்படும். நாம் கேட்கும் பிரார்த்தனைகளையும் இறைவன் ஏற்றுக் கொள்கிறான், இது போன்ற உண்மைகளை மேற்கண்ட இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்களின் கருத்துக்கள் நமக்கு உணர்த்திக்கொண்டிருக் கின்றன.

நம் துஆவிலும் மற்ற ஒவ்வொரு செயல்களிலும் ஓர்மை மிக அவசியம் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

## மன்னிப்புத் தேடுங்கள்

மனிதன் சாதாரண நிலையில், மனிதனாகவே இருக் கிறான். தவறு செய்யும்போது மிருகத் தன்மையை அடை கிறான், தான் செய்தது தவறென்று உளமாற உணர் வானாயின், அவன் தூய நிலையின் முதற்படியைத் தொட்டுவிட்டதாகக் கொள்ளலாம். தவறை உணர்ந்த வன் உள்ளம் உருகிட, கண்ணீர் பெருகிட, ஹக்கனிடம் கையேந்தி கதறி அழுது பாவமன்னிப்புத் தேடுவானாயின் அவனின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நன்மைகளின் பல படிகளில் ஏறிவிட்டதாகக் கொள்ளலாம். உணர்ந்தவன் வருந்த, வருந்தியவன் திருந்த திருந்தியவன் தூய நிலை பொருந்த வாழ்வானாயின், உள்ளத்திலும் உணர்விலும், எண்ணத்திலும் சொல்லிலும், செயலிலும் அந்தத் தூய நிலையை பிரதிபலித்துக் காட்டுவானாயின், வான்புக ழும் வல்லவன், அவன் பாவங்களை மன்னித்து அருள் பாலிக்கக் கேட்கவா வேண்டும். குறையேதுமில்லாக் குண வாளனான அவன் கறையேதுமில்லாக் கருணையாளன். அடித்துவிட்டு அணைத்து அன்பு செய்யும் அன்னையை விட எழுவது பங்கு

அன்பானவன், அருளானவன், கேட்டு இல்லையென்று சொல்லாத நிறைவாளன். ஆகவே பாவியானவன் ஆவி பிரியும்முன் படைத்தவனிடமே பாவ மன்னிப்புப் பெற்றிட வேண்டும். மேலும் அப் பாவங்கள் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அடியான் மன்னிப்புக் கேட்பதில் சுணங்குவதோ, தயங்குவதோ கூடாது. இறைவனும் தன் திருமறையில் கூறுகிறான்:

நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்னிப்புப்புத் தேடுவதில் முந்துங்கள், தீவிரம் காட்டுங்கள்

**-அல்குர்ஆன்**

நிச்சயமாக இறைவன் பாவங்களை மன்னிக்கிறவனாகவும், மிகப் பெரும் கிருபையாளனாகவும் இருக்கிறான்.

**-அல்குர்ஆன்**

இனி பாவங்களிலிருந்து மீண்டும் பரிசுத்தம் பெறும் பாங்கு பற்றி நபி நாயகம் (ஸல்) அவர்கள் என்னென்ன நவின்றார்களென கவனிக்க வேண்டாமா? இதோ

நிச்சயமாக தனது அடியார்கள் உயிர் பிரிவதற்கு சற்றுமுன் வரையிலும், தங்களின் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்பார்களானால், அவர்களின பாவங்கள் அல்லாஹ்வினால் மன்னிக்கப்படும்.

**-அல்ஹதீஸ்**

பாவங்கள் பறந்திட, பரிசுத்தம் பிறந்திட மன்னிப்பு என்ற ஒன்றைக் கேட்டுவிட்டால் மட்டுமே போதும், மரணம் வரும் வரை மகிழ்ச்சியோடு திரியலாம் என்று எண்ணி ஏமாந்து விட வேண்டாம். மன்னிப்பை விரும்பு பவன் தன்னிலே தற்காத்துக் கொள்ள வேண்டிய நிபந்தனைகளும் உண்டு. நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நிபந்தனைகளை நான்கு வகையாக நமக்கு நவின்றுள்ளார்கள் அவைகளாவன:



*1.* தவறு செய்தவன் தான் செய்த தவறை எண்ணி மனதிலே துக்கமடைதல்;

*2.* பாவம் செய்வதை விட்டும் உடன் தவிர்த்து கொள்ளல்;

*3.* இனி திரும்பவும் பாவம் செய்வதில்லை என்று உளமாற உறுதி கொள்ளல்;

*4.* தான் செய்த பாவங்களை எண்ணி வெட்கப் படுதல், வேதனைப்படுதல்.

**-அல்ஹதீஸ்**

உடல் நலம்பெற பத்தியத்தையும், உள்ளம்வளம் பெற சத்தியத்தையும் கடைபிடிக்க வேண்டிய மாந்தன், பாவத்திலிருந்து மீட்சிபெற நித்தியம் நினைவில் இருத்த வேண்டிய நிபந்தனைகளை சத்திய திருநபி (ஸல்) எவ்வளவு அழகாக மொழிந்திருக்கிறார்கள். பார்த்தீர்களா....மேலும் என்ன சொல்கிறார்களென பார்ப்போம்.

மனிதரது செயல்களை எழுதிவைக்கும் மலக்குகளில் வலப் பக்கம் இருப்பவர் இடப் பக்கமிருப்பவருக்கு (அமீன்) நம்பிக்கையாளராக இருக்கிறார். ஒரு அடியார் ஒரு நன்மை செய்தால் வலப்பக்க மிருப்பவர் அதனைப் பத்து நன்மைகளாக எழுதி விடுகிறார். ஒரு அடியார் ஒரு தீமை செய்தால் இட பக்கமிருப்பவர் அதனை எழுதத் தொடங்குவாராயின் வலப் பக்கமிருப்பவர் அவரை நோக்கி எழுத வேண்டாம். கொஞ்சம் பொறும் என்று கூறுவார். அதன்படி அவர் எழுதாமல் சிறிது நேரம் தாமதிப்பார். இதற்கிடையில் அந்த அடியார் தனது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்பாரானால் அவரின் பாவங்கள் எழுதப்படாமல் மன்னிக்கப்பட்டுவிடும் அவர் மன்னிப்புக் கேட்கவில்லையெனில் அதனை ஒரு பாவமாகவே எழுதப்படும்.

**-அல்ஹதீஸ்**

கவனித்தீர்களா! ஒரு நன்மை தோன்றியவுடன் பொங்கிப் பெருகும் நீருற்றைப்போல், ஒன்றுக்குப் பத்தாகப் பல்கிப் பெருகி விடுகிறது. ஆனால் ஒரு பாவம் செய்தால் ஒரு பாவமே குறிக்கப்படுகிறது. நன்மையைப் போல் ஒன்றுக்குப் பத்தாகக் கூட்டி எழுதப்படுவதில்லை. எவ்வளவு செய்யப்பட்டதோ அவ்வளவே கணக்கிடப்படு கின்றது. அகந்தன்னில் அல்லாஹ்வை மறந்து ஜெகந் தன்னில் பாவம் செய்பவர்கள் இதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் எவ்வளவு ஏற்றமாய் இருக்கும்!

மேலும் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்:

சூரியன் மேற்கு திசையில் உதயமாகுமுன் (கியாமத்து நாள் வருமுன்) யார் தனது பாவத்திற்கு மன்னிப்புக் கேட் டாரோ அவரின் பாவத்தை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

-அல்ஹதீஸ்

நிச்சயமாக இறைவன் தனது மன்னிப்பு என்ற ஸ்கையை இரவு பகல் முழுவதுமே விரித்து வைத்திருக் கிறான். ஏனெனில் தனது அடியார்கள் இரவில் செய்த பாவங்களை பகலில் மன்னிப்பதற்காகவும், பகலில் செய்த பாவங்களை இரவில் மன்னிப்பதற்காகவும், இவ்விதமே (கிாயமத்து நாள்) சூரியன் மேற்குத் திசையில் உதயமாகும் வரை விரித்திருப்பான்.

-அல்ஹதீஸ்

இவ்வளவு இருந்தும் கூட, இறுமாப்போடு அலைப வர்களைப் பார்க்கும்போது, பாவங்களைப் புரிந்து விட்டு, பாவமன்னிப்பு பெறாமல் பாரிலே பவனி வரும் பாவிகளைப் பார்க்கும்போது பரிகாசம் மட்டும் வர வில்லை. பரிதாபமும் வழிகிறது.



பாவமன்னிப்புக் கேட்டுக்கொண்டே பாவம் புரிவ தில் உறுதியாக இருப்பவர் இறைவனைப் பரிகசிப்ப வராக இருக்கின்றார்.

-அல்ஹதீஸ்

ஒரு பக்கம் பாவமன்னிப்பு கேட்டுக்கொண்டே மறு பக்கம் மட்டில்லாத பாவங்களை கண்ணை மூடும் காலம் வரை களிப்போது செய்துகொண்டே போனால் அவ னைக் கண்ணியவாளன் என்று எப்படி ஏற்க முடியும் புண்ணியவாளன் என்று எப்படி போற்ற முடியும்? உள் ளத்தின் பள்ளத்தில் கள்ளத்தை வைத்திருப்பவனை கயவ னென்று தானே கணிக்க முடியும். நல்லவனென்று நாகக்கால் நயம்பட நவின்றுவிட்டால் நம்பிவிட முடியுமா...? உடையிலும், நடையிலும், வாழ்க்கையின் நெறி முறையிலும் கடைப்பிடித்துக் காட்ட வேண்டாமா? வருந்தித் திருந்தியவனின் வழிமுறை, வாயில் மட்டும் ஜொலிக்காது. வாழ்விலும் ஜொலிக்கும். ஜொலிக்கவும் வேண்டும். அப்போதுதான் உளமாற வருந்தித்திருந்திய வன் என்று ஒப்புக் கொள்ள முடியும்.. ..! அதை விட்டு விட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டே பாவம் புரிபவன் பாவிகளின் பாதையில் பயணம் செப்வனாகத்தான் கருத முடியும். அல்லாஹ்வின் அன்பிலேயே ஐயம் கொண்டு ஆழம் பார்க்கும் அடியானாகத் தான் கருத முடியும். ஆகவே பாவமன்னிப்பைப் பெற்றுப் பரிசுத்தமும் பெற்று பண்போடு வாழும் பக்தனாக இறை அன்போடு வாழும் அடியவனாக என்றென்றும் மிளிர்வோமாக.

நாயகம் (ஸல்) மேலும் கூறுகிறார்கள்:

உங்களின் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டு மீளுங்கள். அல்லாஹுத்த ஆலாவின் அருளை ஆசி யுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் அருளை ஆசிக்காத வர்கள் காபிர்களாயிருக்கிறார்கள்.

-அல்ஹதீஸ்

தன் பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புத் தேடியவன், பாவமேதுமில்லாத நிரபராதி போலிக்கிறான்.

-அல்ஹதீஸ்

தான் செய்த பாவத்திற்காகக் கைசேதமடைவதானது இறைவனிடம் மன்னிப்புத் தேடுவது போலாகும்.

-அல்ஹதீஸ்

இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் வாலிபனை விட இறைவனுக்குப் பிரியமான பொருள் வேறொன்றுமில்லை.

-அல்ஹதீஸ்

நெருப்பு விறகைக் கரிப்பது போல மன்னிப்புத் தேடுவதானது பாவங்களைக் கரித்துவிடும்.

-அல்ஹதீஸ்

அதிகமாகப் பாவமன்னிப்புத் தேடுவதானது இரணத்தை விஸ்தீரணமாக்கும்.

-அல்ஹதீஸ்

இறைவன் கூறுகிறான்:

விசுவாசிகளே! நீங்கள் வாழ்வில் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்விடமே பாவமன்னிப் கோருங்கள். அல்லாஹ் உங்கள் குற்றங்களை மன்னித்தருளப் போதுமானவன். இறைவன் பாவமன்னிப்புக் கோருபவர்களை விரும்புகிறான்.

-அல்குர் ஆன்

உள்ளுக்குள் தவறு செய்து விட்டு, ஊருக்க உத்தமனாக உலவிவரும் பித்தர்களையும் பேடிகளையும் பெரியவராக மதித்து அவரிடம் பெறும் மன்னிப்பே,



பெரியதென்று கருதும் பேதைகளை இன்று நாம் உலகிலே காண்கிறோம். மடியப் போகிறவன் முடியப் போகிறவனிடம், தான் செய்த தவறுக்காக மன்னிப்புப் பெற்று விட்டு மகிழ்வுடன் வாழ்வதை இன்று நாம் பார்க்கிறோம். மனித நீதிபதியிடம் வாதத்திறமையால் பொய்மையை மெய்மை என்று நிரூபித்து, மன்னிப்புப் பெற்றுவிட்டால் வாதத்தில் வெற்றி பெற்றதாகக் கருதுவதையும், அதையே தன் வாழ்வில் வெற்றி என்று கருதிக் கொண்டாடுவதையும் காண்கிறோம். ஆனால் தீர்ப்பு நாளின் அதிபதி என்ன சொல்கிறான் பாருங்கள். சுவாசிகளே! நீங்கள் வாழ்வில் வெற்றி பெறும் பொருட்டு இறைவனிடமே பாவமன்னிப்புக் கோருங்கள் என்று பறைசாற்றுகிறான்.

ஆம்...அவன் நம்மைப் படைத்தவன், பாது காப்பவன். பாடம் புகட்டுபவன், மரணமடையப் போகும் மனிதனிடம் பெறும் மன்னிப்பைவிட மரணமே இல்லாத இறைவன். அவன் அளிக்கும் மன்னிப்பல்லாவா சிறந்தது? அதுதானே இம்மையிலும் மறுமையிலும் நம்மை வெற்றி சீலர்களாக மிளிரச் செய்வது. ஆகவே நாம் பாவமன்னிப்பை அவனிடமே கோருவோம். அவனே நம் குற்றங்களை மன்னித்தருள போதுமானவன். மாந்தனின் குற்றங்களை மன்னிக்கும் மாண்பும் தகுதியும் தன்மையும் அவன் ஒருவனுக்குத்தான் உண்டு.

அடுத்த கண்ணியைப் பாருங்கள்:

இறைவன் பாவமன்னிப்புக் கோருபவர்களை விரும்புகிறான். ஆகா...இறைவனின் அன்பை என்னென்று கூறுவது. தன் ஊணாலும், உதிரத்தாலும் உதித்தெழுந்த சேயை அழும்போதெல்லாம் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டும் தாய் தன் பிள்ளை தவறிழைத்ததைத் தட்டிக்கேட்கும்போது அப்பிள்ளை மாற்றாளிடம் போய் முறையிடுவதை விரும்புவாளா!

அந்தத் தாயே அப்படி நினைக்கும் போது தாய்க்கும் தந்தைக்கும் நம் எல்லோருக்கும் தலைவனாக நிற்கும் இறைவன் தான் படைத்த மக்கள் தன்னிடமே பாவ மன்னிப்புக் கோருவதை விரும்புவதில் வியப்பென்ன இருக்கிறது? மன்னிக்கக் காத்திருக்கும் அந்த மன்னாதி மன்னனிடம் மண்டியிட்டு மன்னிப்புப் பெறுவதில் இனியும் தயக்கம் காட்டலாமா? தினையளவு தவறு செய்தாலும் அதனைப் பனையளவாகக் கருதிப் பதறும் பக்தர்கள், அல்லாஹ்வின் சன்னதியில் அழுதுநின்ற காலத்தை தொழுது நின்ற கோலத்தை நினைக்கும் போதெல்லாம் மெய்ச்சிலிர்க்கிறது. கண்ணீரிலே காலத்தைக் கடத்தும் பாமரனும், பன்னீரிலே குளிக்கும் பணக்காரனும் இதை உணர்வாராயின் உலகம் எவ்வளவு உயரும்!

### 12 வகையினரின் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும்

1. அல்லற்பட்டு அவதியுறும் அவல நிலையில் ஆட்பட்டவர்;

2. அநீதத்திற்குள்ளாக்கப்பட்டவர்;

3. பிள்ளைகளுக்காக பெற்றோர்கள்;

4. நீதியும் நேர்மையும் கொண்ட அரசன்;

5. பரிசுத்தமான பண்பு கொண்ட நல்லோர்கள்;

6. சொல்லாலும், செயலாலும் எந்நாளும் பெற்றோர்க்கு பணிவிடை செய்யும் பிள்ளைகள்;

7. ஊர்விட்டு ஊர் செல்லும் பயணிகள்;

8. தன்னை விட்டும் பிரிந்து தூரந்தொலைவில் இருக்கும் முஸ்லிமுக்காக நிறைவான நெஞ்சோடு துஆ கேட்கும் மற்றோர் முஸ்லிம்;



9. நேர்மையாக நடந்து இறைவனின் சோதனைகளில் சோராதவர்.

10. நோன்பு நோற்பவர்;

11. ஹஜ்ஜு யாத்திரை சென்றிருப்பவர்;

12. தஹஜ்ஜத்து தொழுதுவிட்டு இருப்பவர்;

ஆக இவர்கள் கேட்கின்ற பிரார்த்தனைகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்.

### பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் நேரங்கள்

1. நோன்பு திறக்கும் நேரம்;

2. ஹஜ்ஜுக்குப்போய், தன் இல்லம் திரும்புமுன் உள்ள இடைப்பட்ட காலம்;

3. தஹஜ்ஜத்து தொழுத பிறகு;

4. ரமலான் மாதம் 27-ம் பிறை (லைலத்துல்கத்ர்) இரவில்;

5. முஹர்ரம் மாதம் 9-ம் நாள்;

6. பிரதி வெள்ளிக்கிழமை தோறும்;

7. நடுநிசி, முன் பின் இரவு நேரங்கள்;

8. ஸஹர் நோன்பு நோற்கும் நேரம்;

9. ஐந்து வேளை பாங்கிற்குப் பின் சற்று நேரம் வரை;

10. பாங்கு இகாமத்திற்கு இடைப்பட்ட நேரம்;

11. பாங்கில் ஹய்ய அலஸ் ஸலாத் ஹய்ய அலல் பலாஹ் என்று சொல்லும் நேரம்;

12. ஐவேளை பர்ளு தொழுகைக்குப்பின் உள்ள நேரம்;

13. ஸஜ்தா செய்யும் சமயம்.

14. குர்ஆன் ஷரீபைப் முழுவதையும் ஓதிமுடித்த சமயம்.

15. மையத்தின் அருகில் இருக்கும் நேரம்,

16. முஸ்லிம்கள் அனைரும் ஒன்று கூடும் நேரம்.

17. இமாம் தொழுகையில் "வல்லள்ளால்லீன்"

18. மழை பெய்யும் நேரம்.

19. கஃபத்துல்லாஹ்வை தவாபு (வலம்) சற்றும் நேரம்;

20. துல்ஹஜ்ஜு மாதம் ஒப்தாம் நாள்;

21. முஹர்ரம் மாதம் பத்தாம் நாள்;

22. ரஜப் மாதம் பிறை 27-ஆம் நாள் இரவு;

23. பத்ரு யுத்தம் நடந்த ரமலான் மாதத்தில் 17 ஆம் பிறையின் இரவு;

24. ஷஃபான் மாதம் 15-ஆம் பிறை (பராஅத்) ரவு;

25. இரு பெருநாட்களின் இரவு;

26. துல்ஹஜ்ஜு மாதம் முதல் 10 இரவுகள்;

27. துல்ஹஜஜு மாதம் (அய்யாமுத்தஷ்ரீக் 10, 11, 12 ஆகிய மூன்று நாட்கள்;

ஆகிய இந்நேரங்களில் துஆக்கள் அங்கீ கரிக்கப் படுகின்றன.

## ஹஜ்ஜு கடமையை நிறைவேற்றத் திருமக்காச் சென்ற ஹாஜிகளின் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் இடங்கள்

1. மார்க்கத்திற்காக போர் புரிய இஸ்லாமிய போர் வீரர்கள் அணிவகுத்து நின்ற யுத்தக் களங்கள்.

2. கஃபாவில் முல்தஜிம் என்னும் இடம்.



3. ஜம்ஜம் கிணற்றின் சமீபம்;

4. ஸபா மர்வா என்னும் மலைக் குன்றுகளிலும், இரண்டிற்குமிடையே தொங்கோட்டம் ஓடும் இடத்திலும்;

5. மீஜாபே ரஹ்மத்திற்குக் கீழ்;

6. கஃபாவில் மகாமே இப்றாஹீம் என்னும் இடத்தில்;

7. அரபா மைதானத்தில்;

8. முஜ்தலிபா என்னும் இடத்தில்;

9. மினாவில் கல்லெறியும் மூன்று இடங்களில்;

10. கஃபாவின் உள்புறத்தில்;

11. மதீனாவில் திரு நபி (ஸல்) அவர்களின் ரவ்லா ஷரீபிற்கு அருகில்;

## மண்ணறையின் எச்சரிக்கை

மானிட வர்க்கத்தின் முதல் மனிதனாக மலர்ந்த சையிதுனா நபி ஆதம் (அலை) முதல், இன்றைய மனிதன் வரை எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் இந்த பூவுலகின் புறப் பரப்பிலே புரண்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். மண்ணாலே நம்மை உதிக்க வைத்து, மண்ணுக்கு மேலே குதிக்க வைத்து, மண்ணுக்குள்ளேயே மடிய வைத்து, மனித வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் இறைவன் அந்த மண்ணை வைத்து எத்தனையோ பாடங்களை நமக்கு எடுத்துக்காட்டுகிறான். மண்ணுக்கு மேலே அடுக்கடுக்காக அறைகள் கட்டி எவ்வளவு உயரத்திலே நாம் உல்லாச வாழ்வு நடத்தினாலும், இறுதியிலே மண்ணுக்குள் உள்ள அறைக்கு வந்துதான் ஆகவேண்டும்: மேலேயுள்ள அறையில் அவன் செய்த ஒவ்வொரு செயலைப் பற்றியும் கீழேயுள்ள அறையில் கூறித்தானாகவேண்டும்.

எந்த வித அரட்டலோ, மிரட்டலோ, உருட்டலோ, காட்ட முடியாது. மிஞ்சிப்பேசினாலும், கெஞ்சிப் பேசினாலும், கொஞ்சிப் பேசினாலும் எதையும் சாதித்து விடமுடியாது. கையூட்டுக் (இலஞ்சம்) கொடுத்துக் காரியம் சாதிக்கும் கயமைத்தனமும் அங்கு வெற்றிபெறாது. பொய்யைக்கூறி பொழுதைப்போக்கும் போக்கிரித்தனமும் அங்கு வெற்றி பெறாது. உள்ளத்தை உள்ளவாறு சொல்லியாகவேண்டும். மாளிகை வாசிக்கும் மண் குடிசை வாசிக்கும் ஒரே நீதி, பண்பை தலையில் சூட்டிய கிரீடம் போல் மதித்து வாழ்ந்திருப்பானாயின் உயர்த்தப்படுவான். அதே பண்பை, மிதித்து வாழ்ந்திருப்பானாயின் தாழ்த்தப்படுவான்.

மண்ணறை என்ற இருள் அறையை நோக்கி கால மென்னும் கப்பலில் பயணம் செய்யும் பயணிகளே! நமது மண்ணறையானது, நம்மை நோக்கி கீழ்க்கண்டவாறு பதினைந்து எச்சரிக்கைகளை தினந்தோறும் திண்ணமுடன் உணர்த்திக் கொண்டிருக்கிறது. அந்த எச்சரிக்கைகள் என்ன என்று பார்ப்போம்.

*1.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின் மீது நடந்து சுற்றித் திரிகிறாய், பின்னால் என் வயிற்றுக்குள் அசைவேதுமில்லாமல் ஆழ்ந்து கிடப்பாய். மறந்திடாதே!

*2.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின் மீது (ஹராமான) தகாத பொருள்களையெல்லாம் உண்டு சுவைத்து உல்லாச வாழ்க்கை நடத்துகிறாய். எனது வயிற்றுக்குள் பாம்புகளும், புழுக்களும், உனது உடலை உண்டு சுவைக்கும், (ஞாபகம் வைத்துக்கொள்)

*3.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின் மீது பாவங்கள் பலதும் செய்து கொண்டிருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் பற்பல வேதனைகளை அனுபவிப்பாய் (இதை அறிவுரையாக ஏற்றுக்கொள்);



*4.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது உவகையோடு சிரித்துக்கொண்டிருக்கிறாய். எனது வயிற்றக்குள் அழுகையோடு புலம்பிக்கொண்டிருப்பாய். (இதை ஆராய்ந்து பார்).

*5.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது ஆனந்தத்தோடும், அகமகிழ்வோடும் இருக்கிறாய். நீ எனது வயிற்றுக்குள் கவலையோடும் கைசேதத்தோடும் இருப்பாய். (உணர்ந்து கொள்);

*6.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது உண்டு கொழுத்துப் பருத்துச் சுகித்திருக்கிறாய். எனது வயிற்றுக் குள் நீ சின்னா பின்னமாக்கப்பட்டு சிதைந்து சீரழிவாய் (இதை சிந்திக்கத் தவறாதே).

*7.* ஆதமுடைய மகனே! எனது முதுகின்மீது வெளிச்சத்தில் இருக்கிறாய். எனது வயிற்றிலே கும் மிருட்டிலே குடியிருப்பாய். (குறும்புத்தனம் செய்யாதே)

*8.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது கண்ணியமாகவும், கம்பீரமாகவும் இருக்கிறாய். எனது வயிற்றுக்குள் இழிவாக்கப்படுவாய். (இறுமாப்பு கொள்ளாதே)

*9.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது மனைவி மக்களோடும், உற்றார் உறவினர்களோடும் உல் லாசமாக இருக்கிறாய். எனது வயிற்றுக்குள் தன்னந்த தனியாகத் தவித்துக் கொண்டிருப்பாய். (இம்மை இன்பங்களுக்கு இரையாகி விடாதே)

*10.* ஆதமுடைய மகனே! எனது முதுகின்மீது மணங்கமழ வாசனைத் திரவியங்களை பூசி அலங்கார மாகத் திரிகிறாய். எனது வயிற்றுக்குள் நாற்றமெடுத்து துர்வாடை பிடித்துக்கிடப்பாய். மறந்திடாதே! (எண்ணிப்பார்!)

*11.* ஆதமுடைய மகனே! எனது வயிற்றுக்குள் நிகழவிருக்கிற விதவிதமான வேதனைகளையும் பயங்கரங் களையும் அறியாமல் எனது முதுகின்மீது திரிகின்றாய். (அறிந்து நடந்துகொள்.)

*12.* ஆதமுடைய மகனே! மண்ணறையாகிய நான் இருள் நிறைந்த பயங்கரமான தன்மையின் வீடு என்பதை எக்காரணத்தால் மறந்து அலைகிறாய்! (ஞாபகமாக வாழ்ந்து கொள்.)

*13.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது இறைவனுக்கு வழிப்பட்டு நடந்திருந்தால் மண்ணறை யாகிய நான், உனக்குச் சொர்க்க பூங்காவாக ஆவேன். இன்றேல் உனக்கு வேதனைக்குரிய இடமாவேன், (பயந்து நடந்துக்கொள்.)

*14.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீது இருக்கையில் ஓதிய குர்ஆன் என் வயிற்றுக்குள் உனக்குத் துணையாகத் துலங்கும். நீ தொழுத தஹஜ்ஜுதுத் தொழுகை உனக்குப் பிரகாசம் கொடுக்கும். நீ முறை யோடு செய்த தர்மம் உனக்கு விரிப்பாக விளங்கும். நீ செய்த ஏனைய நற்கிரியைகள் உனக்கு எந்தவித வேதனையும் வராமல் பாதுகாத்து வெற்றியை வழங்கும், (உனது வெற்றிக்கு முயற்சி செய்.)

*15.* ஆதமுடைய மகனே! நீ எனது முதுகின்மீத உனது படுக்கை, உடுக்கை, உணவு, உறையுள். செல்வங்கள் ஆகிய அனைத்தையும் அதர்ம வழியில் அலங்கரித்து ஆனந்தம் அடைகிறாய். உனது மஃனா இச்சைகளுக்கு இசைந்து இயங்குகிறாய். ஆனால் ஒரு நாள் வரும். அந்நாளையில் நீ என்னுள் வந்தே தீரவேண்டும். அப்போது நீ வேதனைப் படுவாய், வெட்கப்படுவாய், அழுது புலம்புவாய், துக்கப்படுவாய், துயரப்படுவாய். இழிவாக்கப்படுவாய். இருளிலே தத்தளித்து தடுமாறுவாய். கைசேதப்படுவாய்,



(தவறாக நடக்காதே) என மண்ணறையானது மக்களுக்கு எச்சரிக்கை விடுகிறது.

## மண்ணறையின் நிலைமைகள்

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்;

மண்ணறையானது சொர்க்கத்தின் பூங்காவனங்க ளில் ஒன்றாகவோ அல்லது நரகத்தின் கிடங்குகளில் ஒன்றாகவோ இருக்கும்.

முஃமினானவர்கள் தங்களின் கப்ருகளில் பசு மையான தோட்டத்தில் இருப்பதுபோல் இருப்பார்கள். அவருக்காக அவரது மண்ணறை எழுபது முழம் விஸ் தீரணமாக்கப்பட்டு பதிநான்காம் இரவின் பிறையைப் போன்று பிரகாசமாக இருக்கும்.

கப்ருடைய வேதனைகளையும் அமளிகளையும் ஆத- முடைய மக்கள் அறிவார்களானால் அவர்கள் துன்யா உடைய எந்த இன்பத்தையும் விரும்ப மாட்டார்கள். ஆகவே மண்ணறையின் வேதனையை விட்டும் சங்கைக் குரிய இறைவனிடம் பாதுகாப்புத் தேடுங்கள்.

தரணியில் தன்னுடன் நேசமாய் இருந்த நண்பனின் மண்ணறைக்கு அருகாமையில் ஒருவன் சென்றால், (அம்மண்ணறைக்குள் இருப்பவன்) அம்மனிதனுக்காக ஸலாம் சொல்கிறான். ஆனால் அவ்வழியாகச் செல்லும் இவனோ ஸலாம் சொல்லாமல் செல்கிறான். ஒரு மனிதன் ஒரு முஸ்லிமான மனிதருடைய கபுருக்கு அருகில் செல் லும்போது அம்மனிதனைப் பார்த்து அம்மண்ண றையில் இருப்பவன் ஓ...மறதியாளனே; நாங்கள் படுகின்ற வேதனைகளை நீ அறிவாயானால், அந்த பயத்தால் உன் தசையும், கொழுப்பும் உருகி விடுமென்று கூறுகிறார்.

மண்ணறையானது ஆகிரத்திகுடைய தங்கும் தலங்களில் முந்தியதாகவும், துன்யாவினுடைய தங்கும் தலங்களில் பிந்தியதாகவும் இருக்கிறது.

நீங்கள் உங்களின் மரணத்தை நினைவுபடுத்திக் கொள்வதற்காக மண்ணறைகளைச் சந்தித்து வாருங்கள்.

மண்ணறையில் உன் நாயன் யார்? உன் மார்க்கம் எது? உன் நபி யார்? உன் வேதம் யாது? என்று கேள்விக் கணை கள் உங்கள்மீது விடுக்கப்படும். அவைகளுக்குரிய பதில் களை ஒழுங்காகச் சொல்லிக்கொள்வதற்கு உங்களைச் சித்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் உலக வாழ்க்கைப்படியே கப்ரின் வாழ்க்கையும் அமையும். கப்ரின் அதாபைவிட்டும் தப்பித்துக்கொள்ள தகுந்த வழிகளைக் கையாளுங்கள். அலட்சியமின்றி ஆய்ந்து பாருங்கள்.

மேலும் நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்.

(மனிதனை) உலக சுகபோகங்களை விட்டும் விலக்கு பவர்களில் முதலாவது நபர் மண்ணறைகும். மலக்கு களில் முதலாவதாக உயிர்ப்பிக்கப்படுபவர் இஸ்ராபீல் (அலை) அவர்களாகும். மிருகங்களில் முதலாவதாக உயிர் பிக்கப்படும் மிருகம் புராக்காகும் . கியாமத்து நாளில் முதலாவதாக உடை யணிவிக்கப்படுபவர் இப்ராஹீம் (அலை) அவர்களாகும். முதலாவதாக விசாரணை புரியப் படுபவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களாகும். ஆடவர்கள் முதலாவதாக தொழுகையைக் குறித்தும், மனைவி மக்களி டம் நடந்து கொண்ட முறையைப்பற்றியும் விசாரிக்கப் படுவார்கள். பெண்கள் முதலாவதாக தொழுகையைப் பற்றியும் பிறகு அவர்களது கணவர்களுக்கு ஆற்றிய கடமைகள் பற்றியும் விசாரிக்கப்படுவார்கள். கியாமத்து நாளில் முதலாவதாக நபிமார்களும், பிறகு உலமாக்களும், பிறகு ஷஹீதுகளும் ஷபா அத்துச் செய்வார்கள். எனது



உம்மத்தில் முதலாவதாக அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சொர்க் கத்தில் பிரவேசிப்பார்கள். எனது உம்மத்தில் முதலாவதாக இறைவனிடம் ஸலாம் சொல்லி முஸாபஹா செய் பவர் உமர் (ரலி) அவர்களாகும். தனவந்தர்களில் முதலா வதாக சொர்க்கத்தில் பிரவேசிப்பவர் அப்துர் ரஹ் மானிப்னு அவ்ப் (ரலி) அவர்களாகும். என்பதாக நாயகம் (ஸல்) கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

## கியாமத்து நாளில் என் உம்மத்தோர் 12 கூட்டமாக எழுப்பப்படுவார்கள்

ஒரு சமயம் மஆத்பின் ஜபல் (ரலி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகம் வந்து, யா ரசூலல்லாஹ்! சூர் ஊதப்படும் நாளில் ஜனங்கள் பலகூட்டத்தினராக வருவார்கள் என்று இறைவன் தன் திருமறையிலே கூறுகிறானே. அவர்கள் யார்? யார்? என்று வின வினார்கள். அதைக் கேட்டவுடன் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் அதிகமாக அழுதார்கள், அதனால் அவர்களின் அழகுத் தாடியும்கூட நனைந்துவிட்டது. என் அன்பர் மஆதே! நீர் மாபெரும் பயங்கரமான விஷயத்தைப் பற்றிக் கேட்டுவிட்டீர். சூர் ஊதப்படும் அந்நாளையிலே எனது உம்மத்தினர் பன்னிரண்டு கூட்டமாக எழுப்பப்படுவர்" என்று விடையளித்து கீழ் காணுபவைகளை குறிப்பிட்டார்கள்,

வாசக அன்பர்களே! நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணீரை கசிய வைத்த அந்தப் பன்னிரண்டுவகை கூட்டத்தினர் யார்? யார்? தெரியுமா? இதோ.

1. கை கால்கள் இல்லாதவர்களாக ஒரு கூட்டத்தினர் எழுப்பப்படுவர். இவர்கள்தான் அண்டை வீட்டாரை அல்லலுறுத்தியவர்கள். இவர்களை நரகத்திற்கு

இழுத்துச் செல்லுங்கள். இவர்களுக்குரிய தண்டனை இதுதான் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன் படியே மலக்குகள் அவர்களை இழுத்துக் கொண்டுபோய் நரகில் தள்ளுவார்கள்.

*2.* மற்றொரு கூட்டத்தினர் பன்றியின் உருவத்தில் எழுப்பப்படுவார்கள். இவர்கள் ஐங்காலத்தொழுகை களையும் நிறைவேற்றாதவர்கள். இவர்களையும் நர கத்திற்கு இழுத்துச் செல்லுங்கள். இவர்களுக்குரிய தண்டனை இதுதான் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன்படியே அவர்களை இழுத்துச் சென்று நரகில் தள்ளப்படும்.

*3.* பிறிதொரு கூட்டத்தினர் மலைபோன்றுவயிறு பெருத்தவர்களாக எழுப்பப் படுவார்கள். இவர்கள் தான் ஜக்காத்து கொடுக்காதவர்கள். இவர்களையும் இழுத்துக் கொண்டு போய் நரகில் தள்ளுங்களென இறைவனிட மிருந்து சப்தம் வரும். அதன்படியே அவர்களையும் நரகில் தள்ளப்படும்.

*4.* வாயில் இரத்தம் வழிந்தோடுகிறவர்களாக ஒரு கூட்டத்தினர் வருவார்கள். இவர்கள் புவியில் புறம் பேசியவர்கள். இவர்களையும் இழுத்த நரகிலே தள் ளுங்கள் என்றொரு சப்தம் வரும். அதன்படியே அவர் களையும் நரகில் தள்ளப்படும்.

*5.* துர் நாற்றமுடையோராக ஒரு கூட்டத்தினர் எழுப்பப்படுவர். அப்போது, 'இவர்கள்தான் அல்லாஹ் வுக்குப் பயந்து நடக்காமல் மக்களுக்குப் பயந்து, மறை முகமாகப் பாவச்செயலில் ஈடுபட்டவர்கள். இவர்களை யும் இழுத்து நரகிலே தள்ளுங்கள் என இறைவனிட மிருந்து சப்தம் வரும். அதுபடியே அவர்களையும் நரகில் தள்ளப்படும்.



*6.* ஒரு கூட்டத்தினர் தங்களின் கழுத்து அறு பட்டவர்களாக எழுப்பப்படுவர். இவர்கள் தான் பொய் சத்தியம் செய்தவர்கள். இவர்களையும் இழுத்து நரகத்தில் தள்ளுங்கள் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன்படியே அவர்களையும் நரகில் தள்ளப்படும்.

*7.* ஒரு கூட்டத்தினர் தங்களின் வாய்களில் சீழ், ஜலம் வழிந்தவர்களாக எழுப்பப்படுவர். இவர்கள் தங்களுக்கு தெரிந்த விஷயத்தில் சாட்சி சொல்ல மறுத்தவர்கள். இவர்களையும் இழுத்து நரகிலே தள்ளுங்கள் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன்படியே அவர்களையும் நரகில் தள்ளப்படும்.

*8.* தலைகீழாக ஒரு கூட்டத்தினர் எழுப்பப்படுவர், இவர்கள்தான் விபச்சாரம் செய்து பாவ மன்னிப்புக் கேட்காமல் மரணித்தவர்கள். இவர்களையும் நரகிலே இழுத்துத் தள்ளுங்கள் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன்படியே அவர்களையும் நரகில் தள்ளப்படும்.

*9.* முகம் கருத்தவர்களாக, நெருப்பால் வயிறு நிரப் பப்பட்டவர்களாக ஒரு கூட்டத்தினர் எழுப்பப்படுவர். இவர்கள் தான் அனாதைகளின் சொத்துக்களை அநி யாயமாக உண்டவர்கள். இவர்களையும் இழுத்து நரகிலே தள்ளுங்கள் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன் படியே அவர்களையும் நரகில் தள்ளப்படுவார்கள்.

*10.* ஒரு கூட்டத்தினர் குஷ்டரோகிகாளக எழுப்பப் படுவர். இவர்கள்தான் பெற்றோரை மனம் நோகச் செய்த வர்கள். இவர்களையும் இழுத்து நரகிலே தள்ளுங்கள் என இறைவனிடமிருந்து சப்தம் வரும். அதன்படியே நரகில் தள்ளப்படுவார்கள்.

*11.* ஒரு கூட்டத்தினர் குருடராயும், மாட்டின் கொம் பைப் போன்ற நீண்ட பற்களைக் கொண்டவர்களாகவும், மார்புவரை தொங்கும்படியான நீண்ட உதடுகளை

உடையவர்களாயும் எழுப்பப்படுவர். இவர்கள் தான் மது பானம் அருந்தியவர்கள். இவர்களையும் இழுத்து நரகத்தில் தள்ளுங்கள் என அல்லாஹ்விடமிருந்து ஒரு சப்தம்வரும். அதுபோலவே அவர்களையும் நரகத்தில் இழுத்துத்தள்ளப்படும்.

12. ஒரு கூட்டத்தினர் 14-ஆம் இரவின் பூரண சந்திரன் போன்ற முகங் கொண்டவர்களாக எழுப்பப் படுவர். இவர்கள் தான் இறைவன் விதித்த விதிமுறைக ளைப் பேணிக் காத்து, அவனுக்கு முற்றிலும் வழிபட்டு ஐங்காலத் தொழுகைகளையும் நிறைவேற்றி, தங்களின் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டு நற் கருமங்கள் புரிந்தவர்கள். ஆகவே இவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இவர்களின் நற்கருமங்கள் அனைத்தும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. இவர்களின் நற்கருமங்களுக்குத் தக்க கூலி யானது இறைவனது அன்பும், அருளும் சொர்க்கமுமாகும். என்று இறைவனிடமிருந்து ஒரு சப்தம் வரும். அதுசமயம் அக்கூட்டத்தினர் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப் படுவார்கள்.

அன்புள்ளம் கொண்ட வாசக நேயர்களே இந்த பனிரெண்டு விஷயங்களில் ஒன்று முதல் பதினொன்று வரை உள்ள விஷயங்கள் பாவாத்மாக்களுக்குரியப்பட் டோலையாகும். பனிரெண்டாவது விஷயம் புண்ணிய ஆத் மாவுக்குரிய பட்டோலையாகும். நாம்புண்ணிய உணர்வு கொண்ட கண்ணியமான ஜீவனாக வாழ முற்படு வோமாக. பதினோரு செயல்களில் பங்குப் பெற்றுப் பாவப் புழுவாக நெளிவதைவிட பன்னிரெண்டாவது செயலில் மட்டுமே பங்குகொண்டு பண்புக்குரியவர் களாக இருப்பது நல்லது;



## என் உம்மத்தில் பத்து வகையினரை கியாமத்து நாளில் இறைவன் கோபிக்கிறான்

எனது உம்மத்தவரில் பத்து வகையினரின்மீது நாளை மஹ்ஷரில் இறைவன் கடினமாகக் கோபிக் கின்றான். (அல்லாஹ்வின் ஆத்திரத்திற்கு ஆளான) அவர்களின் தசைகளெல்லாம் இற்று உதிர்ந்து வெறும் எலும்புகளோடு கொடூரமான விகார ரூபத்தோடு அவர் கள் காட்சியளிப்பார்கள். அவர்களைப் பார்த்து மற்ற வர்கள் வெறுப்படைவார்கள் என்று நபி (ஸல்) கூறி னார்கள். இதைக்கேட்ட ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ் அவர்கள் யார்? யார்? என்று கேட்டார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட் டார்கள்:

*1. விபச்சாரம் செய்யும் வயோதிகர்;*

*2. மது அருந்துபவன்;*

*3. தாய் தந்தையரை நோவினை செய்பவன்;*

*4. மக்கள் மத்தியில் புறம்பேசித் திரிபவன்;*

*5. பொய் சாட்சி சொல்பவன்;*

*6. தன்மீது விதியான ஜக்காதை கொடாதவன்;*

*7. அநியாயம் செய்பவன்;*

*8. நோன்பு நோற்காதவன்;*

*9. ஐங்கால தொழுகையைத் தொழாதவன்;*

*10. முறைகேடான அரசன், என்றுரைத்தார்கள்.*

## கணவன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகள்

பெண்கள் (ஆண்களாகிய) உங்களின் ஆடைகளாகவும், (ஆண்களாகிய) நீங்கள் பெண்களின் ஆடைகளாகவும் இருக்கிறீர்கள்.

-அல்குர்ஆன்

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்களிடத்தே ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ்! எந்த முஃமினுடைய ஈமான் நிறைவானது என்று கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள், எவர் தனது மனைவியையும், பிள்ளைகளையும் பராமரிப்புச் செய்து அவர்களுடன் அன்பான வார்த்தைகளை பேசி அழகாகப் பழகி வருகிறாரோ அவருடைய ஈமானே சிறந்ததாகும்" என கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

நீங்கள் உங்கள் மனைவிகளுக்கு நற்செயல்களைக் கொண்டு உபதேசம் செய்யுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களின் சிறைச்சாலையில் (ஆதிக்கத்தில்) அகப்பட்டவர்களாகவும், அவர்களை உங்களுக்கு உரிமை உள்ளவர்களாகவும்ஆக்கி ஆக்கிக் கொண்டீர்கள். அவர்களின் அபங்களை அல்லாஹுத்தஆலா விதித்த விதி முறைப்படி ஹலாலாக்கிக் கொண்டீர்கள். பணங்களையும், இதரப் பொருள்களையும் நீங்கள் சரியாக முறைப்படி கொடுத்து வாருங்கள். இறைவன் உங்களின் ரிஜ்கையும் (இரணத்தையும்) வாழ்நாளையும் அதிகப்படுத்துவான். நீங்கள் உங்கள் மனைவி மக்களிடம் எப்படி நடந்து கொண்டீர்களோ அதுபோலவே இறைவனும் உங்களிடம் நடந்து கொள்கிறான்.

-அல்ஹதீஸ்



ஆண்களிடம் நாளை மறுமையில் தொழுகையைப் பற்றிக் கேள்விக் கணக்குகள் கேட்கப்பட்டதும் அடுத்த கேள்வி உங்கள் மனைவி மக்களிடத்தில் எப்படி நடந்து கொண்டீர்கள்? என்றும் கேட்கப்படும். உங்களின் மனைவிகளுக்கு எப்படி உபகாரம் செய்தீர்களோ அது போலவே நானும் உங்களுக்கு உபகாரம் செய்வேன் என இறைவன் அறிவிக்கிறான்.

-அல்ஹதீஸ்

ஒரு மனிதன் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து யாரசூலுல்லாஹ் நான் மிகவும் துர்குணமுடையவனாக, கெட்ட எண்ணம் கொண்டவனாக இருக்கிறேன். இதனால் என் மனைவி, என் குடும்பத்தினர் என் அண்டை வீட்டினர் அனைவரும் நோவினை அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார். அது கேட்ட நாயகம் (ஸல்) அவர்கள்; எவர் தனது மனைவிக்கு நோவினை கொடுத்தாரோ, அவரது நல்ல அமல்களையும், துஆக்களையும் இறைவன் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் காலமெல்லாம் நோன்பு நோற்று, அடிமை வெள்ளாட்டிகளை (அடிமைப் பெண்களை) உரிமை விட்டிருந்தாலும் சரியே. கட்டிய கணவனுக்குக் கட்டுப்பட்டு நடக்காத பெண்களின் நிலையும் இவ்வாறு தான் என பதிலுரைத்தார்கள்.

-அல்ஹதீஸ்

ஒரு சமயம் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் இறைவனிடத்தில், இறைவா! என் மனைவி சாரா துர்குணமுடையவளாக இருக்கிறாள்! என்று முறையிட்டார்கள். அதற்கு ஆண்டவன், எனது தோழர் இப்றாஹீமே! "பெண்களை ஆண்களின் இடது புர விலா எலும்பிலிருந்து தான் படைத்தேன். அவ்விதமே சாரா என்ற உம் மனைவியும் படைக்கப்பட்டு இருக்கிறாள். ஆகவே அதை நேராக்க

நாடினால் நேராகாது மாறாக முறிந்துவிடும். அவள் செய்வதெல்லாம் செய்யப்பட்டும். அது விஷயத்தில் நீர் பொறுமை கொள்ளும். அவளுக்கு வேண்டிய உணவு உடைகளைக் கொடுத்துவாரும். மார்க்க விஷயத்தில் மட்டும் அவளிடம் நீர் குறை கண்டால், பொறுமையாய் இராதே, மார்க்க விஷயத்தில் அவளை நேர்ப்படுத்தி வை, என இறைவன் வஹீ அனுப்பினான்.

மனைவி பேரில் கணவன் காட்ட வேண்டிய பொறுமையும் அவளை அவன் ஆன்மீக வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பாதையைப் பற்றியும் நாயகம் (ஸல்) என்ன கூறுகிறார்களென்று மேலும் பார்ப்போம்.

எவர் தனது மனைவியின் கடுமையான (துர்) குணத்தின் பேரில் பொறுமை கொள்வாரோ அவருக்கு அய்யூபு (அலை) அவர்களின் கூலியும், எந்தப் பெண் தன் கணவனின் கடுமையான குணத்தின் பேரில் பொறுமை கொள்கிறாளோ அவளுக்கு ஆசியா, மரியம் (அலை) ஆகிய இருவரின் கூலியும் கொடுக்கப்படும்.

-அல்ஹதீஸ்

தன் மனைவிக்கு மார்க்கக் கல்வி அதாவது ஒலுவு, தயமம், ஜனாபத், ஹைளு, நிபாஸு, நோன்பு, தொழுகை, ஜக்காத்து, ஹஜ்ஜு முதலிய இல்மைப்படித்துக் கொடுப்பதும், ஈமான் இஸ்லாம் ஒழுக்கம் இறைவனின் திக்ரு ஆகியவைகளை அறியச் செய்து அவைகளில் ஈடுபட வைப்பதுடன், கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து அவர்களைத் தடுப்பதும் ஆண்கள் மீது (வாஜிபு) கடமையாக இருககிறது. மேற்குறிப்பிட்டவைகளை கணவன் கற்க வில்லையாயின் உடனே அவன் அவைகளைக் கற்று, தன் மனைவி மார்களுக்கு கற்று கொடுக்க வேண்டும். அதற்கு அவனால் இயலவில்லை என்றால் பெண்களுக்காக மேற்கண்ட கல்வி எங்கு கற்றுக் கொடுக்கப்படுகிறதோ



அங்கு தன் மனைவியையும் அனுப்பி கற்கத் தூண்ட வேண்டும். அப்படி அவன் செய்யாமலிருப்பதும் மார்க்கத்தை அவனும் அறியாமலிருப்பதும் தவறாகும். (பெண்களும் அது விஷயத்தில் கடின முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.)

-அல்ஹதீஸ்

மார்க்க மேதைகள் கூறுகிறார்கள்:

ஆண்கள் தங்களின் மனைவிகளுக்கு ஐந்து காரியங்களைக் கவனித்து வருவது மிக முக்கியமாக இருக்கிறது.

*1.* பெண்களை கோஷா இல்லாதமுறையில் வெளியில் செல்ல அனுமதிக்கலாகாது. பெண்களை மறைவில் இருந்து கொண்டே தன் வீட்டு வேலைகளைக் கவனிக்கச் செய்ய வேண்டும்.

*2.* தொழுகை, நோன்பு மற்றும் மார்க்க சம்பந்தபட்ட கல்விகளை அவர்களுக்குப் படித்துக் கொடுக்க வேண்டும்.

*3.* அவளுக்கு ஹலாலான உணவு உடைகளைக் கொடுத்து வரவேண்டும். (அவ்விதம் ஹலாலான பொருள்களைக் கொண்டு இவன் கவனிக்க வில்லையானால் நாளை மறுமையில் இவனின் மனைவியும் பிள்ளைகளும் இறைவனிடம், இறைவா! இவர் எங்களுக்கு ஹலாலான பொருள்களை உண்ணக் கொடுக்கவில்லை. எங்களை நல்ல வழியில் நடத்தி வைக்கவுமில்லை என்று கூறுவார்கள். அப்போது இவனின் நன்மையெல்லாம் பிடுங்கி மனைவி மக்களுக்கு கொடுக்கப்பட்டு இவன் நரகத்தில் போடப்படுவான்.

*4.* மனைவிமார்களுக்கு அநீதம் செய்து அநியாயமாக அவர்களை கஷ்டப்படுத்தக்கூடாது. ஏனெனில்

கணவனே கதி என்று கணவனின் ஆதரவில் வாழ்பவளே மனைவி.

5. மனைவி வாயாடியாக இருந்தால் கணவன் அவள் மீது பொறுமை காட்டி வாய்மூடி மௌனமாய் இருக்க வேண்டும். இதனால் நாளடைவில் அவள் அக்குணத்தை விட்டும் நீங்கித் திருந்திவிடுவாள். அவளை விட அதிகமான குடும்பப் பொறுப்பு கணவனுக்குத் தான் உண்டு. பொறுப்புக்குரியவன் பொறுமையோடு நடந்து கொண்டால்தான் குடும்பத்தில் சீரமைப்பு ஏற்படும். இன்றேல் அக்குடும்பத்தில் என்னென்னவோ சீரழிவு நடக்க வாய்ப்பு ஏற்பட்டு, இறுதியில் குடும்பம் நாசமடையும்.

மனைவி விஷயத்தில் பொறுமை புருஷனுக்குத் தேவை என்பதை எடுத்துக் காட்டும் வண்ணம் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நோக்குவோம்.

ஒருவர் தன் மனைவியின் கெட்டகுணத்தைப்பற்றி முறையிடுவதற்காக ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வந்தார். ஆனால் அங் கே உமர் பாரூக் (ரலி) அவர்களின் மனைவியான உம்முகுல்தூம் (ரலி) அவர்கள் மன கஷ்டத்துடன் தன் கணவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதை செவியுற்ற அம்மனிதர் நம்மைப் போன்று தான் உமர்பாரூக் (ரலி) அவர்களின் நிலையும் உள்ளது போலிருக்கிறது என்றெண்ணி தன் வீடு திரும்ப எத்தனித்தார். அதை அறிந்த உமர்பாரூக் (ரலி) அவர்கள் அவரை நோக்கி. அன்பரே! என்வீட்டை நோக்கி தாங்கள் வந்த காரணம் என்னவோ? என்று வினவினார்கள்.

அதைக் கேட்ட அம்மனிதனும் தன் மனைவியின் நிலைபற்றிக் கூற வந்ததாகவும் இங்கேயும் அதே நிலை



இருப்பதை அறிந்து ஏதும் கூற மனமின்றித் திரும்ப முயன்றதாகவும் கூறினார். அப்போது உமர்பாரூக் (ரலி) அவர்கள் அம்மனிதரை நோக்கி, "என் மனைவியின் பாத்தியத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை எனக்கு நிறைய உண்டு அதனாலேயே அவளது விஷயத்தில் நான் பொறுமையை மேற்கொள்கிறேன். அப்பாத்தியங்கள் என்ன தெரியுமா....?

எனக்கும் நரகிற்குமிடையில் அவள் தடையாக இருக்கிறாள். ஏனெனில் நான் அவளுடை "ı பொருட்டால் ஹாரமான செயல்களை விட்டும் விலகி இருக்கிறேன்.

நான் எங்கேனும் வெளியில் சென்றிருந்தால் என்பொருள்களை காவல் காக்கும் காவல் காரியாகவும் இருக்கிறாள்.

நான் குளித்த பின், என் துணிகளைத் துவைக்கும் வண்ணாத்தியாகவும் இருக்கிறாள்.

நாள் தோறும் அன்போடு என் பிள்ளைகளுக்கு பாலூட்டும் தாயாகவும் இருக்கிறாள்.

எந்நேரமும் எனக்குச் சமையல் செய்து கொடுக்கும் சமையல் காரியாகவுமிருக்கிறாள். என்று உமர் பாரூக் (ரலி) கூறினார்கள். இதைக்கேட்ட அம்மனிதர் எனக்கும் என் மனைவி மீது இதே பாத்தியங்கள் உண்டு நானும் இனி அவள் விஷயத்தில் பொறுமை கொள்வேன் என்று கூறி தன் வீடு நோக்கிச் சென்றார்.

ஒரு அடியார் நான்கு விஷயத்திற்காக செலவு செய்திருந்தால் அதைப்பற்றி அல்லாஹ் கியாமத்து நாளில் கேள்விக் கணக்கு கேட்க மாட்டான். என்று நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்.

அவை!

*1. தன் தாய் தகப்பனுக்கு செலவு செய்தது:*

2. நோன்பு வைப்பதற்காக ஸஹர் சாப்பாட்டிற்குச் செலவு செய்தது;

3. நோன்பு திறப்பதற்காக செலவு செய்தது;

4. தன் மனைவி பிள்ளைகள் ஆகியோருக்காக செலவு செய்தது;

-அல்ஹதீஸ்

ஒரு அடியான் நான்கு விஷயத்திற்குச் செலவு செய்திருந்தால் அதற்காகக் கூலி கொடுக்கப்படுகிறான் என நாயகம் (ஸல்) கூறினார்கள். அவை

1. அல்லாஹுத்ஆலாவுடைய பாதையில் செலவு செய்தது;

2. ஏழைகளுக்காகச் செலவு செய்தது;

3. அடிமை வெள்ளாட்டி (அடிமைப்பெண்)களை உரிமை விடுவதற்காக செலவு செய்தது;

4. தன் மனைவி மக்களுக்கு செலவு செய்தது;

அன்பர்களே! மனைவி மக்களுக்காகச் செய்யப்படும் செலவுகளுக்குக் கேள்விக் கணக்கும் இல்லை. அதோடு கூலியும் கொடுக்கப்படும் என்பதை மேற்கண்ட ஹதீஸிலிருந்தே அதன் அருமையைத் தெரிந்திருக்கலாம். நம் பிள்ளைகளுக்குத் தாயாகி நம் இன்பத்திலும், துன்பத்திலும் துணை நிற்கும் துணைவியாகி, மனைக்குத் தலைவியாகி, நல்லறங்கள் பல செய்து. இறைவன் விரும்பும் இனிமையான இஸ்லாமிய இல்லற வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு கருவியாகி அருவி போல் நம்மீது அன்பைப் பொழியும் அந்தத் தியாகத் திருஉருவை கண்ணின் இமை போலும் காக்க வேண்டியது நம் கடமையல்லவா....! மாறாக சிலர் தங்களது மனைவிகளை பலவாறு இம்சித்து அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அந்தோ பரிதாபம். அவளும் நம்மைப் போன்ற



மனிதர்தானே. அறிந்தோ அறியாமலோ தவறுதல் ஏற்படுவது மனிதர்களின் இயற்கைத் தானே! ஒரு பெண்ணை ஒரு ஆண் அடித்து துன்புறுத்துவதுதான் வீரமோ? ஆண்களாகிய நாம் நம்மையறியாமல் ஒரு நாளைக்கு எத்தனையோ தவறுகளை செய்துவிடுகிறோம். நம்மை யார் கண்டிப்பது?

ஒழுக்கமில்லாத ஆயிரம் ஆண்களை பார்க்கினும் ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணே மிக மேலானவள்.

-அல்ஹதீஸ்

அன்பர்களே இதுவரை ஆடவர்கள் தங்களின் மனைவி மக்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றியும், அதனால் ஏற்படுகின்ற நன்மைகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்துக் கொண்டோம். அதுபடி நடந்துகொள்ள இறைவன் நமக்கு கிருபை செய்வானாகவும், அடுத்து பெண் கணவனிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிக் கவனிப்போம்.

## மனைவி கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள்

கணவர்-கண்-அவர் கண்களைப் போன்றவர்

பெண்-பெண் அவள் -பேணுபவள்

பெண் தன் கணவனின் கடமைகளைக் கண்களைப் போன்று பேணுபவள். கண்களை பேணிக்கொள்ள தவறிவிட்டால் அச்சரீரமே கஷ்டத்தில் மூழ்கி தன்னை சீர்குலைத்து கொள்கிறது. இது போன்றே பெண் தன் கணவருக்குரிய கடமைகளைப்பேணத் தவறிவிட்டால், அவள் நிலையும், கண்கள் சீர்குலைந்த உடலைப் போன்ற

தேயாகும். கணவர் தீயவராக தனக்குக் கஷ்டம் கொடுப்ப வராக இருந்தாலும், பெண் அவரைப் பேணிக் காத்துத் திருத்த முயலவேண்டும். அவரின் போக்கை அறிந்து பணிந்து நடக்கும் பக்குவத்தை கையாள வேண்டும். கண்ணில் நோய் ஏற்பட்டு விட்டால், வேதனை தாளாமல் கண்ணைக் குத்திக்கொள்வது கிடையாது. அதற்கு பக்குவ மாகச் சிகிச்சை செய்யத்தானே முற்படுவோம். இது போன்றே கணவர் விஷயத்திலும் நடந்து கொள்ள வேண்டும். பெண்மையின் தன்மையறியாத சில ஆண்கள் பெண்களை சிறைக் கைதிகளைப் போன்று மிகக் கோர நிலையில் நடத்தி வருகிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். இதுபோலவே பெண்களில் சிலர் கணவரின் தன்மை அறியாது அவரை அவக்கேடாக நினைக்கிறார்கள். இத்தகைய பெண்களும், ஆண்களும் இம்மை மறுமை இரண்டிலுமே ஈடேற்றம் அடைய முடியாது.

அடுத்து, பெண் தன் கண்கள் போன்ற கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்: இதோ........

ஒரு பெண், நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து யா ரசூலல்லாஹ்! பெண் தன் கணவனுக்குச் செய்ய வேண் டிய கடமையாது என வினவினாள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெண் ஒட்டகையின் மேலிருந் தாலும், தன் கணவன் இச்சையைநிறைவேற்ற அழைத் தால் உடன் இறங்கி வந்து அவருக்கு இணங்க வேண்டும், ரமலான் நோன்பைத் தவிர மற்ற நபிலான நோன்பு களைத் தன் கணவனின் உத்திரவின்றி வைப்பது கூடாது. அவ்விதம் கணவன் உத்திரவின்றி நபிலான நோன்புகளை வைப்பவள் பாவியாவாள். அந்நோன்புகளின் நன்மை கணவனையே சாரும். கணவனின் கட்டளையின்றி வீட் டை விட்டு வெளிக் கிளம்பக் கூடாது. அப்படி அவள்



போவாளேயானால் திரும்பி வீடு வரும்வரையில் அவ ளின் மீது அதாபுடைய மலக்குகளும் ரஹ்மத்துடைய மலக்குகளும் லஃனத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். கியாமத்து நாளில் ஒரு பெண்ணிடம் தொழுகையின் கேள்விக்குப் பிறகு தன் கணவனுக்கு நிறைவேற்றிய கடமைகளைப் பற்றியே கேட்கப்படும். ஒரு பெண் தன் கணவனின் கட்டளையின்றி வீட்டை விட்டு வெளிச் சென்று திரும்புவாளேயானால், அப்போது தன் கண வனின் கையின்மேல் அவள் கையை வைத்து நீ என்னை நாடியபடி செய்துகொள். என்று கூறி தன் தவறை மன் னிக்கக் கேட்டுக் கொள்ளவேண்டும். அப்படி அவள் கேட்டுக் கொள்ளாதவரை ஆண்டவன் அவள் தொழு கையை அங்கீகரிப்பதில்லை எனக் கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

நிச்சயமாக உங்களுடைய பாத்தியம் உங்களின் மனைவிமார்கள் பேரிலும், மனைவிமார்கள் பாத்தியம் உங்களின் பேரிலும் இருக்கிறது. உங்களின் மனைவி மார்கள் மீது உங்களுக்குள்ள பாத்தியமானது (கடமை யாவது) உங்கள் படுக்கைகளைப் பேணிக்கொள்வதும், உங்களுக்குப் பொருத்தமில்லாதவர்களை வீட்டினுள் வர விடாமலிருப்பதும், கெட்ட பழக்க வழக்கங்களை நீங்கள் கையாளாமலிருப்பதும், இதற்கு மாற்றமாக உங்கள் மனைவிமார்களை நீங்கள் கண்டால் அவர்களை காயம் ஏற்படாவண்ணம் அடித்து, கண்டித்துத் திருத்த வேண் டும். அவர்களுக்குரிய உணவு, உடைகளைக் கொடுப்ப தும் உங்கள் மீது கடமையாக்கப் பட்டிருக்கிறது.

-அல்ஹதீஸ்

இவ்விதம் மாசில்லா மாணிக்கமாக மனைவியை மிளிர வைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் கண வனுக்கு மனைவி காலமெல்லாம் தொண்டு செய்யக்

கடமைப்பட்டவள். "கணவனுடைய மூக்கின் ஒரு துவாரத்தில் இரத்தமும் மறு துவாரத்தில் சீழும் வடிந்துக் கொண்டிருக்கும்போது மனைவி தன் நாவைக் கொண்டு அதை வழித்துச் சுத்தப்படுத்தினாலுங்கூட அவன் அவ னுக்குப் பரிபூரண தொண்டு செய்தவளாக மாட்டாள்.

-அல்ஹதீஸ்

எந்த ஒரு பெண் தன் கணவனிடம் தன்னை தலாக் சொல்லிவிடும்படி கூறும்போது, அவன் அதில் அதிருப்தி கொண்டால், அதைக் கூறியவளின் முகம் நாளை மறு மையில் தசைகளின்றி வெறும் எலும்பாகக் காணப்படும். அதுவுமின்றி அல்லாஹ் அவளின் நாவை இழுத்து பிறடியைச் சுற்றி கட்டச் செய்து நரகத்தில் போடுவான். அந்தப்பெண் பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்கியிருந்தாலும் சரியே.

-ராவி: அபூபக்கர் சித்தீக் (ரலி) அல்ஹதீஸ்

ஒரு பெண் (தன் கணவனின் விருப்பத்திற்கு மாறாக) ஒரு இரவு நீங்கி இருப்பாளாகில், அவள் நரகத்தின் கீழ்தட்டில் காரூன், ஹாமான் போன்றவர்களுடன் இருப்பாள். அவள் எப்போதும் இறைவனை வணங்கிக் கொண்டிருந்த பத்தினிப் பெண்ணாக இருந்தாலுச்சரியே.

-ராவி: உமர் (ரலி) அல்ஹதீஸ்

எந்தப் பெண்ணாவது இம்ரானுடைய மகள்மர்யம் (அலை) அவர்களைப்போல அதிகமான வணக்கங்க ளைப் புரிந்திருந்தாலும், அவளது கணவன் படுக்கைக்கு அழைக்கும்போது கொஞ்ச நேரம் தாமதிப்பாளேயாயின் கியாமத்து நாளில் அவள் அநீதிக்காரர்களின் கூட் டத்தில் இருப்பாள். நரகின் கீழ்தட்டில் அவள் முதல் முதலாகத் தள்ளப்படுவாள்.

-ராவி; இப்னு அப்பாஸ் (ரலி)



ஒரு பெண்ணுக்கு நபி தாவூது (அலை) அவர்களைப் போலச் செல்வச் செழுப்பிருந்து, அவைகளனைத்தையும் அவளது கணவன் செலவு செய்துவிடுவானாயின், அதற் காக என் செல்வங்கள் அவ்வளவையும் அழித்துவிட்டாயே என அப்பெண் தன் கணவனைப் பார்த்துக் கேட்பாளானால் அவளின் நாற்பதாண்டு நன்மைகள் அழிக்கப்பட்டுவிடும்.

ராவி: அபூஹுரைரா (ரலி)

ஒரு பெண் மேலோகத்தார், பூலோகத்தார் ஆகிய அனைவரின் வணக்கங்களைப்போல் வணங்கி இருந்தும் தன் கணவனுக்கு கொஞ்சமேனும் பொருத்தக் கேடாக நடப்பாளேயானால், கியாமத்து நாளில் அவளின் இரு கரங்களும் மடக்கிக் கட்டப்பட்டு இரு கால்களும் சங்கிலி யால் விலங்கிடப்பட்டு, வெட்கஸ் தலம் தறிக்கப்பட்டு பங்கமான கோலத்தோடு வருவாள். அவள் பேரில் ஜபா னிய்யா என்ற மலக்குகள் இரக்கம் காட்டாமல் அதாபு செய்வார்கள். அவளின் வேதனையை கிஞ்சிற்றும் குறைக்க மாட்டார்கள்.

-ராவி: அபூதர் (ரலி)

இறைவனைத் தவிரவேறு எவருக்காகிலும் ஸஜ்தா (தலைவணக்கம்) செய்வது ஆகும் என்ற நியதி இருக்கு மாயின் பெண்களைத் தங்களின் கணவன்மார்களுக்கு ஸஜ்தாச் செய்யும்படி ஆணையிட்டிருப்பேன்.

-ராவி: ஸல்மான் பார்ஸி (ரலி)

ஒரு பெண் தன் கணவனால் இயன்றளவு தனக்குத் தரப்படும் உணவு, உடை கொஞ்சமாயிருப்பினும், அதைக் கொண்டு அவள் திருப்தி கொள்ளவில்லையேல் அவளை அல்லாஹ்வும் பொருந்திக் கொள்ள மாட்டான். அவள் எப்பேர்ப்பட்ட பத்தினித்தனமான, ஸாலிஹான பெண்ணாயினும் சரியே.

-ராவி: ஸஈது (ரலி)

எந்தப்பெண் கணவனின் சொத்தில் சதியும் திருட்டுத் தனமும் செய்கிறாளோ, அவளின் பேரில் வானலோகத்திலுள்ள எழுபதினாயிரம் மலக்குகள் லஃனத்துச் செய்கிறார்கள்.

-ராவி: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி)

ஒரு பெண் தன் கணவரின் விருந்தினரைப்பற்றி திருப்தி கொள்ளாமல் அவருக்கு வேண்டிய சிறப்பான அலுவல்களையும் ஆற்றாமல் வெறுப்பு கொள்வாளா யின் அவளின் பேரில் மலக்குகளும் மற்றப் படைப்பு களும் லஃனத்துச் செய்கிறார்கள்.

-ராவி: அப்துல்லா இப்னு மஸ்வூது (ரலி)

மனைவிமீது மணாளன் அன்பு கொண்டால் அவன் மீது அல்லாஹ்வும் அன்பு கொள்கிறான். அஃதன்றி அவன்மீது கணவன் கோபம் கொண்டால் அல்லாஹ்வும் அவள்மீது கோபம் கொள்கிறான், அவள் கதீஜா (ரலி) போலுள்ளவளாயிருப்பினும் சரியே.

-ராவி: ஹிஸ்ஸானுப்னு தாபிதில் அன்ஸாரி (ரலி)

எந்த ஒரு பெண் தன் கணவன் கோபம் கொள்ளும் படியான பேச்சைப்பேசுகிறாளோ அவளின் பெயர் பாவிகளின் பட்டோலையிலும், முஷ்ரிகீன் (இறை வனுக்கு இணைவைத்தவர் கூட்டத்திலும் எழுதப்படும், நரகில் அவளின் இடத்தைக் குறிப்பிட்ட பிறகுதான் அவள் மரணிக்கிறாள்.

-ராவி: கத்தாதா (ரலி)

"எந்த ஒரு பெண் தன் கணவனுக்கு கோபம்வரக் கூடிய பேச்சுக்களைப் பேசி அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறாளோ அவள்மீது நான் வெறுப்படை கிறேன். மேலும் கியாமத்து நாளில் அவளை நான்



ரஹ்மத்துடைய பார்வையால் பார்க்கமாட்டேன்" என்று இறைவன் தன் மலக்குகளிடம் கூறியிருக்கிறான். என நாயகம் (ஸல்) கூறினார்கள்.

ராவி: ஹஸனுப்னு அலி (ரலி)

அல்லாஹ் த்தஆலாவும் கணவன்மார்களும் எந்தப் பெண்களின்மீது திருப்தியும் பிரியமும் கொண்டார் களோ அவர்களைத் தவிர, மற்ற பெண்டிர்மீது சொர்க்கம் ஹராமாக்கப்பட்டுள்ளது.

ராவி: ஈதுப்னுல் முகையப் (ரலி)

ஒரு பெண்ணிடம் கியாமத் நாளில் முதல் முதலாகத் தொழுகையைப் பற்றியும், இரண்டாவதாக அவளது கணவனிடம் அவள் நடந்துகொண்ட முறையைப்பற்றி யும் கேட்கப்படும் என நாயகம் (ஸல்) கூறினார்கள்: அப் போது உடனிருந்த ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ்! ஒரு பெண் 12 மாதமும் நோன்பு நோற்கிறாள். இரவெல்லாம் விழித்திருந்து தனித்திருந்து நின்று வணங்குகிறாள். ஆனால் அவளது கணவனும் அண்டை வீட்டாரும் வேதனைப்படுமளவிற்கு நடந்து கொள்கிறாள், அவளது நிலை என்னவோ? என்று கேட்டார்கள். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள் "அவள் நரகவாதியே" என்று மறுமொழி கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

அல்லாஹ் த்தஆலாவைக்கொண்டும் கியாமத்து நாளைக்கொண்டும் ஈமான் கொண்டு அவளின் கண வனைத் தவிர மற்ற யாராகிலும் ஒருவர் இறந்துவிட்டால் அதறக்காக மூன்று நாட்களுக்கு அதிகமாக துக்கப்பட்ட வண்ணம் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் இருப் பாளேயானால் அவள் ஹராமான செயலைச் செய்து விட்டவளாவாள். (ஆனால்) தன் கணவன் இறந்து விட்ட தற்காக அவள் அலங்காரமின்றித் துக்கித்து இருப்பாளா

யின், அது அவளுக்கு ஹலாலாகும். என்றும் இத்தாவு டைய சமயங்களில் அவள் அலங்காரமின்றித் துக்கித்து இருப்பாளாயின், அது அவளுக்கு ஹலாலாகும் என்றும் இத்தாவுடைய சமயங்களில் அவள் அலங்காரமின்றி இருப்பது வாஜிபு என்றும் அறிவிக்கப்படுகிறது.

அன்பர்களே! பெண்ணின் கடமையைப்பற்றி அல் லாஹ்வின் தூதரும், அவரது அன்பு நேசர்களும் அறிவித்ததை அறிந்து கொண்டீர்கள். அவர்களெல்லாம் அறவழி பிறழாது வாழ்ந்த ஆன்றோர்கள் நேர்மை நெறிமுறை தவறாது வாழ்ந்த சான்றோர்கள். துன்மார்க்க தோடு போராடி சன்மார்க்கத்தை காத்த சத்திய சீலர்கள், அவர்கள் சொன்ன பெண்டிரின் கடமையைப்பற்றிய விவரத்தையும் படித்தீர்கள். அந்த கண்ணியவான் களுக்குக் கிடைத்த புண்ணியவதிகள் இருக்கிறார்களே அந்தப் பெருமைப் பெண்டிர் தம் கடமைகளை மட்டும் செய்யவில்லை. அந்தக் கடமைக்கும் மேலே ஒருபடி சென்று தியாகத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்திருக்கிறார் கள்: அவர்களின் வாழ்வு ஓர்ஒப்பற்ற காவியம், சீர்மைச் சிறப்புத் தரும் ஜீவியம், அப்படிப்பட்ட அந்தப் புனித வதிகளை ஒரு பக்கம் எண்ணிப்பார்க்கிறோம். உளமார போற்றுகிறோம். அதே கண்களோடு இன்றைய இஸ் லாமிய பெண்டிர் நிலையும் எண்ணிப்பார்க்கிறோம். கண்கள் குளமாகின்றன. நெருப்புப் பிழம்பாகின்றன. கட்டிய கணவன் தட்டிக்கேட்பதற்கு முன்பே பெட்டிப் பாம்பாக அடங்கி நடக்கவேண்டிய பெண்டிர் கணவன் இலேசாக முணங்கினால்கூட அதை எதிர்த்து முரசு அறைவதுபோல முழக்கிக் காட்டுகிறார்கள்.

வீட்டிலே பெண்கள் குரல் உயருமானால் வெளியே கணவனின் சிரம் தாழ்கிறது. வீட்டிலே மனைவிக்கு அடக்கமில்லையேல் வெளியே கணவனுக்கு நடுக்கமேற் படுகிறது. நான்கு பேருக்கு மத்தியிலே அவன் கௌரவம்



கடைச் சரக்காகக் கலந்துரையாடப்படுகிறது. அல் லாஹ்வை ஐவேளை தொழுவதற்கும் கோஷா முறை வேண்டுமென்கிறது இஸ்லாம். அதனால் பெண்கள் ஜமா அத்தாக தொழுவது கூட ஹனபி மத்ஹபில் தடுக்கப் பட்டுள்ளது. அவரவர் இல்லங்களிலேயே தன்னந்தனி யாகத் தொழுது கொள்ளவேண்டும் என்பன போன்ற விதிகளை இஸ்லாம் கூறுகிறதென்றால் கன்னியரின் கற்பை காப்பதில் சடுகளவும் கவனம் குறைந்துவிடக் கூடாது என்பதல்லவா அதன் உட்கருத்து! இவ்வளவு கட்டுப்பாட்டையும் கண்டிப்பையும் ஏற்று நடக்க வேண்டிய இஸ்லாமிய பெண்டிர் சீவி முடித்து சிங் காரித்து சினிமாவுக்குப் போகும் கொடுமையை நாம் காண்கிறேரம். அதுவும் அவள் மட்டுமா கட்டிய கண வரையும் காவலுக்கு அழைத்துக்கொண்டு மார்க்க நெறிப் படி வளர்க்கப்பட வேண்டிய சின்னஞ்சிறார்களையும் சுற்றி வளைத்துக்கொண்டு பட்டத்து இளவரசி பவனி செல்வது போலல்லவா செல்கிறாள். கூச்சலும் கொக் கரிப்பும் கொட்டமடிக்கும் இடத்திற்கா குடும்பத்தோடு சென்று கும்மாளம் அடிப்பது? தவறான உணர்வைத் தட்டியெழுப்பும் காட்சிகளைக் காணும்போது தன்னை எத்தனை கண்கள் ரசிக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தாளா? அந்த மட்டமான மாது.. மாற்றாரின் மனம் அவளை ஆசையோடு நினைத்துவிட்டாலே அவளது கற்பு களங்கப்பட்டு விடுகிறது. என்று இஸ்லாம் கூறும்போது, காறி உமிழத்தக்க பேடி உணர்வுகளை தேடிவைத்துக்கொண்ட பாடிக்களிக்கும் பெண்களின் கற்பை எப்படி பொறுப்புடன் போற்றிப் புகழ முடியும்?

எனது அருமை சமுதாய தாய்க்குலமே! திரும்பி பாருங்கள். நம் முன்னோர்களின் பாதையை. உன்னிப் பாருங்கள். அதன் உன்னத மேன்மையையும் பெண்ணின் பெருமையையும் எண்ணிப்பாருங்கள். நீங்கள்

ஆற்றவேண்டிய அரும்பெரும் சேவைகளை கடமைகளை கருத்தில் கொள்ளுங்கள். களங்கமில்லா கண்மணிகளாக கணவரின் கடமைகளை கண்களைப்போன்று பேணிக்காக்கும் பெண் மணிகளாக வாழ்வீர்களாக! அவ்வாறு வாழ வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக! என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன் இறைவா! எங்கள் அனைவர்களையும் உனது நேரான சீரான பாதையில் நடத்தி அருள்புரிவாயாக.

## பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள்

ஒரு பிள்ளை சீர் பெற வேண்டுமானால் அதை அன் போடு வளர்த்தால் மட்டும் போதாது. அந்தப் பிள்ளை யைப் பண்போடு வளர்ப்பதும் பெற்றோர்களின் கடமை யாகும். ஏனெனில் பிள்ளைப் பருவம் ஒரு பொன்னான பருவம். அது வளைக்கும் பக்கமெல்லாம் வளையும். நாம் கூறும் ஒவ்வொரு கருத்தும் பசுமரத்து ஆணிபோல அதன் நெஞ்சில் ஆழப் பதியும். ஆகவே அப்பருவத்தில் தவறான பழக்க வழக்கங்களை பிள்ளைகள் கைக்கொள்ளா வண்ணம் பெற்றோர்கள் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். நல்ல பழக்கங்களைச் சின்ன வயதிலேயே புகட்டவேண்டும். அப்பொழுதுதான் எதிர் காலத்தில் அது நல்ல பலனைத்தரும். சுரை ஒன்று போட வேறொன்றா முளைக்கும்? பெற்றோர்கள் இதை கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளும் பெற்றோரின் மேன்மையை அறிந்து சீர்மையுடன் நடக்கத் தொடங்குவார்கள்; பெற்றோரின் எதிர்காலமும் ஏற்றமுடன் அமையும். ஐந்து வயது வரை தன் பிள்ளையை அரசன் போலவும் பத்து வயது வரை வேலைக்காரன் போலும், 15 வயது வரை நண்பன்



போலும், ஒரு தந்தை நடத்த வேண்டுமென ஒரு நீதிநூல் கூறுகிறது.

இனி இறைத்தூதர் இதுபற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

நபி(ஸல்) கூறுகிறார்கள்; பிள்ளை பிறந்து ஏழாவது நாளில் ஆண் குழந்தையாயிருந்தால் இரண்டு ஆடும், பெண் குழந்தையாயிருந்தால் ஒரு ஆடும் அகீக்கா கொடுப்பது சிறப்பாகும். அதை அறுத்து அதன் இறைச்சியைத் தர்மம் செய்து குழந்தையின் தலைமுடியை இறக்கி பெயரிடுங்கள். அம் முடியை தராசில் நிறுத்து அது அளவிற்கு வெள்ளியோ தங்கமோ தர்மம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வது மிகச் சிறப்பாகும். ஆறு வயதானால் பிள்ளைக்கு ஒழுக்கத்தை கற்பியுங்கள். ஒன் பது வயதில் படுக்கையை விட்டும் அவர்களை அப்புறப் படுத்துங்கள். பதின்மூன்று வயதானால் தொழுகைக்காக அவர்களை அடி யுங்கள்; பதினாறு வயதானால் அவனுக்குத் திருமணம் செய்வித்து அவன் கையைப் பிடித்து "(என் பிள்ளையே) உனக்கு ஒழுக்கத்தையும் கல்வியையும் கற்பித்தேன். திருமணமும் செய்து வைத்தேன். இனி துன்யாவின் பயங்கரத்தை விட்டும் மறுமையின் வேதனையை விட்டும் உன்னைக் காத்துக்கொள்" என்று அறிவுரை கூறுங்கள்.

-அல்ஹதீஸ்

ஒரு தகப்பன் தன் பிள்ளைக்குக் கொடுக்கும் வெகு மதிகளில் மிகச் சிறந்தது அவர்களுக்குக் கற்பித்துத் கொடுக்கும் ஒழுக்கமாகும். பிள்ளைகள் மீது பரிவுகாட்டு வது வணக்கத்தில் ஒன்றாகும். உங்களது பிள்ளைகளைச் சங்கைப் படுத்துங்கள். ஏனெனில் பிள்ளையைச் சங் கைப்படுத்துவதும், அவர்களுடன் சாப்பிடுவதும் நரகத் தைவிட்டும் விடுதலையளிக்கும் செயலாகும். உங்கள்

குழந்தைகளைச் சிறப்பியுங்கள். சொர்க்கத்தில் இறைவன் உங்களை சிறப்பிப்பான்.

சொர்க்கத்தில் ஒரு வாசலுண்டு அதற்குச் சந்தோசத்தின் வாசல் என்று பெயர் சொல்லப்படும். அதில் பிள்ளைகளை சங்கையாக வளர்த்த பெற்றோர்களைத் தவிர வேறு யாரும் புகமாட்டார்கள். உங்கள் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தை கற்பிப்பதானது. ஒவ்வொரு நாளிலும் ஒருபடி நாணயத்தைத் தர்மம் செய்ததின் கூலியாகும். உங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாக முத்தம் கொடுங்கள். ஏனெனில் சொர்க்கத்தில் ஒருமுத்தத்திற்கு ஒரு (தரஜா) அந்தஸ்து உயர்த்தப்படுகிறது -அல்ஹதீஸ்

பெற்றோர்களுக்கு தன் பிள்ளைகள் மீது மூன்று காரியங்கள் மிக முக்கியமானவை.

1. பிள்ளை பிறந்ததும் அதற்கு அழகான பெயரிடுவது;

2. ஓரளவு புத்தி வந்ததும் அதற்கு குர்ஆன் மற்றும் மார்க்க விஷயங்கள் ஈமான் இஸ்லாமிய விளக்கங்களை கற்றுக் கொடுப்பது;

3. பருவம் வந்தவுடன் அவர்களுக்கு திருமணம் முடித்து வைப்பது முதலியனவாகும்.

-அல்ஹதீஸ்

"நன்னடத்தை, நல்லொழுக்கம், உத்தம குணம் இவற்றைவிடச் சிறந்த எந்த ஒரு தர்மத்தையும் எந்த ஒரு தகப்பனும் தன் மக்களுக்கு கொடுப்பதற்கில்லை" என நபி (ஸல்) கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

பிறக்கும் 'குழந்தை' ஒவ்வொன்றும் இஸ்லாம் மார்க்கத்திலேயே பிறக்கின்றது. ஆனால் அக்குழந்தையின் பெற்றோர்கள்தான் அதை எஹூதியாகவோ (யூதர்கள்) நஸாராக்களாகவோ (கிறிஸ்தவர்கள்) மஜூசியாகவோ (நெருப்பைவணங்குபவர்கள்) மாற்றி விடுகின்றனர். என்று பெருமானார் (ஸல்) அருளியிருக்கிறார்கள்.



நீங்கள் ஒவ்வொருவரும் நிர்வாகிகள்; உங்கள் பிரஜைகள் பற்றிவிசாரிக்கப்படுவீர்கள். நாளை நியாயத் தீர்ப்பு நாளன்று மக்கள் தம் தந்தையரின் நெஞ்சைப் பிடித்து, உலகில் நாங்கள் உங்கள் ஆதரவில் இருந்தோம். எங்களுக்கு நீங்கள் ஏன் ஹராமான உணவூட்டி வளர்த்தீர்கள்? எங்களை ஏன் சீராக நடத்தவில்லை? பதில் சொல்லுங்கள் என்று கேட்பார்கள். அப்போது பதில் சொல்லத் தெரியாத தந்தையர் நாங்கள் எந்த குழந்தைக்கும் தந்தையாக இல்லாமலிருக்க வேண்டியிருந்ததே என்று புலம்புவார்களென ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

சீரிய கலீபாக்களில் ஐந்தாமவராகக் கருதப்படும் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம் புத்திரர் ஒருவரைக் கல்வி கற்பதற்காக ஒரு கிராமத்துப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்கள். அவரின் ஒழுக்க சீலத்தை கவனிக்க இரகசிய ஆட்களையும் நியமித்தார். ஒருநாள் கலீபாவின் புதல்வர் சவரம் செய்து கொள்ளும் வேலையில் ஈடுபட்டு அஸரு நேர ஜமா அத்துத் தொழுகையை விட்டு விட்டார். அந்தச் செய்தி கலீபா அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

உடனே கலீபா அவர்கள் ஆசிரியருக்கு பின் வருமாறு கடிதம் எழுதினார்கள். அஸர் நேர ஜமா அத்துத் தொழுகையின் முக்கியத்துவம் உணராது என் மகன் சவரம் செய்து கொள்வதில் ஈடுபட்டு ஜமா அத்தைத் தவறவிட்டு விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதற்கு தண்டனை அளிப்பது என் கடமை. இதோ இத்துடன் ஒரு சவுக்கையும் கொடுத்தனுப்பியுள்ளேன். நீங்கள் எனக்கு பிரதிநிதியாக நின்று இந்த சவுக்கு பஞ்சு பஞ்சாகும்வரை அவனை அடியுங்கள். இனிமேல் இவ்வித தவறு நிகழ்ந்து

விடாமல் கவனித்துக் கொள்ளுங்கள் என்றார், இக்கட்டளையின்படியே தண்டனையும் நிறைவேற்றப்பட்டது.

நூல் -தபகாத் இப்னு ஸஅது

வாசக நேயர்களே! நம்மில் சிலர் தங்களின் பிள்ளைகளை பாசம் என்று சொல்லி மோசத்தில் ஆழ்த்தி விடுகிறார்கள். இதனால் அப்பிள்ளைகளின் வாழ்வு வளம் கெட்டு தரம் கெட்டு நேர்மை நெறி கெட்ட அவல நிலைக்குள்ளாகிறது. நம் பிள்ளைகள் நலம் பெற்று வாழ்ந்தால் நமக்கு பெருமை; அதுவே குறிக்கோளுமாகும். அது அல்லாமல் அப்பிள்ளைகள் சீரழிந்து போவதால் நமக்கென்ன பெருமை? இந்நிலையில் அப்பிள்ளைகளை பெற்று வளர்ப்பதில் என்னதான் பயன் ஏற்படப் போகிறது? ஒழுக்கத்தையும், அறிவையும் கற்பிக்கும் பள்ளிகளில் உஸ்தாதுகளும் ஆசிரியர்களும் நம் பிள்ளைகளைக் கண்டித்துவிட்டால் நம்மில் சிலர் எப்படி என் பிள்ளைகளை அவர் கண்டிக்கலாமென ஆசிரியர்களிடம் வறட்டு வம்பு பேச முற்பட்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட அறியாமக்களுக்கு எதைச் சொல்லியும் எதை எழுதியும் என்னதான் புரிய வைக்க முடியும்!

## பிள்ளைகள் பெற்றோர்களுக்கு செய்யும் கடமையும் பெற்றோர்களை நோவினை செய்வதால் ஏற்படும் தண்டனையும்

பிள்ளைகள் பெற்றோரின் மனம் நோவாது நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி இறைவன் தன் திருமறை வசனங்களில் கூறுகிறான்:

'உமதிறைவன் நீங்கள் அவனைத்தவிர வேறுயாரையும் வணங்கக் கூடாதென றும், பெற்றோர்க்கு நன்மை



செய்யவேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறான். அவர்களிலொருவர், அல்லது இருவர் உம்மிடம் இருந்து வயோதிகப் பருவத்தை அடைந்துவிட்டால், நீர் அவர்களை உஃப் (F) என்றும் கூறாதீர். இன்னும் நீர் அவர்களைக் கடிந்து விரட்டாதீர், நீர் அவர்களிடம் சங்கையான வார்த்தைகளையே பேசுவீராக."

-அல்குர்ஆன்

தாய், தகப்பனுக்கு நன்றி செய்கிற பிள்ளைக்கு நீ ஒரு போதும் நரகம் செல்லமாட்டாய் என்று கூறும், தாய் தகப்பனை நோவினை செய்த பிள்ளைக்கு உன் பெற்றோர் மன்னிக்கும் வரை நீ சொர்க்கம் புகமாட்டாய் என்று கூறிவிடும்.

-அல்ஹதீஸ்

குறிப்பு: சரியாகவோ, தவறாகவோ, நாம் தாய் தகப்பனுக்கு நன்றி செலுத்தினால் அதுவே போதுமென்று கருதிவிடக்கூடாது. தாய் தகப்பனுக்கு நன்றி செல்லுத்துவதின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டவே நபி (ஸல்) அவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்கள். பெற்றோருக்கு நன்றி செலுத்துபவன், மாநபியின் வழியிலும், கற்றோர் மகிழும் வகையிலும், சுற்றமும் நட்பும் பெருமை கொள்ளும் வகையிலும் செயல்படவேண்டும். அப்படி இலங்குவதையே பெற்றோர்கள் பெரிதும் விரும்புவர். அதுவே அவர்களுக்குப் பேரும் பெருமையும் பொழிந்துநிற்கும். வீட்டில் பெற்றோரை விரும்பிக் கவனித்துவிட்டு வெளியில் நல்லோருக்கெல்லாம் பொல்லானாக நடப்பின் அது அவர்களின் நெஞ்சைப் புண்படுத்தவே செய்யும். அந்தப் புண்படுத்தும் நிலையை இல்லாது ஆக்குவதும், நாம் பெறோருக்கச் செய்யும் பணிகளில் ஒன்றே, ஊரை ஏய்த்து தன் வீட்டில் உல்லாச வாழ்வு நடத்துகின்றவனை. பெற்றோரும்கூட வெறுப்பார்கள். தாய்

தகப்பனுக்கு நன்றி செய்யும் பிள்ளை இறைவனுக்கும் நன்றிசெய்யும் பிள்ளையாகவே உருவாகும். என்பது நாயகம் (ஸல்) வாக்காகும். அருமை நபியின் அச்சொல் நன்றியுள்ள பிள்ளைகள்மேல் அவர்கள்கொண்ட அளப்பரிய அன்பைக் காட்டுகிற சொல்லாகும்.

ஒரு சமயம் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் ரசூலே! அமல்களில் சிறந்தது எது? என்று கேட்டேன். நேரம்தவறாமல் தொழும் தொழுகை என்றார்கள். பிறகு எது? என்றேன், பெற்றோர்களுக்கு உபகாரம் செய்தல் என்றார்கள்.

"தாய் தந்தையருக்கு நன்மை செய்வதானது தொழுகை, நோன்பு ஹஜ்ஜு, உம்றா, மார்க்கயுத்தம் இவைகளைக் காட்டிலும் மிகச் சிறப்புள்ளதாக இருக்கிறது" என்றும் 'சொர்க்கத்துடைய மணம் ஐந்நூறு வருஷத்துத் தொலைவிலிருந்து வீசும்" என்றும், "தாய் தந்தையரை வருத்தப்படுத்துகிறவனும், பந்துக்களின் உறவை முறிப்பவனும் அந்த சொர்க்க வாசனையைக்கூட அடையான்" என்றும் நபி (ஸல்) அருளிச் செய்திருக்கிறார்கள்.

-அல்ஹதீஸ்

தாய் தந்தையர்களை நோவினை செய்தவனுக்கும் இப்லீஸிற்கும் இடையில் நரகில் ஒரு (தரஜா) அந்தஸ்து தான் வித்தியாசமாகும். அதுபோலவே தாய் தந்தையர்களை சங்கைப் படுத்தியவனுக்கும் நபிமார்களுக்குமிடையில் சொர்க்கத்தில் ஒரு (தரஜா) அந்தஸ்து தான் வித்தியாசமாகும்.

-அல்ஹதீஸ்

பெற்றோர்களின் பொருத்தத்தால் உங்கள்மீது இறைவனின் பொருத்தமும் அவர்களின் கோபத்தால் உங்கள்மீது இறைவனின் கோபமும் ஏற்படுகிறது.



-அல்ஹதீஸ்

உங்களின் பெற்றோர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யுங்கள். அப்படி செய்வீர்களானால் உங்களின் பிள்ளைகள் உங்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வார்கள்.

-அல்ஹதீஸ்

பெற்றோர்களின் சொற்களை மீறி நடக்கிறவன் அல்லாஹுத்தஆலாவை விட்டும், மலாயிகத்து மார்களை விட்டும், சொர்க்கத்தை விட்டும், நல்லோர்களை விட்டும் தூரமானவனாகவும், நரகத்திற்கு நெருங்கியவனாகவும் இருக்கிறான்.

-அல்ஹதீஸ்

இறைவன் ஹதீஸ் குத்ஸியில் கூறுகிறான், எவர் தனது பெற்றோரின் சந்தோஷத்தை பெற்றாரோ, அவர் எனது சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வார். நான் அவர் மீது திருப்தியுடையவனாக இருப்பேன்.

-ஹதீஸ்குத்ஸி

எவனொருவன் தன் பெற்றோர்களை அடிப்பதற்காக கையை ஓங்குவானோ அவனுடைய கைகள் கழுத்துடன் கட்டப்பட்டுப் பழுதாகி விடும் என்று சொல்லவும் என்று நபி (ஸல்) கூறினார்கள். அது சமயம் ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ், அவர்களை அடித்தால் என்ன தண்டனை கிடைக்குமென்று கேட்டார்கள். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள், "அம்மனிதன் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடக்குமுன் அவனின் கை தறிக்கப்பட்டு விழும், மலாயிகத்துமார்களும் அவனை நோவினை செய்வார்கள்" என உரைத்தார்கள். -அல்ஹதீஸ்

எவராகிலும் தாய் தந்தையரை ஏசுவாரேயானால் மண்ணறையில் அவருடைய விலாப்புரத்திலிருந்து மழைதுளிகளைப் போன்ற நெருப்புத்துளிகள் பறக்கும்.

-அல்ஹதீஸ்

நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்: பெற்றோர்களை நோவினை செயதவருக்கு நரகில் கொடுக்கப்படுகின்ற அதாபின் கொடூரம் என்னைத் துக்கத்தில் ஆழ்த்தியது போல், வேறு எந்த அதாபும் என்னை துக்கத்தில் ஆழ்த்தவில்லை.

-அல்ஹதீஸ்

எனது அருமை வாசக நேயர்களே! இன்று நம் மக்கள் தங்களின் பெற்றோர்களிடம் நடந்து கொள்ளும் நிலை யைப் பார்த்தால் மிக பயங்கரமாக இருக்கிறது, தங்களின் பெற்றோர்களை கண்ணியப்படுத்தாத காரணத்தால் நம் மக்களிடையே நிம்மதியான வாழ்க்கை வரண்டு விட்டது. எங்கு திரும்பினாலும் அமைதியைக் காணோம். தன் பிள் ளைகள் தனக்கு கண்ணியம் செய்யாததால் அப்பெற் றோர்களின் மனம் எப்படி புழுங்குகிறதோ அது போலவே அப்பிள்ளைகளின் வாழ்வும் புழுங்கிக்கொண் டிருக்கிறது. பிள்ளைகளுக்கு சொர்க்கம் தாயின் காலடி யில் இருக்கிறது என்று நாயகம் (ஸல்) கூறி இருப்பதை சற்று சிந்திப்போமாக, சங்கையோடு அவர்களை நடத்ததாட்டுவோமாக.

அன்றொரு நாள், நாயகம் (ஸல்) அவர்களின் தோழர் களில் ஒருவரான அல்கமா (ரலி) அவர்கள் ஸக்கராத்து நிலையில் கிடந்தார்கள். ஸஹாபாக்கள் எத்தனையோ முறை அவருக்கு கலிமாச் சொல்லிக் கொடுத்தும் அல்கமா (ரலி) அவர்களால் கலிமாவை திருப்பிச் சொல்ல முடியவில்லை. தோழர்களை திடுக்கிடவைத்த இந்தத் தீய செய்தி பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தெரியவந்தது. அருமை நபி (ஸல்) அவர்களும் அல்கமா (ரலி) அவர்களுக்கு மும்முறை கலிமாச் சொல்லிக் கொடுத்தும் அவர் நாவில் கலிமா எழவில்லை, அதைக் கண்டு ஆச்சரியமுற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நெஞ்சை நோகவைக்கும் இந்த நிலமைக்குரிய காரணத்தை அறியவேண்டி சோகத்தோடு சூழ்ந்திருந்த ஸஹா பாக்களிடம் சற்றுப் பரபரப்புடன் வினவினார்கள். இந்த ஸஹாபி தன்



வாழ்வில் என் றேனும் தவறுகள் செய்ததுண்டா? நீங்கள் அறிவீர்களா என்றார்கள்.

அதற்கு ஸஹாபாக்கள் யாரசூலல்லாஹ் அல்கமா (ரலி) அவர்கள் வாழ்நாளில் பர்லான தொழுகை, நோன்புகளையும் மிகவும் தூய்மையுடன் நிறைவேற்றிய வர். சுன்னத்தான, நபிலான தொழுகைகளையும், நோன் பு களையும் அவர் கண்ணும் கருத்துமாக கவனத்தோடு நிறைவேற்றி வந்தார். நாங்கள் அறிந்த வரையில் அவர் தம் வாழ் நாளில் எந்த தவறும் புரிந்ததாகத் தெரியவில்லை. எஞ்சியதை அல்லாஹ்வும், அவன் தம் தூதருமே அறிவர். என மறுமொழி பகர்ந்தனர். நாயகம் (ஸல்) அவர்கள் இவருக்கு உறவினர் யாரும் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். அப்பொழுது அவருக்கு வயது முதிர்ந்த மூதாட்டியான தாய் இருக்கிறாள் என்று அறிவிக்கப்பட் டது. உடனே அந்த தாயை அழைத்துவருமாறு உத்திர விட்டார்கள். அம்மூதாட்டியை அழைத்து வந்தார்கள்.

அம்மூதாட்டியிடம் உங்கள் மகன் உங்களுக்கு ஏதும் நோவினை செய்திருக்கிறாரே? என்று நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள், அதற்கு அம்மூதாட்டியார், ஆம்! என் மகன் அல்கமா என்னைச் சரியாக கவனிக்காமல் விட்டுவிட்டார். என்மனம் நிரம்பவும் நோவினைப் பட்டிருக்கிறது என்றாள்.

அதுகேட்ட நாயகம் (ஸல்) அவர்கள் பெற்ற தாயான உங்களை இவர் நோவினை செய்திட்டதால் இவர் நாவில் கலிமா வரவில்லை. ஆகவே நீங்கள் உங்கள் பிள்ளையான அல்கமாவை மன்னித்து விட்டதாகச் சொல்லுங்கள். அப்போது தான் அவர்கள் நாவில் கலிமா வரும் என் றார்கள். அத்தாயானவள் என் மகன் என்னை மிகவும் கஷ்டத்தில் ஆழ்த்திவிட்டார். ஆகவே அவரின் குற்றத்தை நான் மன்னிக்க என் மனம் இடந்தரவில்லை என்றுரைத்தாள்.

சரி, அப்படியானால் நிறைய விறகு கொண்டு வாருங்கள். அல்கமாவை இறைவன் நரகில் எரிப்பதற்கு முன்பாகவே நாம் இங்கேயே எரித்து விடுவோம் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே அம் மூதாட்டித் தாயானவள் வேண்டாம், வேண்டாம். என் மகனை என் முன்னால் எரிக்கப்படுவதை காண்பதற்கு என் மனம் சகிக்காது என் மகனை நான் மன்னித்து விடுகிறேன் என்று சொல்லி மன்னித்துவிட்டாள். பிறகு நாயகம் (ஸல்) அவர்கள் அல்கமா (ரலி) அவர்களுக்கு கலிமாச் சொல்லிக் கொடுத்தார்கள். பிறகு அவர்கள் நாவில் கலிமா சொல்ல முடிந்தது. அந்நிலையில் அவரின் உயிர் பிரிந்தது. (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்)

மேல்கண்ட அனைத்து அறிவுரைகளிலிருந்தும் பெற்றோர்களை பிள்ளைகள் கண்ணியப்படுத்துவது எவ்வளவு முக்கியம் என்பதை உணர முடிகிறது, இல்லையா? இனியாகிலும் பிள்ளைகள், பெற்றோர்கள் விஷயத்தில் ஒழுங்காக நடந்து அவர்களின் அன்பையும், அருளையும் பெற்று வாழ முற்படுவார்களாக!

## திருக்குர் ஆன் ஓதுங்கள்

திருகுர்ஆனை சுத்தமற்றோர் தொடக்கூடாது.

-அல்குர்ஆன்

திருகுர்ஆனை ஒழுங்கு முறையோடு (பிழையின்றி கண்ணியமாக) ஓதுங்கள்.

-அல்குர்ஆன்



நாயகம் (ஸல்) கூறுகிறார்கள்;

குர்ஆன் ஷரீபைத் தாமும் ஓதுவதோடு பிறருக்கும் அதனை கற்றுக் கொடுப்பவரே உங்களில் மிகவும் மேலானவராவார்.

-அல்ஹதீஸ்

இறைவனின் திருமறையில் எவர் ஓர் எழுத்தை ஓதுகின்றாரோ அவருக்கு ஒரு நன்மை உண்டு. ஒரு நன்மை என்பது பத்து நன்மைகளுக்குச் சமமாகும். ஆனால் 'அலிஃப், லாம், மீம், ஒரு எழுத்து' என்று நான் கூற வில்லை. 'அலிஃப்' ஒரு எழுத்து; 'லாம்' ஒரு எழுத்து 'மீம்' ஒரு எழுத்து; என்றுதான் கூறுகிறேன் என்று அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்.

-அல்ஹதீஸ்

துக்கங்களின் அகழிலிருந்து இறைவனிடம் பாதுகாவல் தேடுங்கள் என்று நாயகம் (ஸல்) தம் ஸஹாபாக்களிடம் கூற, அதற்கு ஸஹாபாக்கள், "யாரசூலல்லாஹ்! துக்கங்களின் அகழ் என்றால் என்ன?" எனக் கேட்டார்கள். அது நரகத்திலுள்ள ஒரு பள்ளத்தாக்கு அதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்று இதர நரகங்களும் ஆண்டவனிடம் தினந்தோறும் நூறு தடவை பாதுகாவல் தேடுகின்றன. என்று நாயகம் (ஸல்) கூற, 'அதில் எவர் போவார்கள்?' என்று கேட்டார்கள். வெளிப்பகட்டிற்காகவும், ஊரார் மெச்சுவதற்காகவும் குர்ஆனை மனப்பாடம் செய்து (பொதுமக்கள் முன்) ஒப்புவிப்போர்கள் எனக்கூறினர்.

-அல்ஹதீஸ்

குர்ஆனிலிருந்து ஒரு சிறிதும் எவருடைய வயிற்றில் (உள்ளத்தில்) மனப்பாடமாக இல்லையோ அப்படிப்பட்ட அவருடைய உடலானது காலியாகக்கிடக்கும் பாழடைந்த வீட்டைப் போலாகும்.

-ராவி: இப்னு அப்பாஸ் (ரலி)

எந்த வீட்டில் குர்ஆன் ஷரீப் ஓதப்படுகிறதோ, அங்கு பரக்கத்து உண்டாகும். குடும்பம் அபிவிருத்தியடையும், மலாயிக்கத்துமார்கள் விஜயம் செய்வார்கள். ஷைத்தான் ஓடி விடுகிறான். எவ்வீடுகளில் குர்ஆன் ஓதப்பட வில்லையோ, அங்கு பரக்கத்து எடுப்பட்டு போகும். அவ்வீட்டைவிட்டு மலாயிக்கத்து மார்கள் (வானவர்கள்) போய் விடுவார்கள். ஷைத்தான் அவ்வீடுகளில் குடி கொண்டு விடுவான் என்று நபி (ஸல்) நவின்றார்கள்.

-ராவி: அபூஹுரைரா (ரலி)

நபி (ஸல்) கூறுகிறார்கள்: ஒருவர் குர்ஆன் ஷரீபை (ஹிப்ளு செய்து) மனனம் செய்து ஓதுவதாகிறது, ஆயிரம் பங்குசிறப்புடையதாகும். குர்ஆன்பிரதியைப் பார்த்து ஓதுவதாகிறது அதைக் காட்டிலும் இருபங்கு சிறப்பானதாகும். மேலும் இரண்டாயிரும் தரஜாக்களை உயர்த்திவிடும்.

-ராவி; உஸ்மான் இப்னு அப்துல்லாஹ் (ரலி)

நான் உங்களுக்கு இரண்டு உபதேசிகளை விட்டுச் செல்கிறேன். ஒன்று பேசக் கூடியதுமான குர்ஆன் ஷரீபின் போதனையாகும். மற்றொன்று மௌனமான மரணத்தை நினைத்துப் பார்ப்பதாகும்.

-அல்ஹதீஸ்

குர்ஆனை ஓதுபவரிடம் (மறுமையில்) நீர் உலகில் எவ்வாறு குர்ஆனைநிறுத்தித் தெளிவாக ஓதி வந்தீரோ அதே போல இங்கும் ஓதிக் கொண்டு (சுவனபதியின்) படித்தரங்களில் முன்னேறிச் செல்லும. நீர் உலகத்தில் ஓதிக் கொண்டிருந்ததைப் போல நிறுத்தி நிறுத்தி நிதானமாக ஓதிக் கொண்டிருப்பீராக! இன்னும் உம்முடைய பதவியானது குர்ஆனுடைய இறுதி வசனத்திற்கேற்ப (எண்ணிக்கையிலும்) உயர்ந்து இருக்கும். என்று



சுபச்செய்தி கூறப்படும். என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இயம்பினர்.

ராவி: அப்துல்லாஹ் இப்னு அம்ருப்னுல் ஆஸ் (ரலி)

அன்பு நேயர்களே! குர்ஆன் ஓதுவதால் ஏற்படும் பலன்களைப் பற்றி ஓரளவு தெரிந்துக் கொண்டோம். ஆனால் இன்று குர்ஆன் ஓதியுள்ளோமா....? நம் பிள்ளைகள் ஓதியுள்ளனவா? அவர்களை ஓத வைக்கிறோமா! என்பதை நாம் சற்று சிந்திக்கவேண்டும். நாம் பிள்ளைகளை மத்ரஸாவிற்கு அனுப்புவதும் பூஜியமாக இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு போகவில்லையென்றால் எந்த அளவு கண்டிக்கிறோமோ, அந்த அளவிற்கு மத்ரஸாவிற்கு போக வில்லையென்றால் நாம் கண்டிப்பதில்லை. குர்ஆன் ஓதுவதால் உள்ளம் தெளிவாகிறது. ஈமான் வலுவடைகிறது. இதனால் பிள்ளைகளின் வாழ்க்கையும் நடைமுறை பழக்கவழக்கங்களும் ஒழுங்காகிறது. இதனால் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கும் ஒரு மலர்ச்சி ஏற்படுகிறது.

அந்தோ பரிதாபம்! குர்ஆன். ஓதி சிறப்பிக்க வேண்டிய இல்லங்களில், அனாச்சாரங்கள் நிறைந்த பத்திரிக்கைகளை வாங்கிப் படிக்க வகை செய்கிறோம்; இந்த அறியாமை நிலை நீங்கக் கூடாதா? நம் பிள்ளையைப் பார்த்து குர்ஆன் ஓது என்றால், குர்ஆன் ஓதத் தெரியாது. சினிமாப் பாடல் பாடவா என்று கேட்கிறது. இப்பிள்ளைகள் வளர்ந்து வரும்போது நிலைமை என்னவாகும்? இப்பிள்ளைகளால் தாய் தந்தையருக்கு ஏது நிம்மதி? இதற்குயார் காரணம் பிள்ளைகளை சிறு வயதில் சீரோடு வளர்க்காத பெற்றோர்கள் தான் காரணம் என்பதில் என்ன சந்தேகம். எவருடைய உள்ளத்தில் குர்ஆன் ஷரீபின் ஒரு பகுதிகூட (மனனமாக) இல்லாமல் போனால் அவருடைய உடலானது ஒருபாழடைந்த வீட்டைப்

போலாகும் என்று நாயகம் (ஸல்) கூறி இருப்பதை இப்போதாகிலும் சிந்தியுங்கள்.

அவர்கள் செய்து கொண்டிருந்த தீய காரியங்களினால் அவர்கள் உள்ளங்களின் மீது துருப்படிந்து விட்டது என்று இறைவன் தன் திருமறையிலும் கூறியுள்ளான். இதன் உண்மை கருத்தை ஆராய்ந்து பாருங்கள்.

எந்த வீட்டில் குர்ஆன் ஓதப்படவில்லையோ அந்த வீடு புதைக்குழிக்கு ஒப்பானதே என்ற கருத்துக் கொண்டு நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை கவனத்தில் கொள்ளுங்கள். குர்ஆன் ஓதுவதில் அக்கரை செலுத்துங்கள். தம் வீட்டிலுள்ள மனைவி மக்கள் அனைவருக்கும் குர்ஆன் ஓதும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள்.

**நபி (ஸல் அவர்கள் பேரில் ஸலவாத்து கூறுங்கள்**

நிச்சயமாக அல்லாஹுத் தஆலாவும், அவனின் அமரர்களும் நபி (ஸல்) அவர்கள் பேரில் ஸலவாத்து கூறுகிறார்கள், (ஆகவே) ஈமான் கொண்ட விசுவாசிகளே! நீங்களும் நபி (ஸல்) அவர்கள் பேரில் ஸலவாத்தும் ஸலாமும் சங்கையோடு கூறுங்கள்.

-அல்குர்ஆன்

எந்த ஒரு மனிதர் என்மீது ஸலவாத்து சொல்ல மறந்திட்டாரோ நிச்சமாக அம்மனிதர் நாளை மறுமையில் சொர்க்கத்தின் பாதையை மறந்திடுவார்.

நீங்கள் என் மீது ஸலவாத்துச் சொல்லிக் கொள்ளுங்கள். (தண்ணீர் நெருப்பை அணைப்பது போன்று) ஸலவாத்து உங்களின் பாவங்களை அழித்துவிடும்.

-அல்ஹதீஸ்

உங்களின் துஆக்களுக்கு முன்னும் பின்னும் என் மீதும், என் குடும்பத்தார்கள் மீதும் ஸலவாத்துச் சொல்லிக் கொள்ளுங்கள். உங்களின் துஆக்கள் உடன்



ஆங்கீகரிக்கப்படும். இல்லையேல் உங்கள் துஆ அங்கீகரிக்கப்படாமல் திரும்பி விடும்.

-அல்ஹதீஸ்

எவர் ஜும்ஆ உடைய தினத்தில் என்மீது நாற்பது விடுத்தம் ஸலவாத்துச் சொன்னாரோ அவரின் நாற்பது வருஷத்து பாவங்கள் அழக்கப்படும்.

எவர் என் மீது ஒரு விடுத்தம் ஸலவாத்துச் சொன்னாரோ மறுமையில் அவரின் எழுபது தேவைகளையும், உலகில் முப்பது தேவைகளையும் இறைவன் நிறைவேற்றி வைக்கிறான்.

-அல்ஹதீஸ்

எவர் என் மீது ஒரு விடுத்தம் ஸலவாத்துக் சொன்னாரோ அவரின்மீது இறைவனும், மலக்குகளும் பத்து விடுத்தம் ஸலவாத்துச் சொல்கிறார்கள்.

புத்தக ஆசிரியன், தான் எழுதும் நூலின் என் பெயர் வரும்போதெல்லாம், அத்துடன் ஸலவாத்தையும் சேர்த்து எழுதுவாராகில், என் பெயர் அந்நூலில் இருக்கும்போதெல்லாம், வானவர்கள் அந்நூலை எழுதிய ஆசிரியருக்கு சதாவும் பிழைபொறுக்க தேடியவர்களாகவே இருப்பார்கள்.

மூன்று கூட்டத்தினர் நாளை மறுமையில் என் முகத்தைக் காணமாட்டார்கள். (1) பெற்றோரை நோவினை செய்தவர்கள் (2) சுன்னத் (என்னும் என் வழி முறையை) விட்டவர்கள். (3) என் பெயரைக் கேட்டு ஸலவாத்துச் சொல்லாதவர்கள். என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒருவர் என்மீது ஸலவாத்து சொல்வாராயின் அதனை அவர் சொல்லி வாய் மூடுமுன் அது என் முன்கொண்டு வரப்படுகிறது. நான் அவருக்காக

இறைவனிடம் இறைஞ்சவும் பாவமன்னிப்புக் கோரவும் செய்கிறேன்.

-அல்ஹதீஸ்

சகோதர நேயர்களே! ஸலவாத்துச் சொல்லும் போது உள்ளத்தில் ஓர்மையும் பெருமானார் (ஸல்) அவர்களின் பேரில் அன்பும் கொள்ளவேண்டும். ஏதோ கடமைக்காக என்ற பொடுபோக்குக் கொள்வது கூடாது. அதனால் பிரயோஜனம் கிடையாது.

## எட்டுவகை சொர்க்கத்தில் எட்டுவகையினர் புகுவார்கள்

கண்ணியமிக்க பெரியோர்களே! இறைவன் மனிதனின் செயல்களனைத்தையும் உற்றுநோக்குகிறான். மனிதனின் எச்செயலும் இறைவனின் கண்காணிப்பை விட்டும் தூரமாகி விடாது. மனிதனின் வெளிக் கோலத்தை இறைவன் கவனிப்பது கிடையாது. அவனின் உள்ளத்தையே உற்று நோக்குகிறான். இதனாலேயே உள்ளத்தால் உயர்ந்தவனே உங்களில் மிகச் சிறந்தவன். என்று பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மேலும் ஒவ்வொரு செயலும் அவனின் எண்ணத்தைப் பொருத்தே சிறப்புறுகின்றது. என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இறைவன் தன் திருமறையில் நிச்சயமாக அந்தரங்க சுத்தியோடு இறைவனைப் பயந்து நடந்த நல்லடியார்களுக்கு மன்னிப்பும் உயர்ந்த கூலியும் இருக்கிறது என்று குறிப்பிடுகிறான்.

எனவே, இவைகளையெல்லாம் கவனிக்கும்போது உள்ளன்போடும், பக்தியோடும் செய்கின்ற செயல்கள் மட்டுமே இறைவனிடம் உயர்வடைகிறது. என்பது



புலனாகிறது இல்லையா? அப்படிப்பட்ட அந்த நல்ல உள்ளம் இறைவன் தங்கும் இல்லமாகும் அப்படிப்பட்ட உள்ளம் கொண்டவர்களை முஃமின் என்றும், வலியுல்லாஹ் இறைநேசர் என்றும் குறிப்பிடுகிறோம். இத்தகைய இறைநேசச் செல்வர்களக்கு எத்தகைய பயமும் திடுக்கமும் இராது என இறைவன் திருமறையில் குறிப்பிடுகிறான். நாளை மறுமையிலும் கூட அந்த நல்லடியார்கள் மிக நிம்மதியாளர்களாக இருப்பார்கள். அவர்களின் பட்டோலை வலது கையில் கொடுக்கப் படும். இதனால் அவர்கள் மகிழ்ச்சியுற்று இருப்பார்கள். இதை இறைவன் தன் திருமறையிலே மிக அழகாக குறிப்பிடுகிறான். இதோ....

எவரின் பட்டோலை வலது கையில் கொடுக்கப் பட்டதோ அவர் தனக்கு ஏற்பட்ட சந்தோஷ மிகுதியால் மற்றவர்களிடம் இதோ எனது பட்டோலையைப் படியுங்கள் என்று கூறுகிறார். நான் எனது கேள்வி கணக்கை சந்திப்பது உறுதி என்று உண்மையாகவே நம்பியிருந்தேன். (என்றும் கூறுவார்) எனவே அவர் திருப்திகரமான சுகவாழ்க்கையில் இருக்கிறார். உயர்ந்த சொர்க்கத்தில் இருக்கிறார்.

மேலும் எவர் தனது இறைவனின் திருசமுகத்தை பயந்து மனோ இச்சையைவட்டும் (தன்னைத்) தடுத்துக் கொண்டாரோ (அவர் பாக்கியசாலி) அவர் மீளும் ஸ்தலம் சொர்க்கமாயிருக்கும். -அல்குர்ஆன்

மேல்கண்ட நல்லடியார்களே ஜெயசீலர்கள். அவர்களுக்காக இறைவன் சொர்க்கத்தை உயர்ந்த கூலியாக அளிக்கிறான்.

இறைவன் சொர்க்கத்தை எட்டு வகையாகப் படைத்து அதில் எட்டு வகையினரை பிரவேசிக்கச் செய்கிறான்.

எட்டு வகை சொர்க்கங்கள்;

1. தாருல் ஜலால் 2. தாருஸ்ஸலாம் 3. ஜன்னத்துல் மஃவா, 4. ஜன்னத்துல் குல்து, 5. ஜன்னத்துன்னயீம், 6. தாருல்கரார், 7. ஜன்னத்துல்பிர்தௌஸ், 8. ஜன்னத்துல் அத்னு என்பவையாகும்.

"தாருல் ஜலால்" என்னும் சொர்க்கத்தில் நபிமார்கள், ரசூல்மார்கள், ஷுஹதாக்கள், கொடையாளிகள் முதலியோர்கள் புகுவார்கள்.

"தாருஸ்ஸலாம்" என்னும் சொர்க்கத்தில் முறைப்படி ஒளுச் செய்து பயபக்தியோடு தொழுத பக்திமான்கள் புகுவார்கள்.

"ஜன்னத்துல்மஃவா" என்னும் சொர்க்கத்தில் ஜக்காத் கொடுத்தவர்கள் புகுவார்கள்.

"ஜன்னத்துல் குல்து" என்னும் சொர்க்கத்தில் நன்மைகளை ஏவி தீமைகளை தடுக்கும் தியாகிகள் புகுவார்கள்.

"ஜன்னத்துன்னயீம்" என்னும் சொர்க்கத்தில் மனோ இச்சையை அடக்கி நேர்மையாக நடந்த ஜெயசீலர்கள் புகுவார்கள்.

"தாருல்கரார" என்னும் சொர்க்கத்தில் முறையாக ஹஜ்ஜு உம்ராச் செய்த சீதேவிகள் புகுவார்கள்.

"ஜன்னத்துல்" பிர்தௌஸ் என்னும் சொர்க்கத்தில், இஸ்லாத்திற்காக போரிட்ட அறப்போர் வீரர்கள் புகுவார்கள்.

ஜன்னத்துல் அத்னு" என்னும் சொர்க்கத்தில் இறைவனால் விலக்கப்பட்டவைகளைவிட்டும் விலகிக் கொண்டு அதைப்பற்றிக் கிஞ்சிற்றும் சிந்திக்காமல் நாயகம் (ஸல்) அவர்களின் சொல், செயல்படி நடந்த நல்லடியார்கள் புகுவார்கள்.



# ஏழுவகை நரகத்தில் ஏழுவகையினர் புகுவார்கள்

எந்த மனிதர் (இறைவனின் கட்டளைகளுக்கு) மாற்றம் செய்து உலக வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொண்டாரோ நிச்சயமாக அவர் மீளும் ஸ்தலம் நரகமாகும் என்று இறைவன் திருமறையில் குறிப்பிடுகிறான்.

மேல் குறிப்பிட்ட திருமறை வசனத்தில் உலக வாழ்க்கையைப் பற்றி இறவைன் குறிப்பிட்டுள்ளான். ஏனென்றால் உலக வாழ்க்கையின் மோகம் தான் மனிதனின் ஒவ்வொரு பாவங்களுக்கும் மூலவேராக இருக்கிறது. உலகத்தின் இன்பத்தை காட்டித்தான் ஷைத்தான் மனிதனை ஏமாற்றுகிறான். இதனாலேயே உலகத்தைத் தேர்ந்தெடுத் துக் கொண்டவர்கள் என்று இறைவன் குறிப்பிடுகிறான்."

இதே கருத்தில் தான் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் உலக வாழ்க்கையை தூண்டியில் கோர்க்கப் பட்ட இரைக்கு ஒப்பிடுகிறார்கள். தூண்டியின் இரைக்கு ஆசைப்பட்ட மீன் எப்படித் தன்னை கஷ்டத்தில் ஆழ்த்திக்கொள்கிறதோ இதே நிலைதான் உலகத்தின் மோகம் கொண்ட மனிதனின் நிலையும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

எந்த மனிதனின் உள்ளத்தில் உலக இன்பங்கள் சூழ்ந்து கொண்டதோ அம்மனிதரின் உள்ளம் ஷைத்தான் தங்கும் இல்லமாக மாறி விடுகிறது. இதனால் அம்மனிதனுக்கு ஞானப் பாதை அடைப்பட்டுவிடுகிறது. அவனின் உள்ளம் இருளடைந்து விடுகிறது.

நாளை மறுமையிலும் (மாறு செய்யும்) அவர்கள் துக்கத்தில் ஆழ்ந்து இருப்பார்கள். அவர்கள் நம்பி இருந்த

உலக செல்வங்களும் அந்தஸ்தும் தங்களை விட்டு பிரிந்துவிட்டதையும் அவைகளால் தங்களுக்கு எந்த உதவியையும் செய்ய முடியாததை நினைத்து வருந்து வார்கள். -அல்குர்ஆன்

நாளை மறுமையிலும் (மாறு செய்யும்) அவர்களைக் குருடர்களாகவும், ஊமைகளாகவும், செவிடர்களாகவும் அவர்களது முகங்களின்மீது (இழிவு சூழ்ந்த நிலையில்) அவர்களை ஒன்று கூட்டுவோம். அவர்கள் ஒதுங்கும் ஸ்தலம் நரகமாகும்.

மேலும் எவனது பட்டோலை இடது கையில் கொடுக்கப்பட்டதோ, "(அதைக்கண்டு அவன்) எனது பட்டோலையை நான் கொடுக்கப் படாமலிருந்திருக்க வேண்டுமே!" நான் கொடுக்கப் படாமலிந்திருக்க வேண்டுமே!" எனது கேள்வி கணக்கு என்ன என்பதை நான் அறியாமல் இருந்து விட்டேனே! மரணமே (எனக்கு) முடிவாக (மரணத்திற்குப்பின் எழுப்பப்படாமல்) இருந்திருக்க வேண்டுமே! எனது செல்வங்கள் எனக்கு உபயமளிக்கவில்லை(யே) எனது அதிகாரம் என்னை விட்டும் பிரிந்து விட்ட(தே) (என பிரலாபிக்கிறான்.) (இப்படி பிரலாபித்துக் கொண்டிருக்கும் அவரைப் பார்த்து இறைவன்) அவனைப் பிடியுங்கள் அவனுக்கு விலங்கிடுங்கள். பின்னர் அவனை நரகத்தில் தள்ளுங்கள். அப்பால் எழுபதுமுழ (நீள)முள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள் (என மலக்குகளுக்கு ஆணையிடுகிறான்) திட்டமாக அம்மனிதன் மகத்துவமிக்க அல்லாஹுத்தஆலாவைக்கொணடு ஈமான் கொள்ளாமலிருந்தான். (அவனின் கட்டளைகளை ஏற்று மதிக்காமல் வாழ்ந்தான்) எனக் கூறுவான். -அல்குர்ஆன்

இப்படிப்பட்ட தீய அடியார்களுக்கு இறைவன் நரகத்தை ஏழுவகையாகப் படைத்துள்ளான்:



*1. ஜஹன்னம் 2. லழா 3. சக்கர் 4. ஹுத்தமா 5. ஜஹீம் 6. சார் 7. ஹாவியா. என ஏழுவகை நரகமாகும்.*

இந்த ஏழுவகை நரகத்தில் ஏழுவகையினர் புகுவார்கள்.

*1. ஜஹன்னம்"* என்னும் நரகத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின்' உம்மத்தில் உள்ள பெரும் பாவிகள் புகுவார்கள்.

*2. லழா"* என்னும் நரகத்தில் முனாபிகீன்கள் புகுவாக்ள்

*3. சக்கா"* என்னும் நரகத்தில் யூதர்களும் நஸாராக்களும் புகுவார்கள்.

*4. ஹுத்தமா"* என்னும் நரகத்தில் (மஜூஸி நெருப்பை வணங்குகிறவர்)கள் புகுவார்கள்.

*5. ஜஹீம்"* என்னும் நரகத்தில் விக்ரக ஆராதனை புரிகிறவர்கள் புகுவார்கள்.

*6. சார்"* என்னும் நரகத்தில் யெஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் நுழைவார்கள்.

*7. ஹாவியா"* என்னும் நரகத்தில் பாவியான ஜின்களும், ஷைத்தான்களும் மற்றும் அல்லாஹ்வையும் ரசூலையும் பொய்யாக்கி திருகுர் ஆனை புறக் கணித்தவர்களும் புகுவார்கள்.

## 6 வகை தூக்கத்தின் விளைவுகள்

1. பஜ்ருக்குப் பின் தூங்குவதால் மறதி ஏற்படும்.

2. காலை 10மணிக்கு முன் தூங்குவதால் வறுமை ஏற்படும்.

3. லுஹா நேரத்திற்குப் பின்னிலிருந்து நடுபகல் வரை தூங்குவதால் செல்வம் உண்டாகும்.

4. அஸருக்குப் பின் தூங்குவதால் பைத்தியம் உண்டாகும்.

5.மஃரிபிற்குப் பின் தூங்குவதால் அழிவு குழப்பம் உண்டாகும்.

6. இஷாவிற்குப் பின் தூங்குவதால் உடல் நலம் உண்டாகும்.

## இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் அறிவுரைகளில் சில

1. நற்குணம், கொடை, பணிவு, நன்றியுடமை இவை நான்கும் மனிதத்தன்மையின் பொக்கிஷங் களாகும்.

2. இறை சிந்தனை, நேர்மை, பேணுதல், புலன் காத்தல் இவை நான்கும் மனித வாழ்வின் நிறை தன்மைகளாகும்.

3. உன்னிடம் இல்லாத நற்குணங்களை கூறி உன்னை புகழும் அன்பன் உன்மீது வெறுப்புக் கொள்ளும் போது உன்னிடம் இல்லாத குறைகளைக் மற்றவர்களிடம் கூறி உன்னைத் தூற்றுவான்.

4. இறைவன் உன்னை சுதந்திரவானாக படைத்திருக்கிறான் அது போலவே நீ வாழ முற்படு.

5. தன் நண்பனின் குறைகளைத் தனிமையில் எடுத்துச் சொல்பவன் அவனுக்கு நன்மை செய்கிறான். அவைகளை பகிரங்கப்படுத்துபவன் அவனை கேவலப்படுத்துகிறான்.



6. ஒரு அறிஞன் தன் குறைகளையே உற்று நோக்குகின்றான். பிறர் குறைகளைப் பற்றி குருடாகிவிடுகின்றான்.

7. மனிதனால் எல்லோரையும் திருப்திபடுத்த இயலாது. ஆனால் ஒரு சிறு நற்செயலைக் கொண்டும் இறைவனை திருப்திபடுத்தலாம்.

8. போதும் என்று திருப்தி கொள்பவர் மூடர் களுக்கு பணிய மாட்டார்.

9. அமானிதத்தை வலிய ஏற்க விரும்புபவன் ஒன்று மடையனாக இருக்கவேண்டும்.அல்லது திருடனாக இருக்க வேண்டும்.

10. நற்செயல், பணிவு, பேராசை கொள்ளாமை இவை மூன்றும் சிறந்த கல்வி, அறிவின் சீருடையாகும். பாவச் செயல், பொறாமை, பேராசை இவை மூன்றும் சிறுமையின் சீருடையாகும்.

## பொய் - மெய்

பொய் பேசுவதைப் பற்றி உமக்கு எச்சரிக்கின்றேன். பொய்யுரைப்பதிலேதான் உனக்கு உலகில் விடுதலை இருக்கிறது என்று நீ நினைத்தால் நிச்சயமாக அதிலே தான் உனக்கு மறுமையில் அழிவு இருக்கிறது.

மெய்யுரைப்பதை நீ பற்றிப் பிடித்துக் கொள். அதிலே உனக்கு உலகில் நாசம் இருப்பதாக கருதினாலும் நிச்சயமாக மறுமையில் அதிலே உனக்கு வெற்றி இருக்கிறது. **நபி (ஸல்) நன்மொழி**

அல்லாஹ் இரண்டு பாக்கியங்களை ஒரு மனிதனுக்குக் கொடுத்திருந்தால் அதற்காக அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றிசெலுத்தட்டும்.

1. அரசனின் வாசலுக்கு அவன் செல்லாதிருப்பது.

2. வைத்தியரின் வாசலுக்கு செல்லாதிருப்பது.

சுப்யானுஸ் ஸவ்ரீ (ரஹ்)

இதன் கருத்தாவது - பிறரிடம் தேவையாவதை தவிர்த்தல்; நோயற்ற வாழ்வுடன் இருத்தல்.

தன் வறுமையை பிறரிடம் வெளிப்படுத்தாதீர். வறுமை ஏற்பட்ட மனிதன் மக்களிடம் வெளியிட்டால் அவன் வறுமை நீங்காது. இறைவனிடம் முறையிடவும். இதனால் அவனின் வறுமையை இறைவன் நீக்கி இரணமளிக்கின்றான். இது உடனுக்குடனோ, சற்று தாமதமாகவோ நிகழலாம்.

**நபிமொழி – நூல் : திர்மிதீ**

எந்த மனிதன் ஜனங்களிடம் யாசகத்தின் வாசலை திறப்பானோ அல்லாஹ் அவன் மீது வறுமையின் வாசலை திறக்கிறான்.

**நபிமொழி :அறிவிப்பு : கப்ஷா (ரலி)**
**நூல் : திர்மிதீ**

எவர் பசியாகவோ அல்லது தேவையுடையவராக இருந்து அதை ஜனங்களிடம் கூறாமல் மறைத்திருந் தாரோ அவருக்கு அல்லாஹ் ஒரு வருடத்திற்கான ஹலாலான உணவின் வாயிலை திறந்து வைக்கிறான்.

**அறிவிப்பு : இப்னு அப்பாஸ் (ரலி)**
**நூல் : மிஷ்காத்**

எவர் அல்லாஹ்விடம் போதுமென்ற சீமான் தனத்தை வேண்டுகிறாரோ அவருக்கு அல்லாஹ் போதுமென்ற மன நிறைவை தருகின்றான். மேலும், எவர் அல்லாஹ்விடம் பத்தினி தனத்தை கேட்ப்பாரோ அவ்ருக்கு பத்தினி தனத்தையும் அளிக்கிறான். இன்னும் மேலுள்ள கை கீழுள்ள கையை விட மேலானதாகவும் இருக்கிறது. யாசகத்தின் வாயிலை திறந்த ஒருவரின் மீது அல்லாஹ் வறுமையின் வாயிலை திறக்காமலி ருப்பதில்லை. என நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.



ஒரு சமயம் ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் அரபா மைதானத்தில் மக்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவரின் குரலைக் கேட்டு தனது சாட்டையால் அவரை அடித்து இத்தகைய பாக்கியமான நாளில் இந்த புனிதமான இடத்தில் அல்லாஹ் அல்லாதவர்களிடமா யாசிக்கின்றாய்! என்று அம்மனிதரை கண்டித்தார்கள்.

எம்மனிதர் அல்லாஹ்வின் பொருத்தம் நாடி கொடையின் வாயிலை திறப்பாரோ அல்லாஹ் அவர் மீது இம்மை, மறுமை இரண்டின் வாயிலையும் திறக்கிறான் எனவும் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

விறகுக்கட்டை முதுகில் சுமந்து வந்து விற்று அதைக் கொண்டு பிழைப்பு நடத்துவது பிச்சை கேட்ப்பதை விட சாலச்சிறந்தது. அந்த பிச்சையோ கிடைக்கவும் செய்யலாம். கிடைக்காமலும் போகலாம். எனவும் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

நீங்கள் என்னை நம்புங்கள். நான் உங்களின் தேவைகளுக்கு பொறுப்பாளனாக ஆகிவிடுகின்றேன். என்னை அல்லாத வேறு யாரையும் உங்களின் பொறுப்பாளனாக ஆக்காதீர்கள் இவ்வாறு நீங்கள் செய்தால் நான் உங்களை கைவிட மாட்டேன். என்று அல்லாஹ் நபி ஈஸா (அலை) அவர்களுக்கு வஹி அறிவித்ததாக ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கின்றார்கள்.